கல்கி

LKI 20 6-82 ரு.1 20




டெபாசிட்தாரர்களுக்கு
அன்பளிப்பு!
வெள்ளிக்குத்து விளக்கு
ஒவ்வொரு ரூ. 5000/-ம் டெபாசிட்டுக்கும்
தங்கள் முதலீட்டிற்கு இதோ ஒரு பொன்னான வாய்ப்பு...
"சுபிட்சத்திற்கு வழிகாட்டி சுமங்கலி"
பெறுவீர் ரூ.10,000/- 48 மாதங்களில்
"சுமங்கலி டெபாசிட் திட்டத்தில்"
தங்கள் முதலீடு ரூ.5000/- இரட்டிப்பாகிறது
கவர்ச்சிகரமான மாதாந்திர வட்டி வழங்கும்
விகிதங்களில் பிக்சட் டெபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
ஒரு வருடம்
16%
இரண்டு வருடங்கள்
17%
மூன்று வருடங்கள்
18%
குறைந்த டெபாசிட் ரூ.1000/- ஏற்றுக் கொள்ளப்படும்
ஜெயசக்தி பைனான்சியர்ஸ்
(HIRE PURCHASE FINANCIERS)
39, நடேச ஐயர் தெரு (2வது மாடி)
(சிவா விஷ்ணு கோவில் அருகில்)
உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை-600 017.
போன்: 447186
24/1-A, மார்கோசா ரோடு (10வது கிராஸ்) மல்லேஸ்வரம்.
பெங்களூர்-560 003 போன்: 24795
எண்: 2 & 3, முதல் மாடி,
தஞ்சாவூர் போன்: 1626
14/A, ஆனைக்கட்டி தெரு, திருவண்ணாமலை-606 601
போன்: 483
9-A, தலையாரி தெரு, பட்டுக்கோட்டை, போன்: 453
C.A. BALOO
Managing Partner
CHARL

குழந்தைக்கு மிகவும் சிறந்தது தாய்ப்பால்.

நீங்கள் புட்டிப்பால் கொடுக்கும் அவசியம் நேரும்போது <u>கவனமாய்</u> இருங்கள்.

கீழ்க்காணும் 5 முக்கியமான குறிப்புகளைப் பின்பற்றுங்கள்...

1. தொற்று கிருமிகளைத் தவிர்த்திடும் வகையில் பீடிங் பாட்டில், நிப்பிள், மற்றய பாத்திரங்கள் ஆகியவற்றை நன்கு சுத்தம் செய்து நீரிலிட்டுக் கொதிக்கச் செய்யவும். இல்லையெனில் பாலில் எளிதில் கிருமிகள் தோன்றிவிடும்.

2. நீரை பத்து நிமிடம் கொதிக்க வைத்து, உடல் வெப்பத்தைவிட சிறிது அதிகமாகவே ஆற வைத்த பின் பால் பவுடரைக் கலக்கவும்.

3. அதிக நீரை கலந்திடாதீர்கள், அதனால் சத்து குறைந்து விடலாம். டின்னின் மேல் கொடுத்துள்ள பால் புகட்டும் அட்டவணையைப் பின்பற்றவும்.

4. ஒவ்வொரு முறையும் குழந்தைக்குப் புதிதாக பாலைத் தயாரிக்கவும். மீந்துவிட்ட பாலை குழந்தைக்கு கொடுக்காதீர்கள், அதில் கிருமிகள் தோன்றி கெட்டுவிடுகிறது.

5. டின்னின் மேல் கொடுத்துள்ள எல்லா விதிமுறைகளையும் பின்பற்றவும். ஏதாவது சந்தேகம் இருப்பின் டாக்டரிடம் ஆலோசனை கேட்கவும்.

வாங்குவீர் க்ளாக்ஸோ சன்ஷைன்—நம்பகமான குழந்தைப் பாலுணவு

க்ளாக்ஸோ சன்ஷைன் சரிவிகித ரீதியில் சரியான அளவு புரதம், கொழுப்பு, கார்போஹைட்ரேட், வைட்டமின்கள், தாதுப்பொருட்கள், இரும்புச்சத்து போன்றவற்றைக் கொண்டது. இது சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டு, டின்னில் அடைக்கப் படுகிறது. குறிப்பாக குழந்தைகளின் இளம் ஜீரண சக்திக்கு ஏற்றது.



க்ளாக்ஸோ

—தாய்மார்களின் நம்பிக்கைக்குரியது.

CASGLS–18–203 TAM

✠ கே. எஸ். சுப்பிரமணி, சென்னை-1

? **கவியரசு கண்ணதாசன் பற்றிய இனிய நினைவு ஏதும் உண்டா?**

! மனவாசம் எழுதிவந்த நேரத்தில் ஒரு முன்னாள் முதல்வரை நேர்மையற்றவர் என உணர்த்தும் ஒரு சம்பவத்தை எழுதியிருந்தார். புரூப் பார்க்கிற நேரத்தில் எடுத்து விட்டேன். அடுத்த வாரக் கட்டுரைப் பகுதி உரிய நேரத்தில் வரவில்லை. கண்ணப்பனுக்கு ஃபோன் செய்தேன். 'நேரில் வருதல் நலம்' என்றார். புரிந்து கொண்டேன். சென்று பேசினேன். ''கொள்கை மாறுபாடுகளைக் காரசாரமாக எழுதுங்கள்; கல்கி பத்திரிகையின் கருத்துடன் ஒத்துப் போகாவிட்டாலும் பாதகமில்லை; பிரசுரிக்கலாம். ஆனால் தனிப்பட்ட முறையில் ஒருவரைத் தாக்கும்போது சான்று காட்டினால் மட்டுமே பிரசுரிக்க இயலும். யாரிடமும் நாம் பயப்பட வேண்டியதில்லை. ஆனால் பத்திரிகை தர்மத்துக்கு அஞ்சத்தான் வேண்டும்'' என்றேன். ''அடுத்த கட்டுரை இரவு எழுதி காலை அனுப்புகிறேன்'' என்று வேறு விஷயங்கள் பேசினார். பெரிய வாக்கு வாதத்தை எதிர்பார்த்துச் சென்ற எனக்கு ஏமாற்றமளித்து இமயமாக உயர்ந்தார்.

✠ கே. என். செல்வரத்தினம், வடகாடு.

? **எந்த விஷயத்தில் எந்நாட்டவரும் இந்தியாவுடன் போட்டிபோட முடியாது?**

! கிளார்க் வங்கியில் பியூன்கள்நாலுவகை. ஃபைல்களை எடுத்து வருபவர்; அடுக்கி வைப்பவர், தூசி தட்டுபவர், பளு நகர்த்துபவர். சம்பளத்தில் வித்தியாசம் கிடையாது. ஆனால் ஒருவர் லீவு போட்டால் இன்னொருவர் வெட்டிப் போது போக்கினாலும் போக்குவாரே யொழிய அவர் காரியத்தை இவர் செய்ய மாட்டார். இப்படி போதிய . வேலை இல்லாமலேயே பலரக அரசாங்க ஊழியர்களை வளர்த்துக் கொண்டே போவதில் இந்தியாவுக்கு நிகர் இந்தியா தான்.

✠ ஆர். ஞானகிராமன், விஜயபுரம்.

? **சாவியின் ஐம்பதாண்டு எழுத்துச் சேவை பற்றி....?**

! இந்த வாரம் இதே கேள்வியை ஐம்பது பேர் கேட்டிருக்கிறார்கள் என்பதிலிருந்தே தெரியவில்லையா அவர் சேவை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததென்று? இறைமையின் இறவுகோல் அவர். நகைச் சுவையை முதல் சுவையாக்கியவர். அஞ்சா நெஞ்சினர். பழகுதற்கு எளியவர். தார்மீகக் கோபம் உட்பட பண்புகள் அனைத்தையும் 'கல்கி'யிடம் பயின்றவர். இன்று சாவியில் அவ்வப்போது சில பக்கங்கள் சாவியாகப் போனாலும் பொதுவாக நோக்குமிடத்து அமோக விளைச்சல்.

✠ ரி. கணேசன், காரைக்கால்.

? **இன்று நாட்டில் நடைபெறும் பல அவலங்களுக்கு அடிப்படைக் காரணம் சுயநலமிக்க நடுத்தர வர்க்கம்தான் என்பது என் கருத்து. ஏற்றுக் கொள்வீர்களா?**

! மாட்டேன்! மாறாக இன்று சுயநலமிகளின் அவல ஆட்சியில் நலிவது நடுத்தர வர்க்கம் என்பேன்.

✠ வி. ராமநாதன், பம்பாய்-81.

? **Fist of Fury பார்த்திருக்களா?**

! பார்த்தேன். ஒரு புருஸ்லீ இல்லையே, 'கிரைம் கேபிடல்' என்று புகழ் பெற்றுள்ள இந்தியாவின் தலைநகரைச் சீர்படுத்த என்று ஏங்கினேன். 1981ல் புதுடில்லியில் நடந்த குற்றங்கள் 36,646! திருட்டு, வழிப்பறி, கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கடத்தல் போன்றவை நடக்காத நாள் கிடையாது. போலீஸின் துப்பறியும் திறன் ஏறத் தாழ பூஜ்யம். எனவே குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டனை பெறும் விகிதம் மிகக் குறைவு.

✠ பி. எல். பரமசிவம், மதுரை-1

? **ஒரு மனிதனுக்கு நல்ல மனைவி அமைந்து விட்டால் எல்லாமே கிடைத்த மாதிரி என்று பெரியவர்கள் கூறுகிறார்களே உங்கள் அனுபவம் எப்படி?**

! 'எல்லாமே கிடைத்த மாதிரி அனுபவம் தான்' என்பதைத் தவிர வேறு பதிலை நீர் எதிர்பார்த்தால் உமக்கு அனுபவம் போதாது!

✠ வெங்கட் பாலசந்திரன், கல்கத்தா-26.

? **சோ திறமை போல் வேறு எந்த இளைஞரிடமாவது இன்று காண்கிறீரா?**

! இப்படி ஒப்பு நோக்குவதே எனக்குப் பிடிப்பதில்லை. சோ போல ஒரு நகைச் சுவையாளரோ, கல்கி போல ஓர் எழுத்தாளரோ, ராஜாஜி போல ஒரு ராஜதந்திரியோ, எம். எஸ். போல ஒரு பாடகியோ, சிவாஜி போல ஒரு நடிகரோ இருந்து விட்டால் இவர்களுக்கெல்லாம் என்ன பெருமை?

✠ பி. வசந்தா பார்த்தசாரதி. சென்னை-88.

? **அரசியல் ஸ்டண்ட் தற்போது எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?**

! ஜெயலலிதாவுக்கும் பதவிக்கும் இடையில் எவ்வளவு தூரம் இருக்கிறதோ அவ்வளவு தூரத்தில் இருக்கிறது.

நீங்கள் கேட்டவை

✖ எஸ். தாமரைமணாளன், மூலேக்கரைப்பட்டி.
? ஆயா ராம் காயா ராம் என்றால் என்ன?
! இன்று ஒரு கட்சியிலிருந்து நாளை ஒரு கட்சிக்குத் தாவுகிற பச்சோந்திகளைக் குறிப்பிடுகிறது. வருவதும் போவதுமாய் இருக்கிறார்கள் என்ற அர்த்தத்தில் அரியானாவில் தோன்றிய சொற்றொடர்.

✖ பி. கே. சங்கர் கல்கத்தா-26.
? சுயநலமில்லாத சமூக சேவை இல்லை என நான் எண்ணுகிறேன். சரியா?
! எல்லாரையும் ஒட்டு மொத்தமாய் ஒரே மாதிரி எடை போட்டு விட வேண்டாம். விகவ ஹிந்து பரிஷத் வெள்ளோட்டம் செய்துள்ள ''ஞானரதம்'' சிறந்த பொது நல முயற்சி. பக்தி உணர்வூட்டி நன்நெறிகளை வளர்க்கும்பணி ஒரு புறமிருக்க ஞானரதத்தில் உள்ள முருகனை மக்களில் யார் விரும்பினாலும் நெருங்கி வந்து அபிஷேக ஆராதனை செய்யலாம் என்பது அற்புதமான திட்டம். அதற்கு இடையூறு நேர்ந்தது வருந்தத்தக்கது.

✖ ஆனைக்கூத்தன், பழவந்தாங்கல்.
? காதலன் தன் காதலிக்குப் பொது இடத்தில் முத்தம் கொடுத்ததால் அவனுக்கு 42 மாதம் சிறையாமே?
! ஆயுள் முழுவதும் அவளிடம் சிறைப்படுவதற்குப் பதில் இது எவ்வளவோ மேல் என்று அந்த நீதிபதி நினைத்தாரோ என்னவோ?

✖ ந. இராமசாமி, குறிக்காரன் வலசு.
? அமரர் கல்கி காலத்தில் சினிமாவைத் தொடாத கல்கி (என் ஆசிரியர் சொன்னது) இப்போது சினிமாவுக்கு நாலு பக்கங்கள் ஒதுக்குவது ஏன்?
! உங்கள் ஆசிரியர் சொன்னது தப்பு சார், தப்பு. அமரர் கல்கி ஆசிரியராய் இருந்த காலத்தில் நாலு அல்ல, எட்டு, பத்து பக்கங்கள்கூட சினிமாவுக்கென்று ஒதுக்கியிருக்கிறார். சினிமாவின் விரோதியல்ல அவர். பத்திரிகையில் அவர் தவிர்த்தது ஆபாசம், ஜோசியம், கூப்பனுக்குக் கட்டணம் வசூலிக்கின்ற போட்டிகள் போன்றவற்றையே.

✖ ஆர். மார்க்கண்டன், நெய்வேலி.
? தேசியமயமாக்கும் வேகம் ஆரம்பத்தில் அதிகமாயிருந்தது இப்போது இல்லையே, என்ன காரணம்?
தேசிய மயமான நிறுவனங்கள் ஆமை வேகத்தில் முன்னேற்றம் காண்பதால் தான். இன்று வேகம் பெற வேண்டிய கொள்கை நேர் மாறானது. அதாவது அரசுத் துறை நிறுவனங்கள் முதலீட்டின் பெரும் பகுதியை மக்களுக்கு ஷேர்களாக விற்க முன்வரவேண்டும். மக்கள் இவ்வாறு நேரடிப் பங்குதாரர்களானால் தட்டிக் கேட்கப்பலர்தோன்றுவார்கள். நிர்வாகத்தில் பயம் இருக்கும். நோயுற்றுள்ள பல நிறுவனங்கள் ஆரோக்கியம் பெறும்.



✖ ஆர். ராமகிருஷ்ணன் சென்னை-62
? சமீபத்தில் தபால் கட்டண உயர்வில் தபால் கார்டு விலை மட்டும் உயராதது தனி சிறப்புத் தானே?
! அதற்காக, 'காற்று அடிப்பதால்மின்விசிறி சுழல்கிறதா? மின்விசிறி சுழல் வதால் காற்று அடிக்கிறதா?' என்பது போன்ற கேள்விகளைத் தபால் கார்டில் எழுதி அனுப்பிஅறுக்க வேண்டுமா?



✖ பி. கே. சங்கர், கல்கத்தா-26.
? திறமைக்கும் ஆற்றலுக்கும் பாலமாகஅதிர்ஷ்டம் அமையாவிட்டால்வெற்றி பெறுவது சாத்தியமா?
! விளம்பரத் துறையில் பத்தே ஆண்டுகளில் பெரு வெற்றிபெற்று, ஆண்டொன்றுக்குஒரு கோடிக்கு மேல் பில் போடும் அளவுக்கு வளர்ந்துள்ள 'ஆட்வேவ்' கோபு, 'அதிர்ஷ்டத்துக்கும் ஆற்றலுக்கும் பாலமாக அமைய வேண்டியது உழைப்பு' என்று தங்கள் கருத்தைத் திருத்தி அமைப்பார்.



பரிசு பெறுபவர்:

ஆர். மார்க்கண்டன்,
கூட்ஸ் ஷெட்,
நெய்வேலி ரெயில்வே நிலையம்,
நெய்வேலி-2.



தராசு





ஜனாதிபதி ரப்பர் ஸ்டாம்ப் அல்ல!



⌘ ராஜேந்திரபிரசாத் ⌘ ராதாகிருஷ்ணன் ⌘ கிரி

"ஜனாதிபதி மாளிகையில் என்னுடைய நாட்கள் எண்ணப்படுகின்றன. இந்த மாளிகையில் வசிப்பது ஒரு குற்றவாளிக்குக் கொடுக்கும் சாதாரண சிறைவாசம் போன்றதுதான்." — இந்த வார்த்தைகள் வெளி வந்தது தற்போது ஜனாதிபதியாக இருக்கும் சஞ்சீவ ரெட்டியின் வாயிலிருந்துதான். சுதந்திர இந்தியாவில் வேறு எந்த ஜனாதிபதியும் உண்டாக்காத பரபரப்பையும் மரபுக்கு மீறிய பேச்சுக்களையும் பேசியவர் சஞ்சீவ ரெட்டி. உதாரணத்துக்கு மேலும் சில:

"ஒருசில பணக்காரர்கள் சொல்படிதான் இந்தியாவில் ஆட்சி நடக்கிறது. அவர்களுக்கு ஒரு பாடம் கற்பித்து ஆகவேண்டும்."

"இப்போதெல்லாம் முதலமைச்சர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை; நியமிக்கப்படுகிறார்கள்."

"அரசியலில் இல்லாத பல்வேறு துறைகளைச் சார்ந்த நிபுணர்கள்பிரதமருக்குஆலோசகர்களாக இருந்து அவர்தவறுகச் செயல்படும்போது சுட்டிக் காட்ட வேண்டும்."

இப்படி யெல்லாம் பேசும் ஜனாதிபதியைப் பிரதமருக்குப் பிடிக்கவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். அவரைப் பதவி நீக்கம்செய்ய யோசிக்கலாம் அல்லவா. ஆனால் அது அவ்வளவு சுலபமில்லை. அரசியல் சட்டப்படி ஜனாதிபதியை நீக்க வேண்டுமென்றால், பாராளு மன்றத்தின் இரண்டு சபைகளில் ஏதாவது ஒரு சபையின் கால் பகுதி உறுப்பினர்கள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். 14 நாட்களுக்குப் பிறகு மற்றொரு சபை ஜனாதிபதியின் மீதுள்ள குற்றச் சாட்டை விசாரிக்கும். அப்படி விசாரிக்கும் சபையில் முன்னர் ஜனாதிபதி விளக்கம் அளிக்க வாய்ப்பு உண்டு. விசாரிக்கும் இன்னொரு சபை அரசியல் சட்டப்படி குற்றம் புரிந்திருக்கிறார் ஜனாதிபதி என்று தீர்ப்பளித்தால எந்த சபையில் நோட்டீஸ் கொடுக்கப்பட்டதோ அந்தச் சபையின் மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு எதிராக ஓட்டுப் போட்டால் ஜனாதிபதி விலக்கப்படுவார்.

இந்தியாவில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் பொறுப்புகள் பற்றிய சந்தேகம் இரண்டு முறை ஜனாதிபதியாக இருந்தவரும் அரசியல் நிர்ணய சபை உறுப்பினராக விளங்கியவருமான டாக்டர் ராஜேந்திர பிரசாத்துக்கே வந்து விட்டது. அரசியல் சட்டத்தில் விடுபட்டுப் போன வையங்களை விசாரிக்கக் கமிட்டி ஒன்றை அமைத்தார். ஆனால் அப்போது பிரதமராக இருந்த நேரு, ஜனாதிபதி என்பவர், இங்கிலாந்து அரசர் மாதிரிதான் என்றும், அரசியல் ரீதியாகக் குறுக்கிட ஜனாதிபதி விரும்பக் கூடாது என்றும் கூறி, அந்தக் கமிட்டியைப் புறக்கணித்துவிட்டார்.

அப்படியானால் ஜனாதிபதி என்பவர் அரசு எடுக்கும் தவறான நடவடிக்கைகளைப் பார்த்துக்கொண்டுசும்மாஇருக்கவேண்டுமா? அவருடைய எண்ணத்தை வெளியிடவே கூடாதா? செய்யலாம். ஆனால் அதை வெளிப்படையாகச் செய்யக் கூடாது. இந்து சட்ட மசோதா வந்தபோது ராஜேந்திர பிரசாத் தமது அதிருப்தியைவெளிப்படுத்தினார். 1962ல் இந்தியாவின் சீனக் கொள்கையைச் சாடினார் டாக்டர் ராதாகிருஷ்ணன். ஜனாதிபதி ஒரு "ரப்பர் ஸ்டாம்ப்" என்ற புகழ் பரவக் காரணமாக இருந்த வி. வி. கிரி கூட 1974ல் ரயில்வே வேலைநிறுத்தத்தின்போது அரசு எடுத்த நடவடிக்கைகளைக் கண்டித்தார். 1975ல் எமர்ஜென்ஸியின்போது மனச் சாட்சி



✖ பக்ருதீன் அலி அகமத் ✖ ஜாட்டி ✖ சஞ்சீவ ரெட்டி

யின்பால் கந்தப்பட்டுத்தத்தளித்தார் பக்ருதீன் அலி அகமது. கிடைக்கப்படாத அவரது டைரி கிடைத்தால் மனக் கொந்தளிப்பு வெளிப்பட்டிருக்கும்.

அரசியல் சட்டத்தின் 75(1)ம் பிரிவின்படி பிரதமரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கிறது. நியமிக்கும் அதிகாரம் பெற்றிருக்கும் ஜனாதிபதி, பிரதமரை நீக்க முடியாதா? முடியும் என்கிறது மெயின் ஸ்ட்ரீம் பத்திரிகை. "பிரதமரின் யோசனைப்படி அமைச்சர்களை ஜனாதிபதி நியமிக்கவேண்டும். ஆனால் பிரதமரை நியமிப்பது ஜனாதிபதியே. பிரதமரையோ மற்ற மந்திரிகளையோ அவர் நியமிக்கும்போது அவர் கவனத்தில் கொள்ளவேண்டிய விஷயம் நாடாளுமன்றத்தில் அவர்களுக்குப் பெரும்பான்மை பலம் இருக்கிறதா என்பது தான். ஆனால் அமைச்சரவை நாடாளுமன்றம் கூடாமலே ஆறு மாதம் ஆட்சி நடத்தமுடியும். எனவே இந்த இடைக்காலத்தில் ஒரு பிரதமரை நீக்கிவிட்டு வேறு ஒருவரைப் பிரதமராக்குவது ஜனாதிபதிக்குச் சாத்தியமே. இவ்விதம் பிரதமர் மாறினாலும் அதைத் தொடர்ந்து அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பின் கீழ்தான் ஜனாதிபதி செயல் படவேண்டும். அரசியல் சட்டத்தை உருவாக்கிய மேதைகள், மத்தியில் ஜனாதிபதி ஆட்சி முறை உருவாக முடியாத நிலைமையைத்தான் வைத்திருக்கிறார்கள்.

ஒரு மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது போன்ற காரணங்களைச் சொல்லி 356வது பிரிவின் கீழ் மாநிலங்களின் ஆட்சியைக்கலைத்து அதை நிர்வகிக்கும் பொறுப்பை வகிக்கும் ஜனாதிபதி அரசியல் சட்டம் 53வது பிரிவின் கீழ் இந்தியாவில் எல்லாப் பகுதிகளிலும் அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்து நாட்டைத் தான் நேரிடையாகவோ, அல்லது அவரது பிரதிநிதிகள் மூலமாகவோ ஆள முடியுமா? முடியாது. காரணம் 74வது பிரிவின் கீழ் பிரதமர் தலைமையில் உள்ள மந்திரி சபையின் ஆலோசனைக்கு ஏற்பத் தான் செயல்பட வேண்டும்.

அரசியல் சட்டம் 42வது திருத்தத்திற்குப் பிறகு ஜனாதிபதியின் அதிகாரங்கள் முறைப்படுத்தப்பட்டு, அவரது செயல்கள் பிரதமரின் தலைமையில் உள்ள மந்திரி சபையின் ஆலோசனைக்கு ஏற்பத்தான் இருக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டது. இந்திரா பிரதமராக இருந்தபோது நிறைவேறிய இந்தத் திருத்தம் ஜனாதிபதிக்கு, தனது எண்ணத்தை வெளியிட வாய்ப்புத் தராமல் இருக்கிறது; ஆகவே இது ஜனநாயகத்துக்கு ஏற்ற

இந்திய ஜனாதிபதிக்கு வருடம் ஒன்றுக்கு ரூ.75 லட்சம் செலவாகிறது. ராஷ்டிரபதி மாளிகையில் 340 அறைகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 3000 பேர்கள் வேலை செய்கிறார்கள். இந்தியாவின் எந்த இடத்துக்கும் செல்ல ராணுவ விமானம் ஒன்று எப்போதும் தயாராகக் காத்துக் கொண்டே இருக்கும். இது தவிர, அவர் பதவியில் இருக்கும்போது, மருத்துவ வசதிகள் இலவசம். அவருக்குக் கொடுக்கப்படும் பரிசுப்பொருட்களைப் பதவியில் இருந்து விலகும்போது கொண்டு சென்றுவிடலாம்.

தல்ல என்று 42வது திருத்தத்திற்கு மேலும் ஒரு திருத்தமாக 44வது திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள் ஜனதா ஆட்சியாளர்கள். அதன்படி எந்த ஒரு மசோதாவை ஜனாதிபதியின் ஒப்புதலுக்கு அனுப்பினாலும் அவர் அந்த மசோதாவின் நோக்கங்கள் தனக்குப் பிடிக்கவில்லை என்றால் மீண்டும் பிரதமருக்கு அனுப்பிப் பரிசீலிக்கச் செய்யலாம். ஆனால் மீண்டும் அதே மசோதா எந்தவித மாற்றங்கள் இல்லாமல் வந்தாலும் ஜனாதிபதி அதில் கையெழுத்திட்டே ஆக வேண்டும். இந்த 44வது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதிக்கு தனது எண்ணத்தை வெளியிடச் சந்தர்ப்பம் தரப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி எதேச்சாதிகாரமாக நடந்து கொண்டது 1979 ஜனதா பிளவின்போது தான். இப்போது பஜன்லாலுக்கு மரபை மீறி முதல்வர் பதவியைக் கொடுத்து விட்டார் கவர்னர் என்று குதிக்கும் சஞ்சீவ ரெட்டி அப்போது செய்ததுஎன்ன? ''அவ்வளவு பெரிய பதவியின்மதிப்பையேகுறைத்து விட்டார் சஞ்சீவ ரெட்டி'' என்றார் மொரார்ஜி தேசாய். ஜெகஜீவன் ராமுக்கும் மொரார்ஜி தேசாய்க்கும் மெஜாரிட்டி பலத்தை நிரூபிக்கப் போதிய அவகாசம் கொடுக்காமல் அவசரமாக மைனாரிட்டி பலத்தைப் பெற்ற சரண் சிங்கை மந்திரி சபை அமைக்கும்படி கேட்டுக் கொண்டது. ஜனதா ஆதரவாளர்களுக்கு ஆத்திரத்தைக் கிளப்பியது. சுப்பிரமணியசாமி போன்றவர்கள் ஜனாதிபதியைக் குற்றம் சாட்டி, பாராளுமன்றத்தின் முன் நிறுத்தியே ஆக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார்கள். இத்தனைக்கும் 1969ல் பிடிக்க முடியாத ஜனாதிபதி பதவியை 1978ல் வாங்கித் தந்தது மொரார்ஜி தேசாய் போன்ற பழைய காங்கிரஸ்காரர்கள்தாம்.

யாருடைய உதவியால் பதவிக்கு வந்தாரோ அவர்களுக்கு வித்தை காட்டும் வேலையை நன்கு செய்தார் சஞ்சீவ ரெட்டி. பல்வேறு சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி படிக்க வேண்டுமென்று மந்திரி சபையால் தயாரிக்கப்பட்டிருந்த உரையிலிருந்து தானே சொந்தமாகவும் சேர்த்துப் படித்து, ஜனதா தலைவர்களுக்கு எரிச்சலூட்டியவர் சஞ்சீவ ரெட்டி. ஒரு ஜனாதிபதி இவ்வாறு செய்யலாமா – கூடாதா? செய்யலாம் என்கிறார் சென்னையைச் சேர்ந்த பிரபல வழக்கறிஞர்.

1977ல் ஜனதா பதவிக்கு வந்தபோது தாற்காலிக ஜனாதிபதியாகஇருந்தவர் ஜாட்டி. பாராளுமன்றத்தில் பெரும் மெஜாரிட்டியுடன் ஜனதா பதவிக்கு வந்தவுடன் ஏற்

ஜனாதிபதி எவ்வாறு

இந்தியாவில் ஜனாதிபதியை நேரிடையாக மக்கள் தேர்ந்தெடுப்பதில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் மாநிலங்களில் உள்ள சட்ட மன்ற உறுப்பினர்கள் வோட்டுப்-போட்டுத்தான் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கிறார்கள். மக்கள் தொகையின் எண்ணிக்கைக்கு ஏற்பச் சரியான ஒரு விகிதாச்சார பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதற்காக ஒரு சட்ட மன்ற உறுப்பினரின் ஓட்டின் மதிப்பு கீழ்க்கண்ட முறைப்படி உயருகிறது.

$$\frac{\text{மாநிலத்தின் மொத்த ஜனத்தொகை}}{\text{மொத்த சட்ட மன்ற உறுப்பினர்கள்}} \div 1000$$

உதாரணமாக, தமிழக ஜனத் தொகை ஒரு கோடி என்று வைத்துக் கொள்ளுங்கள். மொத்தம் 100 சட்ட மன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளவும்.

$$\frac{1,00,00,000}{100} = 1,00,000$$

$$\frac{1,00,000}{1000} = 100$$

ஆக ஒரு சட்ட மன்ற உறுப்பினரின் ஓட்டின் மதிப்பு நூறு.

பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் இருக்கின்ற உறுப்பினர்களின் ஓட்டும் அந்த மாநில மக்களின் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறைக்கு ஏற்ப நிர்ணயிக்கப்படுகிறது. தமிழக பாராளுமன்ற உறுப்பினர், ஒருவரின்வோட்டைக்கீழ்க்கண்டமுறையில் கண்டு பிடிக்கலாம். மொத்த பாராளுமன்ற உறுப்பினர்கள் 800 என்று வைத்துக்

கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சி புரிந்து கொண்டிருந்த ஒன்பது காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் ஆட்சியைக் கலைக்கும்படி மந்திரி சபையால் கேட்டுக் கொள்ளப்பட்டார். ஆனால் ஜாட்டி அவ்வளவு சுலபமாக அதற்கு இணங்கவில்லை. சுப்ரீம் கோர்ட்டைக் கலந்தாலோசித்தார். பிறகுதான் கலைக்க உத்தரவிட்டார். இதன் மூலம் பிரதமரின் கோரிக்கைக்கு இணங்கிய நிர்ப்பந்தத்தில் இருந்தபோதிலும்தமதுஅதிருப்தியை வெளிக் காட்டிக் கொண்டார்.

இதே முன் மாதிரியைப் பின்பற்றி, காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தவுடன் பத்து மாநிலங்களில் மாற்றுக் கட்சி ஆட்சியைக் கலைத்தது.

ஜனாதிபதிக்கு இருக்கும் மற்றொரு அதிகாரம் தூக்குத் தண்டனை பெற்ற கைதிகளைக் கருணை காட்டித் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக்குவது. கீழ்க் கோர்ட்டிலிருந்து சுப்ரீம் கோர்ட்வரை பல கோர்ட்டுகளில் ஒரு குற்றவாளியின் தண்டனை ஊர்ஜிதம் செய்யப்படுகிறது. ஆனால் கடைசியில் தனி மனிதரான ஜனாதிபதியின் கருணையால் தண்டனை குறைக்கப்படுகிறது. அப்படியானால் கோர்ட்டுகளுக்கு என்ன மரியாதை? என்ற கேள்வி எழுகிறது.

''ஏற்கெனவே டாக்டர் ராஜேந்திர பிரசாத் செய்தது போல ஒரு கமிட்டியை நியமித்து, ஜனாதிபதியின்அதிகாரங்கள்என்ன என்பதைத் தீர்மானிக்கும் காலம் வந்துவிட்டது. காலத்துக்கு ஏற்றவாறு மாறும் அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப ஜனாதிபதி எவ்வாறு செயல்பட வேண்டும்., அரசியல் சட்டத்துக்கு உட்பட்டு எந்த வகையில் ஒரு நல்ல அரசாங்கம் தொடர்ந்து நடக்க உதவ வேண்டும், ஜனாதிபதியின் உரிமைகள் என்ன, பிரதமருக்கும் அவருக்கும் தொடர்பு எப்படி இருக்க வேண்டும் என்பது போன்ற விஷயங்களை அந்தக் கமிட்டி விவாதித்து அரசியல் சட்டத்தில் சில மாறுதல்களைச் செய்யலாம்'' என்று யோசனை தெரிவித்தார் பிரபல சட்ட நிபுணர் ஒருவர்.

இந்தியாவின் ஏழாவது ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க இன்னும் சில நாட்களே உள்ளன. உதவி ஜனாதிபதி ஹிதயத்துல்லா, ராணுவ மந்திரி வெங்கட்ராமன், முன்னாள் மந்திரி சர்தார் ஸ்வரண் சிங், பழைய உதவி ஜனாதிபதி ஜாட்டி, பழைய மந்திரி சுப்பிரமணியம் ஆகியோரது பெயர்கள் பலமாக அடிபட்டாலும்ஜாட்டிக்குச்சற்று கூடுதலான வாய்ப்பு இருக்கிறது என்கின்றன புதுடெல்லியிலிருந்து வரும் செய்திகள்.

-ப்ரியன்

தேர்ந்தெடுக்கப்படுகிறார்?


கொள்ளுங்கள். தமிழக சட்ட மன்றத்தில் 80 உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரு உறுப்பினரின் வோட்டின் மதிப்பு 100 (முதல் கணக்குப்படி.)

$$\frac{100 \times 80}{800} = \frac{8000}{800} = 10$$

ஆக தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் ஒரு பாராளு மன்ற உறுப்பினரின் ஓட்டின் மதிப்பு பத்து. அதிக ஜனத்தொகையுள்ள மாநிலங்களில் உள்ள சட்ட மன்ற, பாராளு மன்ற உறுப்பினர்களின் ஓட்டின் மதிப்பு அதிகமாக இருக்கும்.

ஜனாதிபதி தேர்தலில் ஒற்றை மாற்று ஓட்டு முறை என்றும் ஒன்று இருக்கிறது. ஐந்து பேர் தேர்தலில் போட்டியிடுகிறார்கள் என்றால் ஒரு உறுப்பினர் தனக்குப் பிடித்த முறையில் ஐந்து வேட்பாளர்களுக்கும் வரிசை முறையில் வோட்டுப் போடலாம். முதல் எண்ணிக்கையில் வெற்றிபெற முடியாமல் போகும் வேட்பாளர் இந்த ஓட்டுப் போடும் முறையின் கீழ் இரண்டாவது எண்ணிக்கையில் வெற்றி பெற முடியும்.

இன்றைக்கு உள்ளநிலைமையின்படிபாராளு மன்றத்தின் இரண்டு சபைகளிலும் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் 473 பேர்கள் இருக்கிறார்கள். மொத்தம் 2300 இந்திரா காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர்கள் 22 மாநிலங்களில் இருக்கிறார்கள். இது தவிர இந்திராவை ஆதரிக்கும் அ.தி.மு.க. தி.மு.க போன்ற கட்சிகள் இருக்கின்றன. ஆகவே இந்திரா காந்தி எந்த வேட்பாளரை நிறுத்துகிறாரோ அவர் பலத்த பெரும்பான்மையுடன் தேர்ந்தெடுக்கப்படுவார் என்பது நிச்சயம்.



என் காருக்கு என்ன குறைச்சல்? பெட்ரோல் தான் இல்லே! கொஞ்சம் பெட்ரோல் போட்டுங்கன்னு ஜாம், ஜாம்னு ஓட்டுவேன்!
இஸ்ரேல்
நமக்குள்ளே ஏன் சண்டை? உன்னை அடிக்கிறதை நிறுத்திக்கறேன் - சிநேகமா இருப்போம்!

நான்காவது போர்முனை!



ஃபாக்லாந்தில் போர்: அமைதியான வேறு மார்க்கங்கள் இருக்க அர்ஜண்டைனு ஆக்கிரமிப்பில் இறங்கியது. பிரிட்டனுக்கு அது கௌரவப் பிரச்னையாகி விட்டது.

ஈரான் — ஈராக் போர்: தேவையின்றி நீடிக்கிற அநாகரிகம். அடிக்கடி கைமாறுகிற போர் எல்லைப்புற நகரங்கள் இடிபாடுகளாக வும் இடுகாடுகளாகவும் காட்சி தரும் பரிதாபம்.

இஸ்ரேல் — லெபனுன் போர்: தனக்குத் தொல்லை தரும் பாலஸ்தீனிய விடுதலை நிறுவன கொரில்லாக்களின் முகாம்களை அழிப்பதாகக் கூறிக் கொண்டு பலத்த தாக்குதல் நடத்தி, தென் லெபனுன் நகரங்கள் பலவற்றை ஆக்கிரமித்துள்ள இஸ்ரேலின் அடாவடிப் போக்கு.

இம்மூன்றும் தவிர பத்திரிகைகள் இன்று அநேகமாக மறந்து விட்ட நான்காவது பெரும் போரும் நீடிக்கிறது. அது ஆப்கன் மக்களின் விடுதலைப் போராட்டம்.

1979 டிசம்பர் 27ல் ஆப்கன் ஆக்கிரமிப்பு நடந்தது. இரண் டரை ஆண்டுகளாக இத்தேச மக்கள், ஆயுத பலமும் போர்ப் பயிற்சியும் மிக்க ருஷ்ய ராணுவத்தைத் தீரத்துடன் எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கம்யூனிஸத்தையும் ஏற்கவில்லை. ருஷ்ய மேலாதிக்கத்தையும் விரும்பவில்லை. மாறாக இவற்றை எதிர்த்து ஏராளமான ஆப்கன் மக்கள் உயிர் துறந் துள்ளனர். தவிர, இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு மிக அதிகமான அளவில் அகதிகளை உருவாக்கியுள்ளது ருஷ்யாவின் ஆப் கானிஸ்தானப் படையெடுப்பும் ஆக்கிரமிப்பும்தாம். எந்த ஈரான் அல்லது பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பிலிருந்து ஆப்கானிஸ்தானைக் காப்பதற்காகத் தன் ராணுவத்தை அனுப்பியுள்ளதாக ருஷ்யா கூறுகிறதோ, அதே பாகிஸ்தான் அல்லது ஈரான் நாட்டுக்குத்தான் ஆப்கன் மக்களில் ஆறில் ஒருவர் அகதியாகச் சென்று தஞ்சம் புகுந்துள்ளனர்!

ருஷ்யாவின் நோக்கம், அண்டை நாடுகளில் எங்கு நிலையான ஆட்சி இல்லையோ அங்கு தனது ஆதிக்கம் பரவச் செய்து அந்தப் பிரதேசத்தின் வளங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஏழை நாடுகளில் ஒன்றான ஆப்கானிஸ்தான் என்றுமே கூட்டுச் சேராக் கொள்கையைத்தான் பின்பற்றி வந்துள்ளது. தனது சுதந்திரத்தை என்றுமே அது சோவியத் யூனியனுக்கு எதிராக எவ்விதத்திலும் துஷ்பிரயோகம் செய்ததில்லை. அதற்கா இந்தக் கதி?

இரண்டரை ஆண்டுகளாக நீடிக்கும் ஆக்கிரமிப்பு ஆப்கன் மக்களின் சுதந்திர ஆர்வத்தை மடியச் செய்துவிடவில்லை. அவர் களிடையே ராணுவப் பயிற்சி பெற்றவர்கள் இல்லை. ருஷ்ய டாங்கு களையும் ஹெலிகாப்டர்களையும் வெற்றி கொள்ளக்கூடிய நவீன ஆயுதங்களும் கிடையாது. இருப்பினும் போராட்டம் தொடர் கிறது.

ஆப்கானிஸ்தானத்திலிருந்து அந்நியத் துருப்புக்கள் வெளி யேற வேண்டும் என்ற ஐ. நா. சபையின் மூன்று தீர்மானங்களை ருஷ்யா அலட்சியம் செய்துள்ளது. இத்தீர்மானங்கள் அடுத்தடுத்து அதிக மெஜாரிட்டியுடன் நிறைவேறியவை. அகில உலக இஸ் லாமிய மாநாடு, ஆப்கன் பிரச்னைக்குத் தீர்வு காண உருவாக்கிய கமிட்டி மாஸ்கோ சென்று பேசவே ருஷ்யா வாய்ப்பளிக்கவில்லை. இருகட்ட சர்வதேச மகாநாடு கூட்டிப் பிரச்னையை விவாதிக்கலாம் என்ற ஐரோப்பிய கவுன்ஸிலின் யோசனையையும் சோவியத் யூனியன் நிராகரித்தது.

ஆக்கிரமிப்பு நீடித்துக் கொண்டே போனல் ஆப்கானிய மக்கள் அடிபணிந்துவிடுவார்கள் என்று எண்ணுகிறது ருஷ்யா. இந்த அக்கிரமத்தை ஆப்கானிய மக்கள் மட்டுமல்ல, உலகமே மறக்காது; மன்னிக்காது.

1982 ஜூலை 20
துந்துபி ஆனி 6
மலர்: 40 இதழ்: 47
கல்கி
தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்



23

அரண்மனை விளாகத்தின் ஒரு பக்கலில் அமைந்திருந்த கலா மண்டபம், மணிகள் பல பொருத்தப்பட்ட உயர்ந்த வாயில் கதவுகளையும் அவற்றை அடைய மேலேறிச் செல்லப்பலபடிகளையும் அதன் மேல் எழும்பிக் கூரையைத் தாங்கிய பருத்த தூண்களையும் கொண்டு பிரும்மாண்டமாகக்காட்சி தந்தது.

படிகளில் ஏறும்போதே மண்டபத்தின் சிறப்பை அளக்கத் தொடங்கிவிட்ட விஜயாலயன் தாழ்வாரத்தைத் தாண்டி முன் வாசல் கதவுகளைக் கடந்து, நீள அகலத் தாலேயே பிரமிக்கச் செய்கின்ற கூடத்தினுள் அடியெடுத்து வைத்ததும் தன்னையுமறியாமல் ஜெயசிங்கனைக் கைத்தாங்கலாகப் பற்றிக் கொண்டான். 'அப்பப்பா! முத்தரையர் ஆட்சியில் கலை வளர்க்கவென்று இத்தனை பெரியதோர் அரங்கமா?' ஆடல் பாடல் கலைகளை வளர்க்கவும் புலவர்களைப் போற்றவும் உருவான அந்த மண்டபத்தில் சிற்பக் கலையின் உன்னத நிலையும் குடி கொண்டிருந்தது.

ஒரு பக்கம் நடன, நாடகங்களின் அரங்கு; எதிர்ப்புறம் மன்னர் அமர்வதற்குரிய சிங்காதனத்தைத் தாங்கிய பீடம். அதன் இருபுறமும் அரண்மனை மாந்தரும் அமைச்சரும் அதிகாரிகளும் விருந்தினரும் அமர வசதியான ஆசனங்கள். வலப்புறம் சுவரின் ஒரு புரையில் ஆட வல்லானின் பஞ்சலோகப் படிமம்; இடப்புறமோ அதே பெரிய அளவில் குழலூதும் கண்ணன் உலகையே இசைவித்துக் கொண்டிருக்கும் கோலம். அரங்கின் மேல் விதானத்தைத் தாங்கிய கற்தூண்களில் ஓர்



எழிலரசியின் பலவித நடனத்தோற்றங்கள் துல்லியமாய்ச் செதுக்கப்பட்டிருந்தன. சிற்பங்களின் நாயகி வேறு யாருமல்ல, உத்தம சீலிதான் என்பது முதல் பார்வையிலேயே தெரிந்து போயிற்று நண்பர்களுக்கு. கல்லிலே கலை வடிவமாக அவளைக் கண்டவர்கள் பேசும் பொற் சித்திரமாகவும் பார்க்கக் கருணை புரிந்தவளாக, ''வரவேணும் வர வேணும்'' என்று வணங்கியபடியே வந்தாள் அவள்.

''வந்தேன், கண்டேன், செயலிழந்து நின்றேன்'' என்றான் அராபியன். ஜெயசிங்கன் புரியவைக்க, அரும்பு நகை பெருமிதப் பூஞ்சிரிப்பாக மலர்ந்தது.


''பல தேசங்களுக்குச் சென்று பல மன்னர்களின் கலைக் கூடங்களைக் கண்டுள்ள நீங்கள் பாராட்டுகிறீர்கள் என்றால் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. இந்த மண்டபத்தைச் சிற்பிகள், கட்டிடக் கலைஞர்கள் ஒத்துழைப்புடன் திட்டமிட்டு நிர்மாணிக்கும் முழுப் பொறுப்பையும் பெரியப்பா என்னிடம்தான் ஒப்படைத்திருந்தார்!''

''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல் — வள்ளுவன் காட்டிய வழியில் தகுதி அறிந்து தந்திருக்கிறார் பொறுப்பை. ஆனால் என் நண்பன்பிரமித்துநின்றதுமண்டபத்தைப்பார்த்து மட்டுமல்ல!'' என்றான் ஜெயசிங்கன்.

'களீர்' என்று அவள் கன்னம் குழிந்து சிவக்கச் சிரித்தாள். அராபியன் செவிகளாலும் விழிகளாலும் சுவைத்துச் சிலிர்த்தான்.

அவள் இப்போது அரங்கேறி நடனமாடும் நோக்கிலேயேஉடையணிந்திருந்தாள். ஆடை உடலோடு ஒட்டி அமைந்திருக்க அதனால் அங்கங்களின் செழுமை மட்டுமின்றி அவள் உயரமும் தெற்றெனத் தெரிந்தது. அவள் கண்களை நேருக்கு நேர் சந்திக்கவே பலர் தங்கள் தலையை நிமிர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு என்பதையும் அந்தக் கட்டாயத்துக்கு உள்ளாகும்போதே ஒரு சிறுமை உணர்ச்சி அவர்களைக் கவ்வித் தலை தாழச் செய்துவிடும் என்பதையும் புரிந்துகொள்ள முடிந்தது. ஆனால் அராபியனிடம் அவளுடைய இந்த ஆளுமை படுதோல்வி அடைந்தது மட்டுமல்ல, அவன் பார்வை அச்சமோ கட்டுப்பாடோ இன்றி அவள் மேனி வளங்களின் மீதாக மிதக்க அவள் தவிர்விடும் நாணத்தைத் தவிர்க்க முற்பட்டவளாய், ''மன்னர் வரும் நேரமாகி விட்டது. உள்ளே வந்து அமருங்கள்'' என்று கூறி அழைத்துச் சென்றாள். மருதோன்றி கோலமிட்டுச் சிவந்திருந்த கால்களில் பூட்டியிருந்த சதங்கைகள் களீர் களீர் என ஒலி எழுப்ப, அழகுச் சிதறல்களை வெளிப்படுத்திய அசைவுகள் அராபியனுக்கு மன்மதனின் உன்மத்தக் கணைகளாக விளங்கின.

அரங்கிலே குழலும் யாழும் மத்தளமும் போன்ற வாத்தியக் கருவிகளை வாசிக்கச் சிலர் ஆயத்தமாயிருந்தனர். அவையில் அதிகம் போனால் ஏழெட்டுப் பேர் நின்றும் அமர்ந்தும் உரையாடிக் கொண்டிருந்தனர். இன்று உத்தமசீலி ஆடப் போகிறாள் எனில் அது அரண்மனை விளாகத்தைச் சேர்ந்த அனை



வரும் பார்க்கவோ ராஜாங்க விருந்தினரை மகிழ்விக்கவோ நடக்கப் போகும் அதிகார பூர்வமான நிகழ்ச்சியல்ல. பொழுது போக் காக மன்னரின் அணுக்கத் தொண்டர்களும் நண்பர்களுமான சிலர் மட்டுமே காண அவன் தன் ஆற்றலைச் சிறிதளவு உணர்த்துவான் என்பது புரிந்து போயிற்று. அத்தகைய நெருங்கிய நண்பர்களுள் இருவராகத் தாங்கள் கருதப்படுவதை எண்ணி விஜயா லயனும் ஜெயசிங்கனும் மனத்துக்குள் சிரித் துக்கொண்டதுடன் முத்தரையருக்காகப் பரிதாபப்படவும் செய்தனர்!

''அமருங்கள்'' என்று உபசரித்த உத்தம சீலி இரு இருக்கைகளைச் சுட்டிக் காட்டிய துடன் அவற்றின் அருகில் வேறு இரு ஆசனங் களில் அமர்ந்திருந்த இரு வாலிபர்களை அறி முகப்படுத்தியும் வைத்தாள். ''இவர்கள் இருவரும்தான் — காலையில் பெரியப்பா சொன்னரே — பாண்டி நாட்டிலிருந்து வந் திருப்பவர்கள். இவர் புலவர் மாணிக்கம். தம் கவிதை மாணிக்கமாக ஒளிரும் என இன் னும் சற்று நேரத்தில் நிரூபிக்கப் போகிறார். இந்த இளைஞர் இவரது சீடர். பெயர் வாச கன். இருவருக்கும் பெயர் பொருத்தத்தைக் கவனித்தீர்களல்லவா?''

உத்தமசீலியையும் சில கணங்கள் மறந்து அவர்களை உற்று நோக்கினான் விஜயாலயன். 'வாசகன் என்று பெயர் பூண்ட அந்த வாலி பன் ஒருவேளை இளவல் வரகுணன்தானோ? அவனுக்கு ஒரு புலவன் நண்பனாக அமைந்து சைவத்தில் அவன் ஈடுபாடு கொள்ளுமாறு செய்து வருவதாகக் கேள்விப்பட்டிருந் தோமே? அந்தப் புலவன்தானோ இந்த மாணிக்கம்?'

மன்னர்வருகின்றார்என்பதற்குரியசலசலப்பு அறிகுறிகள் எழ உத்தமசீலி ஓர் அவசரத் துடன் வாசலை நோக்கி நடந்தாள்.

''ஐயா, கூடல்மாநகரின் வளங்கள், எழில்கள் பற்றி நிறையக் கேள்விப்பட் டிருக்கிறேன். கப்பலேறித் தாய் நாடு திரும்பு முன் முடிந்தால் விஜயம் செய்ய விருப் பம்'' என்று அராபியன் ஜெயசிங்கன் மூல மாகத் தெரிவிக்கவும்,

''அவசியம் வாருங்கள். கூடல், பெயருக் கேற்பப் பலவிதக் கலைகள் சங்கமிக்கும் இட மாகவும், பல்வேறு நாட்டவர் கூடுகின்ற நகரமாகவும் செல்வங்கள் வந்து குவிகின்ற திரு அருள் பெற்றதாகவும் விளங்குவது'' என்றான் மாணிக்கம்.

''அப்படியா ஐயா! காஞ்சியை விடவுமா?''

''எம்மை வம்புக்கிழுக்காதீர்கள்!'' என்று சிரித்தான் வாசகன். ''தேன் இனிக்கிறது என்றால், 'பாகை விடவுமா?' என்று கேட் பார்கள்? நல்ல லாபம் பெற விரும்பும்வணி கர்கள் பாண்டியத் தலைநகருக்கு அடிக்கடி வந்து போவார்கள். தங்களை மன்னர் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபனும் இளவல் வரகுண னும் ஆர்வத்துடன் வரவேற்பார்கள் என் பதில் எனக்கு ஐயமில்லை.''

இதற்குள் வருகை தந்த முத்தரையர் தனித்து அரியாசனத்தை அலங்கரிக்காமல் தம் நண்பர்களிடையே நெருங்கி அமர்ந்தார். அவர்களுக்குப் புலவனையும் சீடனையும் சிறப்பு விருந்தினரென்று இரு வணிகர்களையும் அறி முகப்படுத்தினார். அராபியனின் கலை ஆர் வத்தைச் சிலாகித்தார். தமிழக பாணியில் கரம் கூப்பி மகிழ்வித்தான் அவன்.

மன்னர் உத்தமசீலியை நோக்கினார். ''உன் நர்த்தனத்தைக் காண எல்லோருமே ஆர்வமாய் இருக்கிறோம்'' என்றார். அவள் அரங்கேறினாள். வாத்திய ஒலிகள் எழுந்து எதிர்பார்ப்பை அதிகரிக்கச் செய்ய ஆட வல்லானைச் சில கணங்கள்தியானித்துவிட்டுத் தன் ஆற்றலைக் காட்ட ஆரம்பித்தாள். அடுத்த அரை நாழிகை நேரம் அவையில் இருந்தவர்கள் தம்மை மறந்த ஈடுபாட்டில் அந்த அற்புதத்தைக் கண்டு களித்தனர். சில சமயம் தென்றலாகவும் வேறு தருணங் களில் ஆடிக் காற்றாகவும் இன்னும் சில

சுகமான படுக்கை!

புகைப்படக்காரருக்குச் சவாலாக அமை யக்கூடிய தலைப்புக்களை ஏராளமான நேயர்கள் எழுதி அனுப்ப, ஒரு சமை போஸ்ட் கார்டுகளை உத்ராவிடம் தள்ளினோம். அவற்றை ஆராய்ந்து ''சுகமான படுக்கை'' என்ற தலைப்பைத் தேர்ந்தெடுத்தார் உத்ரா. தலைப்பை எழுதி அனுப்பினவர்:

டி. விஜயா
15, ஸ்ரீ வெங்கடேஸ்வரா நகர்,
அம்பத்தூர், சென்னை-53.

இவர் ரூ. 10 பரிசு பெறுகிறார்.

''சப்ரகூட மஞ்சம், பஞ்சணை மெத்தை, மலர் தூவிய மஞ்சம், ஏர் பில்லோ, வாட்டர் பெட், ஃபோம் ரப்பர் மெத்தை, காயர் மெத்தை என்று எத்தனை எத்தனையோ வகை இருந்தாலும் இரண்டு மரங்களிடையே அவை விரிக்கும் நிழலில், 'ஹாமக்' என்ற சொகுசு வலை ஊஞ்சலைக் கட்டி அதில் படுப்பதற்கு இணை எதுவுமே ஆகாது'' என்று சத்தியம் செய்கிறார் உத்ரா.

அதில் படுத்துப் பார்த்துச் சுகித்து இந்த இதழ் மேலட்டைக்குப் போஸ் கொடுத்த குமாரி காதரீன் ஷிர்லி ஒப்புக்கொள்கிறார்.

— சிக்கி




வேடிக்கை உல-கம்.
கேளிக்கைச் சு-கம்...
நியூட்ரின்
பபுல் கம்.
nutrine
BUBBLE GUM
ஊதிப் பார்...
உலகையின் உருவகம் இது.
மலையத்தனை, கடுகத்தனை
-விளையாட்டுக்கள்
எத்தனை எத்தனை!
நியூட்ரின் பபுல் கம்.
ஊதிக்களிப்பாய்
–உலகைச் சுரங்கம்
இன்பச் சுகம்
–அதுவே நிகரில்லாத
நியூட்ரின் பபுல் கம்.
nutrine
தின்னத்தின்ன
திகட்டாத மிட்டாய்!
நியூட்ரின் சூயிங்-கம்
ப்ராடக்ட்ஸ் கம்பெனி
(பிரைவேட்) லிமிடெட்
சித்தூர்-517 002 (ஆ.பி.)
CAS-NC-1-82 TAM-A


அரிப்பும் எரிச்சலும் தரும்
வியர்க்குருத் தொல்லையிலிருந்து
விடுதலை பெறுவீர்!
நைஸில்
உபயோகிப்பீர்-
மிகத்துரித நிவாரணம்
அளிக்கும்
வியர்க்குரு
பவுடர்.
2
பேக்குகளில்—
'ப்ளூ' மற்றும்
'ஸாண்டல்வுட்'
nycil
வாங்குவீர் நைஸில்.
விரட்டுவீர்
வியர்க்குருவை.
பால்கம் பவுடரைவிட
குறைந்த விலையில்!
மருந்துக் கலவை
யுள்ள நைஸில்:
1. அதிக வியர்வை
யைத் தவிர்க்கிறது.
2. வியர்வையை
உறிஞ்சுகிறது.
3. துர்நாற்றம் ஏற்
படுத்தும் கிருமி
களை அழிக்கிறது.
4. சருமத்திற்கு இத
மளிக்கிறது.
GN-79-PR-TH

கட்டங்களில் குறுவளியாகவும் அவள் மத்தளத்தின் தாள கதிக்கு ஏற்ப வேகத்தைக் குறைத்தும் கூட்டியும் நர்த்தனமிட அவையோரின் மனங்கள் கூடச் சேர்ந்து ஆடின. அவள் அவயவங்களின் ஒவ்வொரு அசைவும் ஒவ்வொரு நொடிப்பும் லயம் தவறுதிருப்பதைக் கூர்ந்து கவனித்த விஜயாலயனே, கலைத் தேவதைகள் இவளிடம் கைகட்டிச் சேவகம் புரியுமளவு இவள் ஆற்றலை வளர்த்துக்கொண்டு சர்வாதிகாரம்செலுத்துவதைப் புரிந்து கொண்டான்.

ஆட்டம் முடிந்ததும் அனைவரும் ஒரே நேரத்தில் பாராட்டு மொழிகளைக் கூறத் தொடங்கக் கையமர்த்தி நிசப்தம் நிலவச் செய்தான் அராபியன். ''நடனம் இன்னமும் என் மன மேடையில் தொடர்கிறது'' என்று கூறிக் கண் மூடிய லயிப்பில் இருந்தான். சற்று நேரத்துக்குப் பிறகுதான் உணர்வுகளைத் திரும்பப் பெற்றவனாக விழித்தெழுந்து. ''இந்தக் கலைக்கும் கலைஞருக்கும் ஈடும் இணையும் உலகில் எதுவுமே இல்லை. இந்தப் பேரானந்த அனுபவத்தை எனக்களித்ததற்குக் கைம்மாறாக ஒரு விலைமதிப்பற்ற பரிசை அளிக்க விரும்புகிறேன். தட்டாமல் ஏற்க வேண்டும். பேரரசன் ஒருவன் தன் சாம்ராஜ்யத்தையே விலையாகக் கொடுத்தாலும் விற்க இசைய மாட்டேன். நான் ஏறி வந்த அருமைக் குதிரையை. அந்தப் பரியை உத்தமசீலிக்கு வெகுமதியாகத் தருகிறேன்'' என்றான்.

அதனை அன்று காலைதான் பார்த்து, அதன் வலிமையை மட்டுமின்றி வல்லமையையும் அதன் ஆகிருதியை மட்டுமின்றி, அறிவையும் விசுவாசத்தை மட்டுமின்றி, வினயத்தையும் உணர்ந்திருந்த மன்னரும் உத்தமசீலியும் மனம் பூரித்தனர். அராபியனை அன்போடு அணைத்துத் தட்டிக் கொடுத்தார் முத்தரையர். ''நன்றியோடு ஏற்கிறேன்'' என்றாள் உத்தமசீலி.

இதன் பின்னர் மன்னர் மாணிக்கத்தை நோக்கி, ''புலவரே, தமிழ்க் கவிதையின் பெருமையைக் கடல் கடந்த நாடுகளிலெல்லாம் பரப்பஇதோ உமக்கு ஒரு நல் வாய்ப்பு'' என்றார்.

மாணிக்கம் அடக்கத்துடன் எழுந்து நின்றாலும், தன்னம்பிக்கையுடன் பேசினான்: ''மன்னவா! இந்த அராபியனைப் பார்த்த கணத்திலேயே இவன் மனம் காதல் சுரம் கண்டு வாடுவது எனக்குப் புரிகிறது. தாய் நாட்டில் தனக்காகக் காத்திருப்பவளை எண்ணி அடிக்கடி பெருமூச்சு விடுகிறான் போலும்!'' என்று எடுத்த எடுப்பிலேயே அங்கிருந்தோரிடம் இளநகையைத் தோற்றுவித்தவன் தொடர்ந்தான்: ''நம் நாட்டிலுள்ள நதிகளில் ஒரு சிறு பகுதியை இறையருளால் பரிகளாக மாற்றிவிட முடியுமானால் போதும். இந்த அராபியன் தன் காதலியைப் பிரிந்து கடல் கடந்து வர அவசியமே இராது!''

சிரிப்பொலி அடங்கியதும் மாணிக்கம் மேலும் கூறுவான்: ...''எனவே இவருக்கு ஆறுதலாக இவரைப் போலவே காதல்



எத்தனை தலைகள்?

போட்டி முடிவு

சரியான விடையான 530 தலைகள் என்பதை யாருமே குறிப்பிடவில்லை எனினும் அதற்கு மிக அருகாமையில் 531 என்று கணக்கிட்டு எழுதி ரூ 25/- பரிசு பெறுபவர் :

ஏ. அஜித் குமார்,
3/42 ஹவுஸிங்யூனிட்,
ரேஸ்கோர்ஸ், கோயமுத்தூர்
641.018

வயப்பட்டுத் தவிக்கும் ஒரு தமிழ் மகளின் நிலையைப் பாடுகிறேன்!''

சில விநாடிகள் கண் மூடிச்சிந்தித்துப்பிறகு இமை திறந்தான் புலவன். ''ஓர் இளம் பெண் தன் காதலனைக் காணாது ஏங்குகிறாள். தோட்டத்தின் மாமரத்தில் வந்தமர்கிறது ஒரு குயில். இவள் சோகத்தைப் பார்த்துக் கூவுவதையும் மறந்து வாளாவிருக்கிறது. நாயகி கேட்கிறாள்: 'குயிலே குமரன் வரக் கூவமாட்டாயா?' அப்போது தோழி சொல்கிறாள். 'அழகுதான்; உன் காதலன் யார் என்று அந்தக் குயிலுக்கு என்ன தெரியும்? அவன் எங்கிருப்பான், அவன் குண நலன்கள் என்ன, எப்படி இருப்பான், என்ன அணிந்திருப்பான் என்றெல்லாம் அடையாளமாவது சொல்லித் தூது அனுப்பு!'

'' 'என்னத்தைச் சொல்வேன்'. என்று பெருமூச்செறிகிறாள் தலைவி:

தேம் இனிய குயிலே!
  கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவின்
  பாதலம் ஏழினுக்கு அப்பால்!
சோதி மணிமுடி சொல்லின்
  சொல் இறந்து நின்ற தொன்மை
ஆதி குணம் ஒன்றும் இல்லான்
  அந்தம் இலான் வரக் கூவாய்!''

''ஆஹா!'' என்றார் மன்னர். ''அடடா!'' என்று வியந்தாள் உத்தமசீலி. அவையினர் அனைவரும் ஆனந்த பரவசமுற்றனர்.

அரியாசனத்திலிருந்து எழுந்து வந்து விட்டார்மன்னர். தமது பரந்த தோள்களின் மீது தவழ்ந்த பொன்னுடையை உருவி மாணிக்கனுக்குப் போர்த்தி மகிழ்ந்தார். உத்தமசீலி தன் நெஞ்சிலே தவழ்ந்த முத்து மாலையொன்றைப் பரிசளித்தாள். அப்பாடலை உடனுக்குடன் நறுக்கோலையில் எழுத்தாணி கொண்டு பதிப்பித்த வாசகனுக்கும் மன்னர் பொற் கழஞ்சுகள் அடங்கிய பட்டுப் பை ஒன்றைத் தந்தார். வணங்கி ஏற்றனர்.

தமிழ்க் கவி, காதல் தத்துவத்தை இறைத் தத்துவத்துடன் இணைக்கும் பான்மையையும் அத்துடன் நளினமான நகைச்சுவை உணர்

வையும் சேர்கின்ற நேர்த்தியையும் இதற்குள் நண்பன் மூலமாகப் புரிந்து கொண்டு விட்டதாக நடித்த அராபியன், பெரிய ரத்தினம் பதித்த ஒரு மோதிரத்தைக் கழற்றி புலவனின் சுட்டு விரலிலே அணிவித்தான் —நழுவாதிருக்க!

இதை அடுத்து மீண்டும் அரங்கேறிய உத்தமனின் இந்தப் பாட்டுக்கு அந்தக் கணமே இசை அமைத்துப் பாடி அபிநயிக்கவும் செய்தான்! குயிலைத் தன் வயப்படுத்தும் தலைவியின் சாகசம், அவனுடைய தணியாத விரக தாபம், காதலனை எண்ணிப் பார்த்து வர்ணிக்கும்போது ஏற்படும் வியப்புணர்வுகள் குயிலிடம் இவற்றைக் கூறிக் கெஞ்சுகின்ற பாவம் இவற்றோடு இழையோடும் ஹாஸ்யம் அனைத்தையும் சிருங்கார ரசம் மேலோங்க அவன் அபிநயித்துக் காட்டியபோது பாடலின் பொருள் இன்னும் தெளிவாக, மேலும் ஆழமாகக் காண்பவர் மனத்தில் பதிந்தது.

''சற்று முன் பாடலை இயற்றிய நான் பரிசு பெற்றேன். இப்போதோ பாடலே பரிசு பெற்று விட்டது!'' என்றான் மாணிக்கம்.

''அற்புதம்'' என்ற தமிழ்ச் சொல்லை மழலையாக்கினான் அராபியன்.

''மாணிக்கப் புலவரே! தமிழை மாந்த மாந்த தாகம் அதிகரிக்கிறது; இன்னும் ஒரு கவி சொல்லலாமே'' என்றார் மன்னர்.

உடனே அந்த அணுக்க அன்பர்கள் இடையில் எதிர்பார்ப்புடன் கூடிய நிசப்தம் நிலவ, மாணிக்கம் கண் மூடிச் சிந்தித்தான். சற்று நேரத்தில் இமை திறந்து சிரிக்கவும் செய்தான். நடராஜப் பெருமானின் பஞ்சலோகப் படிமத்தைச் சுட்டிக் காட்டிக் கூறினான்: ''பிரபோ! ஒரு தெய்விகக் கலையைத் தங்கள் வளர்ப்பு மகள் நமக்குப் பிரசாதமாக அளித்தாள். பார்த்துப் பரவசமாகிக் கண்களை மூடியபோது எதிரே உள்ள இந்த ஆடல் வல்லான்தான் என் மனத் திரையில் தோன்றினான். 'உன்னை ஆட்கொண்டு விட்டேன் பார்த்தாயா?' என்றான். 'உன்னைவிடவும் நான் கெட்டிக்காரன்!' என்று பதில் சொன்னேன்!'' நிதானித்தான் மாணிக்கம்.

''எப்படி? அது எப்படி?'' என்று பரபரப்புடன் கேள்விகள் பிறந்தன. புலவன் பாடினான்:

''தந்தது உன்தன்னை
கொண்டது என்தன்னை;
சங்கரா ஆர்கொலோ சதுரர்?
அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றது ஒன்று எம்பால்?''

''ஆகா! சங்கரனையே ஏமாற்றி விட்டீர்!'' கலகலவெனச் சிரித்த மன்னர், ''அப்பனே, மாணிக்கம்! நீ சாமானியப் பிள்ளை இல்லை; பெரும் புகழ் எய்தி சிரஞ்சீவிக் கவியாக விளங்கப் போகிறவன். சந்தேகமே இல்லை!'' என்றார். பனித்த ஆனந்தக் கண்ணீரை மறைக்க முற்படாமல் இளைஞனின் கன்னங்களை வருடிய தம் உள்ளங்கைகளை முத்தமிட்டார். ''அடடா! என்ன கற்பனைவளம்! எத்தனை நயமான நகைச்சுவை!''

அதே சமயம் அந்தச் சூழலின் இனிமையை அடியோடு தகர்த்தெறிந்து கொண்டு கோபாவேசமாக மண்டபத்துக்குள் நுழைந்து பூமி அதிர அடியெடுத்து வைத்து நடந்து வந்தான் திவாகரன்.

''பெரியப்பா! இதென்ன ஒற்றர்களிடம் ஏமாந்துபோய் இப்படி ஆருயிர் நண்பர்கள் போல அவர்களுடன் சல்லாபித்துக் கொண்டிருக்கிறீர்களே!'' என்று பதறினான்.

அங்கு கூடியிருந்த அனைவருக்குமே 'ஒற்றர்கள்' என்ற சொல்லைக் கேட்கத் 'திக்'கென்றிருந்தது! (தொடரும்)

இடுக்கண் வருங்கால் நகைத்தவர்

'கல்கி' சார்பில் இருமுறை அர்ஸைபெங்களூரில் பேட்டி காணும் வாய்ப்பு எனக்கேற்பட்டது. முதல் பேட்டிபோது அவர் கர்நாடக மாநில முதலமைச்சர். அவருக்கும் இந்திரா காந்திக்கும் இடையேயான மனக் கசப்பு உச்ச கட்டத்தில் உள்ளுக்குள் புகைந்து கொண்டிருந்த சமயம்.

பேட்டி பாதி நடந்து கொண்டிருக்கையில் டெலிபோனில் 'இந்திரா காங்கிரஸிலிருந்து அர்ஸ் விலக்கப்பட்டுள்ளார்' என்ற செய்தி வந்தது. ஒரு புன்னகையுடன் செய்தியை ஏற்று எனக்கும் கூறி, பேட்டியைத் தொடரச் சொன்னார். I wish her... all the best என்று கண்ணியமாகக் கூறினார். உடல் நலமின்றித் தாடி மீசையுடன் இருக்கும் தோற்றத்தில் அவரைப் புகைப்படம் எடுக்கலாமா என்று அனுமதி கேட்டபோது 'இனி எனக்கென்ன பெண்ணு கொடுக்கப் போகிறீர்கள் தாராளமாக எடுத்துக் கொள்ளுங்கள்' என குறிப்பிட்டார்.




இரண்டாவது பேட்டியின்போது அவர் சட்ட மன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவர்.

உயிருக்குயிரான மகள் நாகரத்னா மர்மமான சூழ்நிலையில் கிணற்றில் விழுந்து இறந்துபோய்ச்சில தினங்களே ஆகியிருந்தது. துக்கத்தைத் துளியும் வெளிக் காட்டாது பேட்டி அளித்தார்.

நெருக்கடியான கட்டங்களில் இந்திராவுக்கு விசுவாசமாக இருந்து கடைசியில் அவராலேயே கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டது, பிறகு எதிர்கட்சிகளின்ஒற்றுமைக்குப் பாடுபட்டது போன்றவையெல்லாம்எந்தஅரசியல்வாதியின்வாழ்க்கையிலும் நேரக்கூடிய திருப்பங்கள். ஆனால் ஏழு ஆண்டுகள் முதல்வராக இருந்த காலகட்டத்தில் அம்மாநிலம் அடைந்த மகத்தான வளர்ச்சி காரணமாக அவர் கர்நாடக மக்களின் நினைவில் என்றும் இருப்பார்.

பி. ரங்கநாயகி

நீங்கள் 1952 க்கு முன்னால் பிறந்தவராயின், இந்த விளம்பரம் முழுவதையும் படியுங்கள்—



30 வயதுக்கு மேற்பட்டவர்களில் .10—ல் 9 பேர்களின் கேசம் உதிர்கிறது ...அவர்களுக்கு அது தெரியாது!

அந்த 9 பேர்களில் நீங்களும் ஒருவராக இருந்தால், இன்றே ப்யூர் ஸில்விக்ரின் உபயோகிக்கத் துவங்குங்கள்.

உங்கள் தலைமுடியை, சீப்பினால் அழுந்தப் படிய வாரிவிடவும். உங்கள் சீப்பில், வாரிய கையோடு, தலைமுடியும் கூடவே வந்தால், உங்கள் தலைமுடி உதிரத் துவங்கிவிட்டது என்று சொல்லலாம். முகம் பார்க்கும் கண்ணாடியின் முன் உதிர்ந்த கேசம் தென்படத் துவங்குமுன்னர் இப்பொழுதே செயல்படவும். கேசத்துக்குத் தேவைப்படும், மிக முக்கியமான அமினோ-அமிலங்கள் இல்லாத காரணத்தினால், தலைமுடி உதிர்கிறது; ஆரோக்கியத்தை இழக்கிறது. இந்தக் குறைபாடு சரிசெய்யப் பட்டால் அன்றி, தலைமுடி உதிருவது தொடர்ந்து நீடிக்கவே செய்யும்.



அதனால்தான், இன்றே ப்யூர் ஸில்விக்ரினை, நீங்கள் உபயோகிக்க வேண்டியது அவசியமாகும்.

ப்யூர் ஸில்விக்ரினில் அடங்கியுள்ளவை யாவை?

(1) ப்யூர் ஸில்விக்ரினின் ஒரு சொட்டு பெரிதாக்கிக் காட்டப்பட்டுள்ளது. ப்யூர் ஸில்விக்ரின் இணையற்றது. 17 அமினோ-அமிலங்களின் இந்தக் கலவை, இயற்கையான கேச எண்ணெய் உடலுக்கு ஊட்டப்படுவதை ஈடு செய்கிறது.

ப்யூர் ஸில்விக்ரின் செயல்படும் முறை:

(2) நன்கு உள்ளே ஆழப் பாய்ந்து செயல்படுகிறது. கேசத்தின் வேர்களை எட்டும் வகையில், ப்யூர் ஸில்விக்ரினினால் தலையை நன்கு அழுந்த நீவிவிடவும். விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சிகளின் மூலம் தயாரிக்கப் பட்டுள்ள ப்யூர் ஸில்விக்ரின், இப்பொழுது செயல்படத் துவங்குகிறது; தலைமுடி வளர்ச்சியை, ஆரோக்கியமான விதத்தில், மறுபடியும் ஏற்படுத்த, இது உதவுகிறது. உங்கள் தலைமுடி வழக்கமான நிலைக்கு வரும்வரை, ப்யூர் ஸில்விக்ரினை ஒவ்வொரு நாளும், இருமுறை பயன்படுத்துங்கள்.

ப்யூர் ஸில்விக்ரின்



OBM/5849 Tam.

கவர்ச்சிகள்

கிருஷ்ணமணி

12

“ராமனுக்குக் காப்பி கொண்டுவந்து கொடு!'' என்றாள் அம்மா.

''வேண்டாம்மா! நான் திருச்சியிலேருந்து புறப்படறேச்சே தான் டிபன் காப்பி சாப்பிட்டேன்.''

''பிஸினஸ் எப்படி இருக்கு? மாசம் என்ன வருமானம் கிடைக்கும்?'' —சுப்பு கேட்டான்.

இருக்கேன். பிடிப்பெல்லாம் போக அறுபத்தேழு ரூபாய்தான் வர்றது. அம்மாவைச் சரியாக் கவனிக்க முடியல்லே.''

அம்மா மெல்லிய குரலில் பேசினாள்: ''ஏண்டா ராமா! கடுதாசி கூடப் போடக் கூடாதா? நீ சௌக்கியமா இருக்கணும்னு நான் வேண்டாத தெய்வம் இல்லே. ரோசக்காரன். எப்படியும் பிழைச்சுப்பேன்னு நேக்குத் தெரியும். ஏதோ நீ சந்தோஷமா இருந்தாச் சரி.''

''ஆமாம், படுக்கை, பை இதெல்லாம் ஒண்ணும் இல்லாமலா வந்தே?'' சுப்பு கேட்டான்.

''ராமவிலாஸ்லே ரூம் எடுத்திருக்கேன்.''

''என்னது?''



இவனுக்கு எரிச்சலாக இருந்தது. சுப்புவுக்கு உலகமே ரூபா அணா பைசாதான். அவன் நிலை அதுதான். மன்னியின் பார்வையில் அதே கேள்வி பிரதிபலித்தது.

''எல்லாச் செலவும் போக, அதாவது வேலை செய்யறவாளுக்குக் கூலி போக எனக்கு மாசம் நூறு கிடைக்கும்!'' வேண்டுமென்றே பொய் சொன்னான்.

மன்னியின் முகத்தில் ஆச்சரியம் பளிச்சிட்டது.

சுப்பு சொன்னான்: ''எனக்கு இன்னும் ப்ரமோஷன் வரல்லே. எல்.டி.சி.யாத்தான்

''ஆமாம்! என் பிஸினஸ் சம்பந்தமா சில வேலைகள் இருக்கு. அதுகளையும் முடிக்கணும். அதுக்காகத்தான்.''

சுப்பு வாயடைத்துப் போய் நின்றான்.

அம்மா எழுந்து உட்கார்ந்து கொண்டாள். புடவைப் பார்ஸலை ராமநாராயணன் அவளிடம் கொடுத்தான்.

''எனக்காடா?''

''ஆமாம். ஒன்பது கஜம் ஒரு ஜோடியா எடுத்தேன். சின்னாளப்பட்டு.''

''என் மனசு நிறைஞ்சு இருக்குடா ராமா! அன்னிக்கு ராத்திரி கோவிச்சுண்டு சாப்-

பிடாமக் கூடப் போனவன்தானே? நான் விசாரிக்காதவா இல்லே. ஆனா மனசுக்குள்ளே ஒரு பக்கத்திலே உனக்கு ஒண்ணும் ஆகியிருக்காதுங்கற நம்பிக்கை. திருவானைக்கா ஜம்புகேசுவரரையும், உச்சிப் பிள்ளையாரையும்தான் வேண்டிண்டேன். ஆச்சு உனக்கும் நல்ல இடமாப் பார்த்து ஒரு கல்யாணத்தைச் செஞ்சிட்டேன்னா, நிம்மதியாப் போயிடும்.''


ராமநாராயணன் சிரித்தான். ''இல்லேம்மா! நான் வதுவாக் காலே ஊன்ற வரைக்கும்எனக்குக்கல்யாணம் வேண்டாம்.''

''சரித்தான். உன் இஷ்டம்!''

''அண்ணா! டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்துச் சீட்டு இருக்கா. அந்த ஊசி மருந்தை வாங்கித் தரேன்.''

வாழ்க்கையில் வெற்றி யடைவதற்கும் தொடர்பே இல்லாதது போலிருந்தது.

மருந்துச் செலவுக்கும், பால் பழம் வாங்கவும் ஐம்பது ரூபாயை அம்மாவிடம் கொடுத்தான் ராமநாராயணன். சுப்புவுக்கும் அவன் மனைவிக்கும் பேச நா எழவில்லை. மூன்றும் நாளாகத் தாயைப் பார்த்துவிட்டுத் திருச்



''இதோ எடுத்திண்டு வரேன்.''

அவன் உள்ளே போனான்.

ராமநாராயணன் அங்கிருந்த நாட்களில் ஒரு நாள் கூட அண்ணனின்வீட்டில் சாப்பிடவில்லை. ஏதேனும் சாக்குப்போக்குச்சொல்லித் தப்பித்துக் கொண்டான். சுப்புராமனுக்கு என்னவோ போலாகி விட்டது. தம்பியின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துவிட்டது. சென்னையில் சொந்தமாகப் பிஸினஸ் செய்கிறான் இனி அவன் தன்னை மதிக்க மாட்டான் என்பது போல் தோன்றியது. படிப்பிற்கும்,

சிக்குத் திரும்ப ராம நாராயணன் முற்பட்டபோது சுப்புவைத் தேடி ஒருவர் வந்தார்.

''என் பெயர் கணபதி. நான் மெட்ராஸ்லே தாமஸ்அண்ட்கோவிலே இருக்கேன். மாசம் சம்பளம் நானூறு வாங்கறேன்'' என்று அறிமுகப்படுத்திக் கொண்டார்.

சுப்பு நாற்காலி ஒன்றை இழுத்துப் போட்டு அவரை உட்காரச் சொன்னான்.

''ஸார் என்னைத் தேடி எதுக்காக வந்திருக்காப்லே?'' – சுப்புவின் குரலில் விநயம் ஒலித்தது.

''இங்கே உறையூர்லே மூணு ஏக்கர் நஞ்சை வாங்கியிருக்கேன். இன்னும் சப் டிவிஷனுக்கு பட்டா கைக்கு வரல்லே. நீங்க தான் இப்போ தாலுகா ஆபீஸ்லே அந்த சீட்லே இருக்கிறதாச் சொன்னாங்க. கொஞ்சம் பைலை சீக்கிரமா நகர்த்தி, ரெண்டு நாளைக் குள்ளார பட்டாக் கிடைக்கும்படி பண்ணினா தேவலை.''

''பார்க்கலாம் சார்.''

''அப்படிச் சொல்லக் கூடாது. எனக்கு லீவு முடிய இன்னும் ஒரு வாரம்தான் இருக்கு. நான் இந்த நிலத்தை ஈடுகாட்டிக் கொஞ்சம் பணம் புரட்டணும். அவசரமாத் தேவைப் படறது. நீங்க உதவி பண்ணினா நான் மறக்க மாட்டேன். ஏதோ என்னாலானது'' என்று சொல்லியவாறு ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து மடித்து அவன் கைகளில் திணித்தார்.

சுப்புவுக்குக் குப்பென்று வியர்த்தது. அவனுக்கு இந்த மாதிரி பணம் வாங்கிக் கொண்டுதான் அந்த சீட்டில் வேலை செய்தவர்கள் காரியங்களை முடித்துக் கொடுப்பது வழக்கம் என்பது தெரியும். ஆனால் அதில் ஒரு பத்தா, முறை நிலவி வந்தது. இன்னின்னாருக்கு இவ்வளவு என்று பாகம் போட வேண்டும். அப்போதுதான் காரியம் சீக்கிரம் முடியும். எனவே அவன் தயங்கினான்.

கணபதி என்று சொல்லிக் கொண்டவர் அவன் தயக்கத்தைப் புரிந்து கொண்டவர் போல் பேசினார்: ''எனக்குப் புரியறது ஸார்! இது உங்களுக்குப் புதுசு. 'பந்தானம் இல்லாத ஊர் பாழ்னு' வசனமே உண்டு. எங்கெங்கே எது நியதியோ அப்படித்தான் நடக்கணும்.''

''அதுக்கில்லே ஸார்...''சுப்பு இழுத்தான்.

''புரியறது! நீங்க பைலை நகர்த்துங்கோ. நான் மேற்கொண்டு கவனிக்கிறேன்'' என்றார் அவர்.

ராமநாராயணனுக்கு நாடகம் பார்ப்பது போலிருந்தது. அவன் சிரித்துக் கொண்டான்.

கணபதி கேட்டார்: ''பின்னேயாண்டான் யாரு? உங்க தம்பியா?''

''ஆமாம்''என்ற பாவனையில் சுப்பு தலையசைத்தான். மெட்றாஸ்லே சொந்தமா பிஸினஸ் பண்றான்.''

''என்ன பிஸினஸ்?''

''அட்வர்டைஸிங்''... திடீரென்று ராமநாராயணன் குறுக்கே பாய்ந்தான். தான் பல்பொடி வியாபாரம் செய்வதைச் சொல்லிக்கொள்ள விரும்பாதவன் போல.

''அப்படீன்னா?''

''பத்திரிகைகளுக்கு விளம்பரம் சேகரிச்சுத் தர்றது. பொது இடங்களில் கம்பெனிகளுக்கு விளம்பரப் பலகை எழுதி வைக்கிறது இது போல.''

''ஓகோ! நீங்க எங்க கம்பெனிக்குவாங்கோ. ஜியார்ஜ் டவுன்லே தம்பு செட்டித்தெருவிலே தான் இருக்கு. எங்க கம்பெனி விளம்பரம் ஒண்ணு வாங்கித் தரேன். ப்ளீஸ்! சுப்பு என் விஷயத்தை மறந்திடாதீங்கோ! நாளைக்கு ஆபீஸுக்கு வர்றேன்.''

''சுப்பு நிதானமாகச் சொன்னான்: ''ஸார் குறைஞ்ச பட்சம் இருபது ரூபாயாவதுஆகும். எனக்கு மேலே இருக்கிறவாளையும் கவனிக்கணும். அப்பத்தான் காரியம் வருவா முடியும்.''

''ம்... ஓகே! இந்தாருங்கோ! அவர் இன்னுமொரு பத்து ரூபாய்த் தாளை எடுத்து அவனிடம் கொடுத்தார். மிகுந்த தெம்புடன் சொன்னார்: ''நாளைக்குச் சாயந்திரம் நாலு மணிக்கு வரேன். முடிச்சி வச்சிருங்கோ!....'' சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

சுப்புவால் சரியென்று தலையாட்டத்தான் முடிந்தது.

ராமநாராயணன், லௌகிக விஷயங்களை நுணுக்கமாகப் புரிந்து கொள்ளும் தன் சுபாவப்படி, கணபதியின் செய்கையின் பாதிப்பை உணர்ந்து கொண்டான்.

சென்னை சென்றவுடன் உண்மையிலேயே விளம்பர உலகில்தான் புக வேண்டும் என்பதையும் அதற்கு முதற் படியாக கணபதியையே உபயோகித்துக் கொள்ள வேண்டுமென்றும் தீர்மானித்தான்.

13

அந்த ஆரம்ப கால நாட்கள்தாம் எவ்வளவு விசையாகப் பறந்து விட்டன. இருபத்தைந்தாவது வயதில் தமக்கும் ஒரு வெளி நாட்டு நிறுவனத்தில் வேலை கிடைக்கும் என்று ராமநாராயணனால் கற்பனைகூடச் செய்து பார்க்க முடியவில்லை. கணபதியை உபயோகப்படுத்திக் கொண்டு 'ஜனக் குரல்' பத்திரிகை அதிபரைக் கைக்குள் போட்டுக் கொண்டது. பல்பொடி வியாபாரத்துக்கு ஒரு முழுக்குப். போட்டுவிட்டு விளம்பர யுக்திகளைப் பயின்றது. குறைந்தபட்ச உடலுழைப்பில் மனிதர்களைப் புரிந்து கொள்ளும் நேர்த்தியில், அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளத் தயங்காத ஒரு மனோபாவத்தில் படிப்படியாகத் தாம் முன்னேறியது எல்லாமே வேடிக்கையாகத் தோன்றியது.

வெள்ளைக்காரக் கம்பெனியில் விளம்பரங்களுக்குக் கான்வாஸ் செய்வது அவரது வேலை. நல்ல சம்பளம். மாதம்அம்மாவுக்கு முப்பது ரூபாய் அனுப்ப முடிந்தது. ஸ்ரீரங்கம் பக்கமே போகாமல் இருக்கமுடிந்தது.

வரவு அதிகமாகும்போது, நட்பும், சுற்றுப்புறச் சூழ்நிலையும் கூட மாறிவிடுகிறது. கம்பெனியில் அவன் உபயோகத்திற்கென மோட்டார் சைக்கிள் கொடுத்திருந்தார்கள். அந்த வாகனத்தின் மூலம் எத்தனை பரிச்சயங்கள்! நிச்சயமாக இந்த இருபதாம் நூற்றாண்டில் மனிதனுக்கு அவன் மனிதனாக இருக்கும் ஒரே காரணத்துக்காக மட்டும் யாரும் மதிப்புத் தருவதில்லை. அவனுடைய சமுதாய அந்தஸ்து என்பது அவனுடைய உடை, வாகனம், இருப்பிடம் இவைகளைக் கொண்டு மதிப்பிடப்படுகிறது. தடலடியாகப் பேசுவதிலும் 'வியாபார யுக்திகள்என்பவை வெறுமனே அதன் பண்புகளையும், பலன்களையும் பற்றியே பேசுவதில் இல்லை என்பதும், மனிதர்களுடைய பலவீனங்களைப் புரிந்து கொண்டு, அவைகளுக்கு வடிகால் வெட்டத் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டுமென்பதையும் அவன் புரிந்து கொண்டான். மனித பலவீனங்களுள் மதுவுக்கும் மங்கைக்கும் எத்தனை தொடர்பிருந்தது! இவைகளை யார் யாருக்குஎது தேவையோ அதற்கேற்பப் பூர்த்தி செய்ததில் அவனுக்கு வாழ்க்கைத் தரம் உயர்ந்தது.

அண்ணனுடைய மூத்த மகனுக்கு உபநயனம் நடந்தபோது இவனுடைய உபயோகத்துக்குக் கார் கிடைத்தது. காரில் சென்று இறங்கிய இவனுக்கு மன்னி அளித்த வரவேற்பு! உறவினர்களும், ஊராரும் சூழ்ந்து கொண்டு பயம் கலந்த மரியாதையுடன் குசலப் பிரச்னம் விசாரித்தது. பந்தியில் குழந்தைக்கு இருநூறு ரூபாய் ஆசீர்வாதம் செய்தவுடன் அண்ணனின் முகத்தில் தோன்றி மறைந்த நன்றி கலந்த புன்னகை... அப்பப்பா! பணத்திற்குத்தான் எத்தனை வல்லமை. சர்வ வியாபியான இறைவனுக்குக் காட்டும் பக்தியை விட மனிதனால் படைக்கப்பட்ட உயிரற்ற இந்த மாற்றுப் பொருளுக்குத்தான் எத்தனை மதிப்பு!

'பணமே! நான் உன்னை நான் தொழுகிறேன். உன்னை நான் பெருக்கிக்கொள்வதில் உள்ள இன்பம் வேறெதிலும் இல்லை. நீ என்னிடம் எந்த அளவில் சேர்ந்து இருக்கிறாய் என்பதைத்தான் உலகம் கவனிக்கிறது. நான்உன்னை எப்படி யெல்லாம் சேர்த்தேன்என்பதில்அவர்களுக்கு அக்கறைஇல்லை!' அவன் சிரித்துக் கொண்டான்.

ராமநாராயணனின் நினைவு திரும்பியது.

இன்று இந்த நீலாம்பாள் இத்தனை பெரிய வீட்டில் ராணிபோல் வாழ்கிறாள். ஐம்பது லட்ச ரூபாய் ஆஸ்திக்கு அதிபதியான ஒருவரின் மனைவி என்ற பெருமை அவளுடைய பேச்சிலே, பார்வையிலே, பளிச்சிடுகிறது. தர்மங்களும், நியாயங்களும் அவளால் பேச முடிகிறது. கோயிலிலும், சங்கீத சபாவிலும் வைரத் தோடும், பேஸரியும், டாலடிக்க, பட்டுப் புடவை சகிதம் பவனி வர முடிகிறது. அவளுக்கு எங்கு சென்றாலும் மதிப்புதான். ஆனால் இத்தனை செல்வம் சேர்க்கத் தன் புருஷன் எத்தனை விதமான மனிதப் பிறவிகளை எந்தெந்த விதத்தில் உபயோகித்துக் கொண்டார் என்பதும், அவருடைய மனத்தின் அடித்தளத்தில் மட்டுமே என்றும் ஊறிக் கிடந்து, அவருடனே மடிந்து போகக் கூடிய பாவ ரகசியங்கள் எவையென்பதையும் அவள் அறிய மாட்டாள். அவள் அறியவும் கூடாது.


ராம நாராயணனுக்கு உடல் சிலிர்த்தது!

(தொடரும்)



தரமே குறியென இருக்கும் சாலிடெருக்கு இப்பொழுது கைமேல் பலன் கிடைத்துள்ளது. பல உலகப் பிரசித்திப் பெற்ற டிவிகளுடன் போட்டியிட அகில உலக விற்பனைக்கு விடுக்கும் டிமோ லிட். என்ற ஸ்தாபனம் சாலிடெர் டிவியை தேர்ந்தெடுத்துள்ளது. ஆரம்பத்தில் சாலிடெர் டிவியை இலங்கையில் விற்பனை செய்யும்...ஆனால் இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை இது சாலிடெரின் தரத்திற்கு ஒரு ஆதாரம்.

முதலாவது எனக் கூறிக்கொள்ள, டீலக்ஸ் அம்சங்களடங்கிய ஜனதா டிவி TS 32, 10 வாட் ஹைஃபை ஆம்ப்ளிஃபையரும் 20 செ.மீ. டூயல் கோன் ஸ்பீக்கரும் கொண்ட டீலக்ஸ் டிவி TS 62, 60 வாட் சக்தி வாய்ந்த ஒரே ஸ்டீரியோ-டீலக்ஸ் டிவி என பல அம்சங்கள், சாலிடெரின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறை விஷன் இன்டர் மீடியட் ஃபிரிகுவன்ஸியில் கண்டுள்ள முன்னேற்றத்தினால் செய்தி வாசிப்பவரின் கண் இமைகள் கூட தெள்ளத் தெளிவாகத் தெரியும் படத் தோற்றம். இந்த ஆராய்ச்சித் துறை எப்பொழுதும் சாலிடெர் டிவியை மேலும் மேலும் மேன்மைப் படுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாய் உள்ளது. மற்ற டிவிகளைக் காட்டிலும் ஒரு பங்கு மேலானதாக திகழச் செய்ய வழி வகுக்கிறது.



சாலிடெர்

HE-523A-T

பெரிய இடம், சின்ன ஆசை

பிரதிபா ராஜகோபாலன்

பெரிய ராமசாமிக்கு இந்த மில்முதலாளியிடம் ஏன் டிரைவராக வந்து சேர்ந்தோம் என்று சலிப்பு வந்து விட்டது.

மில் முதலாளியான கோபாலசாமிக்கு நான்கு பஞ்சாலைகள். அவனாசி ரோடில் பங்களாவை யொட்டிப் பெரிய ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ். வாடகை ஆயிரக் கணக்கில் வரும். அப்புறம் பெட்ரோல் பங்க். அதில்லாமல் ஆந்திரா நெல்லூரில் வயல்கள். மெர்க்காராவில் காப்பி எஸ்டேட்.

அவருக்கு ஒரே பெண். ஜெயந்தி அலமேலு. அலமேலு என்பது அவருடைய அம்மா பேர். ஜெயந்தி என்று பேர் வைக்க வேண்டும் என்று மனைவி விரும்பியதால், இரண்டையும் சேர்த்து வைத்து விட்டார். ஆனாலும் அவர் அலமேலு என்றுதான் அழைப்பார்.

சென்னை நுங்கம்பாக்கத்தில் பங்களா வாங்கி, சமையல்காரியைப் போட்டு, டிரைவரை அமர்த்தி, தம் அத்தையைத் துணைக்கு வைத்து அலமேலுவைக் கலலூரியில் படிக்க வைத்தார்.

அலமேலுக்கு சினிமா, பாட்டு, நாட்டியம் என்றால் ஒரு வெறி. எல்லா சினிமாவையும் பார்த்துவிடுவாள். ஓரளவுக்குப் பாடவும் செய்வாள். நாட்டிய ஆர்வத்தைப் பார்த்துப் பிரபலமான நடனப்பள்ளி ஒன்றில் அவளைச் சேர்த்து விட்டார் கோபாலசாமி. அரங்கேற்றம் முடிந்து கல்லூரியில் பல பரிசுகள் கூட வாங்கி விட்டாள். போன மாசம் சிங்கப்பூர், ஜப்பான், ஹவாய், அமெரிக்கா பிரான்ஸ், லண்டன் என்று உலகச் சுற்றுப் பயணத்தின்போது பல இடங்களில் தன்திறமையைக் காண்பித்துப் புகழ் பெற்றாள்.

ஆனால், இப்போது, சொந்த ஊரில் கோவையில் அவளுடைய திறமையை வெளிப்படுத்த வேண்டும் என்று கோபாலசாமி விரும்பினார்.

''நான்கூட நெனைச்சேன். செய்யறதே செய்யறோம், பெரிய அளவில் செய்வோம். இருக்கிற கோடிக் கணக்கான சொத்தும் அவளுக்குத்தானே? என்ன பாராட்டுக் கிடைச்சாலும் சினிமாவில் ஒரு டான்ஸ் ஆடினுள்ளு அதிலே கிடைக்கிற பாராட்டும் புகழும் தனிதாங்க. அதுவும் டைரக்டர் கே. ஆர். ஜி. படத்துலே சான்ஸ் கெடைச்சதுன்னு....'' என்று அவருடைய மனைவி இன்னும் ஒரு படி அதிகமாய் விரும்பினாள்.



''இப்படி ஒரு ஆசையா உனக்கு? ராமகிருஷ்ணா கல்யாண மண்டபத்துல அலமேலுவோட டான்ஸ் அடுத்த வெள்ளிக் கிழமை அதுக்கு கே. ஆர். ஜி. தலைமை தாங்கறார். அடுத்த படத்தில் சான்ஸ் தரச் சொல்லிக் கேட்டுருவோம். அதுக்கு எத்தனை லட்சம் ஆனாலும் தந்திருவோம். அவருக்கும் பர்ஸனலா ஒரு லட்சம் தந்திருவோம். என்ன?''

''செஞ்சிருங்க'' என்றாள் மனைவி.

அதிலிருந்து கோபாலசாமியின் பென்ஸ் வண்டி ஓட்டுகிற பெரிய ராமசாமிக்கு அலைச்சல் ஆரம்பித்தது.

பங்களாவில் நாலு கார், இரண்டு வேன், ஒரு டெம்போ உண்டு. ஏழு டிரைவர்களில்



இரண்டு பேருக்கும் ராமசாமி என்றுதான் பேர். வயதில் மூத்தவரைப் பெரியராமசாமி என்று அழைத்தார்கள். அனுபவஸ்தர் என்ற முறையில் பெரியராமசாமிக்குக் கோபால சாமியின் பென்ஸ்காரை ஓட்டும் பொறுப்புக் கிடைத்தது.

சிவகாசிபோய் ஆப்செட்டில் அழைப்பிதழ் அச்சிட்டார்கள். ஆயிரக் கணக்கில் போஸ்டர் போட்டு நகரமெங்கும் ஒட்டினார்கள். ஸ்டிக்கர்கள் செய்து பஸ்கள், டாக்ஸிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள் மூலம் விளம்பரப் படுத்தினார்கள். இந்த நிகழ்ச்சியை வீடியோ டேப்பில் பதிவு செய்ய ஏற்பாடு நடந்தது. அதே சமயத்தில் குளோஸ்ட் சர்க்யூட்டில் ஒளிப்பதிவு செய்து மண்டபத்துக்கு உள்ளேயும் வெளியேயும் டெலிவிஷனில் காட்டவும் முனைந்தார்கள். கே. ஆர். ஜி.யின் யூனிட்டில் பணி புரிகிற பிரபல ஒளிப்பதிவாளரை அழைத்துத் திரைப்படமாகவும் எடுக்கலாமா என்று யோசித்தார்கள்.

கோவையில் உள்ள அத்தனை பணக்காரர்களுக்கும், தேர்ந்தெடுத்த பிரமுகர்களுக்கும் அரசின் உயர்மட்ட அதிகாரிகளுக்கும் அழைப்பிதழ் அனுப்பப்பட்டது.

''நம்ம வேலைக்காரர்கள் யாரையும் இந்த புரோகிராம் முடியறவரைக்கும் வீட்டுக்கு அனுப்பாதே. இங்கேயே சாப்பிடட்டும். ஆளுக்கு ஒரு செட் டிரஸ் எடுத்துக் கொடுத்துரு....'' என்று பி. ஏ.விடம் ஆணையிட்டார் கோபாலசாமி.

வெள்ளிக் கிழமை மத்தியானத்திலிருந்து கல்யாண மண்டபத்தைச் சுற்றியுள்ள இடங்கள் முழுதும் கார்கள்தான். அத்தனை பணக்காரர்களும் மனைவி, மகன் மருமகள்

களுடன் வந்து விட்டார்கள். தங்கமும் வைரமும், படைபெடுத்திருந்தன.

ஆறு மணிக்கு நிகழ்ச்சி ஆரம்பமாயிற்று.

''அலமேலுக்கு மேக்கப் போடச் சென்னையி லிருந்து மேக்கப் மேன் வந்திருந்தார். அவர் கைவண்ணத்தில் அலமேலு அடையாளம் தெரியாதபடி உருவெடுத்திருந்தாள்.

கடவுள் வணக்கத்துக்குப் பின் அவள் நடனம் சுறுசுறுப்பானது. வண்ண விளக்கு களின் ஒளி சொர்க்க பூமியாக்கின. கே.ஆர். ஜி. நடு நாயகமாய் முதல் வரிசையில் அமர்ந்து கவனித்தார்.

'என்ன கூட்டம் எத்தனை கார்கள்... இப் பிடி நினைக்கவே இல்லியே! கே.ஆர்.ஜி. மட் டும் இன்னைக்குச் சாதகமா முடிவு செய் துட்டாருன்னா, ஒரு லட்சம் கையிலேயே குடுத் திருவோம். எப்படியாவது அலமேலுவை நல்ல ஸ்டாராக்கிடுறேனும்' என்று கற்பனை யில் பூரித்துக் கொண்டு புன்னகைத்தார்.

அவருடைய மனைவிக்கோபெருமை வழிந்து கொண்டிருந்தது.

கோபாலசாமி மெல்ல எழுந்து நகரின் மாபெரும் பணக்காரப் பிரமுகர்களிடம் அணுகி அவர்கள் வருகை புரிந்ததற்கான சந்தோஷத்தையும் நன்றியையும் தம் மக ளின் அற்புத ஆட்டத்தின் திறமையையும் பகிர்ந்து கொண்டார்.

கே.ஆர்.ஜி. தம் உதவியாளரைச்செய்கை செய்து அழைத்துக் கொண்டு தனி இடத் துக்குப் போனார்.

''எங்கப்பா சிகரெட்டை எடு. சேர்ந் தாற்போல ஒரு மணி நேரம் சிகரெட் பிடிக் காம இருக்க முடியலே'' என்ற கே. ஆர். ஜி. பற்றவைத்துக் கொண்ட சிகரெட்டுடன், அந்த அறையில் உலாவினார்.

கோபாலசாமி பிரமுகர்களிடமிருந்துவிலகி கே. ஆர். ஜி. நடனத்தைப் பற்றியும், அல மேலுவைப் பற்றியும், என்ன அபிப்பிராயம் வைத்திருக்கிறார் என்றறிய, அவர் இருந்த அறையில் நுழைந்தார்.

அப்போது, ''பணத்தை லட்ச லட்சமா வச்சிருக்கான். செலவு பண்றான். தன் பொண்ணு பாலசரஸ்வதி, பத்மா சுப்ரமணி யம்னு நெனைப்பு. நம்ம அடுத்த படத்துல அவளுக்குச் சான்ஸ் தர்றதுக்கு ஒரு லட்சம் தர்றானும். பணம் இருக்கிற கொழுப்பு...'' என்று கே. ஆர். ஜி. உதவியாளரிடம் சொல் லிக் கொண்டிருந்தார்.

அதைக் கேட்டுக் கோபாலசாமி நிதான மாய் நின்றார்.


''நமக்கென்ன சார் போச்சு... கெடச்ச வரைக்கும் லாபம். லட்சத்தை வாங்கிட்டு அவர் மகளுக்கு ஒரு சான்ஸ் குடுத்துட்டாப் போச்சு'' என்று உதவியாளர் ஆலோசனை சொன்னார்.

''என்னப்பா டான்ஸ் ஆடுது அந்தப் பொண்ணு? பரதநாட்டியத்துக்கே அவ மானம். அவ ஒடம்புக்கும், கண்ணுக்கும், பார்வைக்கும் காபரே டான்ஸ் ஆடினா அற் புதமா இருக்கும். ஜெயமாலினி, சில்க் ஸ்மிதாவுக்குப் போட்டியா அவளை உருவாக் கலாம். செக்ஸியான பிகர்'' என்று தம் உண்மையான அபிப்பிராயத்தை கே.ஆர். ஜி. சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்ட கோபாலசாமி, அவமானம் பொங்க, தம் பணத்தின் கனம் கரைய, அந்த இடத்தி லேயே மனச மௌனமாய் உறைய, பிரமை பிடித்த வராய் உடம்பு சரிய....

அரங்கில் விளக்குகள் ஒளிர அலமேலுவின் நாட்டியம் தொடர்ந்தது.

அதைப் பார்க்க விரும்பாத கோபாலசாமி தம் கண்களையும் மனசையும் மூடிக்கொண் டார். கே. ஆர். ஜி. வேறு கதவின் மூலம் வெளியேறி, சபையில் நடுநாயகமாய் உட்கார்ந்து நாட்டியத்தை முழு மனசோடு ரசிப்பவராய்ப் பாவனை செய்து கொண் டிருந்தார்!

வெப்பத்தால் நீங்கள் வலுவிழந்து வாடுகையில்...



உங்களுக்கு நம்பகமான க்ளாக்ஸோஸ-Dயின் புதிய பெயர்.

உட்கொள்ளுங்கள் **க்ளூகோன்-டி**®


அதிக சக்தி—உங்களுக்குத்தேவையான போது.

வெப்பத்தைப் போல் உங்களை வலுவிழக்க செய்வது பிறிதொன்றில்லை. கோடையின் வெப்பத்திலே வடிந்து விடும் உங்கள் சக்தி யெல்லாம். அப்போது தான் உங்களுக்குத் தேவை புத்துணர்ச்சி தரும் குளுமையான க்ளூகோன்-டி. அது உங்களுக்கு அதிக சக்தி தருகிறது-உங்களுக்குத் தேவையான போது.

30 ஆண்டுகட்கும் மேலாக இலட்சக் கணக்கானோர்க்கு நம்பகமான க்ளாக்ஸோஸ்-டி யின் புதிய பெயர் தான் க்ளூகோன்-டி. எந்த பானத்திலும் அதைக் கலந்து அருந்தலாம்; பழரசம், பால், தேநீர், காபி, தண்ணீர் இவற்றிலே கலந்தோ, நேரடியாகவோ உட்கொள்ளுங்கள். திரும்பவும் பெருகிவரும் சக்தியை உணர்வீர்.

உங்கள் குடும்பத்தினர் அனைவர்க்கும் கொடுங்கள் க்ளூகோன்-டி; மேற்கொண்டு தத்தம்பணிகளில் அவர்கள் ஈடுபட—விளையாட்டிலும், வேலையிலும். க்ளூகோன்-டி—உங்களுக்கு வழக்கமான அதே பச்சை உறையிலே கிடைக்கிறது.





வைட்டமின்-டி மற்றும் கால்ஷியம் ஃபாஸ்ஃபேட் கொண்டு வளமூட்டிய அசல் க்ளூகோஸ் பவுடர்—**க்ளாக்ஸோ** அளிக்கிறது.

HTB-GIL-6591 TL

இலக்கியத்தில் இறையுணர்வு:

பிறவிகளுள் மனிதப் பிறவி உயர்ந்தது. ஏனைய பிறப்புக்களிலிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுவது நாக்கு. நாக்கின் பெருமையை வெளிப்படுத்துவது அதில் பிறக்கும் வாக்கு. வாக்குத் தேவியாக விளங்கும் கலைமகளே, கலைகளுக்குத் தலைவி.

''அவள் வெள்ளைத் தாமரைப்பூவில் இருப்பாள், வீணை செய்யும் ஒலியில் இருப்பாள், கொள்ளை இன்பம் குலவு கவிதை கூறு பாவலர் உள்ளத்திருப்பாள், உள்ளதாம் பொருள் தேடி யுணர்ந்தே ஓதும் வேதத்து உட்பொருள் ஆவாள். கள்ளமற்ற முனிவர்கள் கூறும் கருணை வாசகத்துள் உட்பொருளாவாள்.''

அந்தக் கலைமகளை வந்தனம் செய்வது எப்படி? 'ஏட்டை வரிசையாக அடுக்கி, அதன் மேல் சந்தனத்தை, மலரை இடுவதா? அல்ல. நாக்கால் அவன் புகழைப் பாடுவோருக்கு அவள் வாக்காய் வருவாள்.

''கலைமகளே! பனி படர்ந்த வெண் தாமரைப் பூ உன் திருவடி தாங்க எழுந்தருளி இருக்கிறாய்! என் உள்ளத் தாமரையில் உன் திருவடி வந்து தங்கக் கூடாதா? என் உள்ளத்தில் கள்ளமில்லை. கள்ளமற்ற தன்மைக்கு வண்ணம் வெள்ளைதானே! அப்பொழுது என் உள்ளமும் வெண் தாமரை தான். உலகம் உண்ட திருமாலும், அதை யொழித்த ருத்ரனும், உண்டாக்கும் பிரும்மனும் நாவால் வணங்கிச் சுவை கொண்ட கரும்பே! சகல கலா வல்லியே!

''ஏட்டை விரித்து எடுத்த பாட்டில் எல்லாம் சொற் சுவை, பொருட் சுவையில் தோய வேண்டும்; நால் வகைக் கவியும் நான் பொழிய நல்லருள் புரிய வேண்டும். பங்கஜத்தில் வீற்றிருக்கும் பசுங் கொடியே! காட்டையும் குன்றையும் கரும்பொன்று சுமந்தது போல் கருங்குழலும் மார்புமாய்க் காட்சி தரும் அம்மா! சகல கலா வல்லியே!

''கடல் கடைந்து அமுதை உண்டனரா தேவர்கள்! அறியாதவர். நான் தமிழமுது உண்டதால் உன் அருட் கடலில் குளிப்பேன். அம்மா! நீ உள்ளத்தில் பொருந்த, தெள்ளத் தெளிந்த புலவர்கள் கவி மழை சிந்த, அம் மழை கண்டு ஆடும் கலாப மயில்! சகல கலாவல்லியே!

''அம்மா! நூல்களை ஆராய வேண்டும்: நுண்மாண் நுழைவுக்குப் புலமை பெற வேண்டும். கற்றதை மற்றவர்க்குக் காட்ட வாக்குப் பெருக வேண்டும். வடமொழி நூற் கடலையும், தேக்கி வைத்த செழுந் தமிழ்ச் செல்வத்தையும் அடியார்கள் நாவில் எந்நாளும் காத்து வைக்கும் கருணைக்கடல் நீ! சகல கலாவல்லியே!

''பஞ்சைக்காலில் அப்பினால் அதற்கு இதந் தரும் உன் பாத தாமரை என் நெஞ்சத் தடத்து இன்னும் மலராமல் இருக்கலாமா? தாமரைக் கொடியுயர்த்தி வீற்றிருக்கும் மலரவன் நாவும் அகமும் மட்டும்தான் இருப்பாயா? சகல கலாவல்லியே!''

''பண், பரதம், ஏனைய இனிய நூல்கள் எல்லாம் நான் எண்ணும் பொழுதெல்லாம் இனிது விளங்கச் செய்ய வேண்டும். வேதம், விண், மண், புனல், கனல், காற்று, அன்பர் கண், கருத்து என்ற எவ்விடத்தும் நிறைந் திருப்பாய்! சகல கலாவல்லியே!

''தாயே! ஆராய்ச்சிக்குப் பாட்டு, அதன் பொருள், அப்பொருளாற் பொருந்தும் பயன் என்ற மூன்றையும் நாட வேண்டும். அவ்வாற்றல் என்பால்கூட நீ அருள்புரிய வேண்டும். உன்னை உளங்கொண்ட அன்பர்களீ தாமறிந்த கலைக் கடலை உன்பால் தருகின்றனர். நீ அதில் அமுதம் இருப்பதாக மற்றவர்கட்குக் காட்டுகிறாய்! வெள்ளன்னமே! சகல கலா வல்லியே!

''சொல் திறம், நினைவுக்கலை, கவி சொல்ல வல்ல நல் வித்தை இவற்றை நீ தந்து என்னை அடிமை கொள்ள வேண்டும். செந்தாமரைச் செல்வி திருமகள் கருணை வரும், போகும் என்று எனக்கு உணர்த்தியவளே! சகல கலா வல்லியே!

''சொல்லும் சொல் உணர்த்தும் பொருளும் எதற்கு? மெய்ஞ்ஞானம் அடைவதற்கு. மெய்ஞ்ஞான திருவுருவே நீ என்று உன்னைச் சிந்திப்பவர் யார்? தொங்கும் தும்பிக்கை யானையும் அன்னமும் கண்டு அஞ்சும்படி நடக்கும் அரசன்னமே! சகல கலா வல்லியே!

''மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்

பண்கண்ட அளவில் பணியச்செய்
வாய்; படைப்போன் முதலாம்

விண்கண்ட தெய்வம்பல் கோடிஉண்
டெனினும் விளம்பில் உன்போல்

கண்கண்ட தெய்வம் உளதோ?
சகல கலாவல்லியே!''


ஊமையா? அம்மையின் புகழை அனுதினம் இவ்வாறு துதித்தால் வாக்குப் பொங்குமே! கல்வி உணர்வுக்குக் காரணமான கலைமகளைப் போற்றும் குமர குருபர சுவாமிகளின் இச் சகல கலாவல்லி மாலையைப் படிக்கப் படிக்கப் புதுப் பொருள்கள் தோன்றும்.



கண் கண்ட தெய்வம்!

கீரன்

புதையலைத் தேடி...



✕ பக்கெட்டுகள் சக்கரம்போல இணைக்கப்பட்டுக் கடல் அடித்தளம் வரை சுழல்கின்றன

நளினி சாஸ்திரி

சுற்றிலும் கடல் நீர் சூழக் கம்பீரமாக கவேஷணி தன் தேடலை ஆரம்பிக்கிறாள். புதையலைத் தேடிப் பயணம் தொடர்கிறது. விண்ணில் மிதக்கும் செயற்கைக் கோள் கவேஷணியின் இருப்பிடத்தைக் கணக்கிட்டுச் சொல்லத் தரையிலிருக்கும் ஓமேகா நிலையம் அதனை உறுதி செய்கிறது. கவேஷணியின் சுக துக்கங்கள் ரேடியோ டெலிபோன் மூலம் தரை நிலையத்துக்குத் தெரிவிக்கப்படுகிறது.

மோப்பம் பிடித்த கவேஷணி ஓரிடத்தில் நிற்கிறாள். ஒரு கருவி எதிரொலி உண்டாக்கி கடலின் ஆழம் 4032 மீ. என்று அறுதியிட்டுச் சொல்கிறது. இன்னொருகருவி கடல் அடிப்பரப்பின் வெப்பத்தை வரைபடமாக வரைகிறது. கடைசியாக விசேஷமாக உருவாக்கப்பட்ட கருவிகள் கடலடி சென்று வாயைத் திறந்து அங்கிருக்கும் சில பொருள்களை அள்ளி வருகின்றன.

மண் உருண்டைகளைப் போன்ற அந்தப் பொருட்கள்தான், பழுப்பிலிருந்து கருப்பு வரை நிறம் கொண்ட அந்தப் பொருட்கள்தான், உருளைக் கிழங்குகளைப் பிரதிபலிக்கும் அந்த அதிசயப் பொருள்கள்தான்— கடல் நமக்களித்துள்ள புதையல்.

ஆம்! நோடியூல் (Nodule) என்றழைக்கப்படும் அந்த வஸ்துவுக்குள் அரிய பல உலோகங்கள் உறங்குகின்றன.

மங்கனீஸ், இரும்பு, நிக்கல் கோபால்ட், தாமிரம் மட்டுமின்றி அரிய உலோகங்களான ஈயம், பேரியம், மாலிப்டினம், வனடியம், குரோமியம், டைடேனியம் போன்றவையும் சிறிதளவு ஒளிந்துள்ளன. சிறிதளவென்றாலும் அந்த அரிய உலோகங்கள் பெரிய அளவில் நமக்கு உதவுகின்றன. இவை இல்லாவிடில் உலகின் பெரும் தொழிற் சாலைகளை மூட நேரிடும்.

பசிபிக், அட்லாண்டிக் மட்டுமின்றி இந்தியப் பெருங் கடலிலும் நோடியூல்கள் நிறைந்துகாணப்படுகின்றன. இவற்றிலிருந்து கிடைக்கும் உலோகம் உலகம் பூராவுக்கும் ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்குப் போதுமானது.

வளர்ந்த நாடுகள் இந்தக் கடல் புதையலை அடையப் போட்டி போடுகின்றன. வளர்ந்து வரும் நாடுகள் வரிசையில் நோடியூல் எடுத்துச் சாதனை புரிந்த முதல் நாடு இந்தியா. கடல் உலகுக்குப் பொதுச் சொத்தானதால் இப் புதையல் யாருக்குச் சொந்தம் என்று உலக அரங்கில் முடிவாகாமல் இருக்கிறது.

ஒரு நாட்டின் கடற் கரையிலிருந்து சுமார் 14 மைல் தூரத்துக்கு அந்த நாடு கடலில் சொந்தம் கொண்டாட உரிமையுண்டு. இந்த வகையில் இந்தியப் பெருங் கடலில் நமக்கு நிறைய நோடியூல்கள் கிடைக்கும். சுமார் ஒரு கோடி சதுர கிலோ மீட்டர் பரப்பில் நமக்கு நோடியூல் எடுக்கும் உரிமை உண்டு.

நம் உபயோகத்துக்கான பெரும் பகுதி தாமிரமும், ஈயமும் இறக்குமதி வாயிலாகவே கிடைக்கிறது. நிக்கல், வனடியம், கோபால்ட்

விஞ்ஞானப் பக்கங்கள்

போன்றவற்றை முழு அளவும் இறக்குமதியே செய்ய வேண்டியுள்ளது. இனி நோடியூல்கள் உபயத்தால் உலோக இறக்குமதி குறைந்து நமது பொருளாதார வளர்ச்சியில் கூட மாறுதல் ஏற்பட இருக்கிறது.

கடலில் அகழ்ந்து நோடியூல்கள் எடுக்கும் இந்திய ஆராய்ச்சிக் கப்பலின் பெயர்தான் கவேஷணி (Gaveshani) ஆரம்பத்தில் குறிப்பிட்ட பல வசதிகளைக் கொண்டவள். டாக்டர்காசிம் என்ற அதிகாரி இந்த நோடியூல் ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். இவர் கடலியல் ஆராய்ச்சியில் பல பெரும் பதவிகளை வகிப்பவர்.


நோடியூல்கள் லேசானவை. கடலில் 3000 முதல் 6000 மீட்டர் ஆழம்வரை காணப்படுகின்றன. வருடத்துக்கு ஒரு கோடி டன்கள் புதிதாக உருவாகின்றன. நோடியூல்களில் இருந்து தேவையான உலோகத்தை மட்டும் பிரித்தெடுக்கிறார்கள்.

கடலில் இருந்து இவற்றை எடுக்க மூன்று முறைகளைக் கையாளுகிறார்கள். முதல் முறையில் அதிகப்படியான காற்றழுத்தம் காரணமாக அகன்ற குழாய்களில் நோடியூல்களை மேலே வரச் செய்கிறார்கள். இரண்டாம் முறையில் மின்சாரப் பம்புகள் மூலம் நோடியூல்களைக் குழாய்கள் வாயிலாக நீருடன் உறிஞ்சுகிறார்கள். இந்த இரண்டு முறைகளும் செலவும் சிக்கலும் நிறைந்ததால் எளிதான மூன்றும் முறையைக் கையாளுகிறார்கள். இந்த முறையில் பக்கெட்டுகள் சக்கரம் போல இணைக்கப்பட்டுக் கடல் அடித்தளம் வரை சுழல்கின்றன. அப்போது பக்கெட்டுகள் நோடியூல்களை அள்ளிக் கொண்டு வந்து கப்பலில் கொட்டிவிடுகின்றன.

ஒரு வருடத்துக்குப் பத்து லட்சம் டன் நோடியூல் எடுக்க ஆகும் செலவு 200 கோடி முதல் 800 கோடி ரூபாய்கள் வரை என்று மதிப்பிட்டுள்ளார்கள். பல உலகக் கம்பெனிகள் 2400 கோடிகளை இந்த ஆராய்ச்சியில் முதலீடு செய்துள்ளன.

அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, மே. ஜெர்மனி, பிரான்ஸ், ஜப்பான் ஆகிய ஆறு நாடுகளும் இந்த ஆராய்ச்சியில் போதிய அனுபவம் பெற்று விட்டன. வளர்ந்த இந்த நாடுகள் பெரும்பாலான உலோகத் தாதுக்களை வளர்ந்து வரும் நாடுகளிலிருந்துதான் பெற்று வந்தன. எனவே, வளர்ந்த, வளர்ந்து வரும் நாடுகளுக்கிடையே கடலில் நோடியூல் எடுக்கும் உரிமை பற்றிய போட்டி ஒருபுறம் வலுக்கிறது.


இதற்கிடையே கவேஷணி திரும்பவும் தன் பரிவாரங்களுடன் இந்தியக் கடலை அகழ்ந்தாராயக் கிளம்பி விட்டாள். புதையலைத் தேடி ஒரு புனிதப் பயணம்!




✕ கவேஷணி

ஹோட்டல் நகைச்சுவை

கருத்து: அறிவுடைநம்பி





த்தாக பிராக்டீஸ்
ம்பித்த டாக்டர்
ஹாட்டல்காரரிடம்:-
ங்களை நம்பித்
ன் உங்க
டைக்கு எதிர்லேயே
ராக்டீஸ் ஆரம்
ச்சு இருக்கேன்.
காஞ்சம் கவனிச்
சுக்குங்க.
இந்த
ஹாட்டல்ல
மாத்திரம்
காபி விலை
காசு குறைச்
சல் ஏன்?
இந்த கடை
காவிரிக்குப்
பக்கத்துல
இருக்கே.
உங்க
சரக்கு மாஸ்டர்
பெரிய புரட்சிகர
மான ஆளா
இருக்கலாம்.
அதுக்காக
இப்படியா
வெடி குண்டு
மாதிரி லாடு
பண்றது?
80 வயசிலேயும்
இப்படி
திட காத்திரமா
இருக்கீங்களே
எப்படி?
நான் இது
வரையில்
இந்த ஹோட்டல்ல
ஒரு நாள் கூட
சாப்பிட்டதில்லே
அதான்.
செ

முன் நெற்றியில் ஒரு காயம்

சுப்ரபாலன்



நிஷாவுக்கு உடம்பெல்லாம் வியர்த்துப் போய்த் தொப்பலாய் நனைந்திருந்தாள். கண்கள் விழித்தது விழித்தபடி இருந்தவள்—சுற்றியிருந்தவர்களைப் பார்த்துவிட்ட உணர்வு வந்ததும் 'வீல்' என்று கூச்சலிட்டாள்.

கண்களை நன்றாய இறுக்கமாய் மூடிக் கொண்டாள். உடம்பு லேசாக நடுங்கிக் கொண்டே இருந்தது. புருவக் கோட்டுக்கு மத்தியில் நெருப்புச் சுட்ட மாதிரி சிறலாய் ஒரு கோடு நீண்டிருந்தது. கறுப்பும் சிவப்புமாய் அந்த இடத்தில் ரத்தம் கசிந்து உறைந்தும் போயிருந்தது.

''டாக்டர்! இது அதே மாதிரியான கேஸ் தான். போன வாரம் டேவிட் இப்படித் தான் தாக்கப்பட்டுக் கிடந்தான். உணர்வு வர மூன்று நாள் ஆயிற்று அவனுக்கு. நிஷா பரவாயில்லை. ஆறு மணி நேரத்தில் முழு உணர்வும் வந்து விட்டது.''

அவனுக்கும் இதே போல் முன் நெற்றியில் ஒரு காயம். ''யாரோ சாக்கு மூட்டையில் போட்டுக் கட்டி மூச்சுத் திணறப் பண்ணினார்கள்'' என்று அவன் உளறினான். யார், எப்படி இருந்தார்கள் என்றும் அவனுக்குச் சொல்லத் தெரியவில்லை. முன்னுக்குப் பின் முரணாய் எதையெதையெல்லாமோ உளறிக் கொட்டினான்.

அன்றைக்கு அவனைப் பரிசோதித்த டாக்டர்கள் அவனுக்குச் சித்தம் கலங்கியிருக்கிறது என்றே ஒருமித்து முடிவு செய்தார்கள். ஆனாலும் அந்த நெற்றிக் காயம் புதிராகவே இருந்தது.

பழுக்கக் காய்ச்சிய ஏதோ ஓர் உலோகக் கம்பியால் இழுத்திருக்கக் கூடும் என்பது அமெச்சூர்த்தனமான முடிவாகவே பலருக்குப் பட்டது. இது நெருப்பே இல்லை. ஏதோ ஒரு கதிர்வீச்சு. அல்ட்ரா வயலெட், இன்ஃப்ராரெட்... ஜாதியில் என்னவோ ஒரு கதிர் வீச்சு என்று எண்ணமிட்டார்கள்.

இன்றைக்கு அந்த எண்ணம் நிஜமாகவே உறுதியானது. நிஷா ரொம்பவும் சூடிகையானவள். அளவுக்கு அதிகமான 'ஐ.க்யூ' அவளுக்கு உண்டு என்பதைப் பல முறை நிரூபித்தும் இருக்கிறாள்.

''டாக்டர்! நிஜமா என் கண்ணாலே பார்த்தேன். நம்புங்கள் ப்ளீஸ். சடார்னு மின்னல் அடிச்சது. நெத்திப் பொட்டிலே வின்னுன்னு தெறிச்சது. அப்படியே புகையாப் பரவி மூடி எனக்கு மூச்சுத் திணறி... அப்புறம் ஒண்ணுமே ஞாபகம் வரல்லே டாக்டர்'' அவள் விம்மினாள்.

''மின்னலாவது மண்ணாவது! வானம் துப்புரவாய் வெளிறிக் கிடக்கிற கோடையில் என்ன மின்னல் வெட்டுகிறதாம் இவளுக்குன்னு'' அவன் கோபக்காரன். நிரஞ்சன் பாபுவுக்கு அவள் சொல்கிறதெல்லாம் பொய், கற்பனை என்று தீர்மானமான எண்ணம்.

டாக்டர் ஹரியும் மற்றவர்களும் அவளை மௌனமாய் இருக்கும்படி ஜாடை காட்டி அமர்த்தினார்கள்.

மறுபடியும் நிஷா கண்ணயர்ந்தாள். இனி விழிப்புவர ஒரு மணி நேரமாவது ஆகும். 'ஸெடேடிவ்' தன்வேலையைத் தொடங்கியிருந்தது.

''ரொம்பவும் 'மைல்ட்' போதும்'' என்று சொல்லியிருந்தாலும், அந்த 'மைல்ட்' கூட அவளை ரொம்பவும் அசத்தியது.

''டாக்டர்! அந்தக் காயத்திலே கொஞ்சம் சுரண்டி எடுத்து லாபரெட்டரிக்கு அனுப்புங்க பார்த்துடலாம். என்ன இதை இப்படியே விடமுடியாது.எங்கேயோ என்னமோ

தகராறு ‘ஆயிண்டிருக்கு'' சாட்டர்ஜி பரபரத்தார்.

டேவிட் உலக மகா அசமந்தன் என்று சொல்ல வேண்டும். கான்டீனுக்குப் போய் டீ சாப்பிட்டு விட்டு வருவதற்குள் அவன் ரிடையராகி விடுவான். நடையில் பேச்சில் எல்லாவற்றிலும் அவ்வளவு வேகம்.

நிஷா அவனுக்கு நேர் எதிரிடையானவள். அவளுடைய வேகம், பரபரப்புக்கு யாராலுமே ஈடு கொடுக்க முடியாது. ஷாப்பிங் போக நடந்தால் கூடத் துணைக்குப் போகிற நிரஞ்சன் ஓடத்தான் வேண்டும்.

இப்படி எதிர் எதிரான குண இயல்புடைய இருவர் ஒரே மாதிரியான தாக்குதலுக்கு ஆட்பட்டிருப்பது தான் சாட்டர்ஜிக்குப் புதிராக இருந்தது. தன் அறைக்கு வந்து டையைத் தளர்த்



திக் கொண்டு சோபாவில் வந்து விழுந்தார்.

வானத்தில் என்னவோ வித்தியாசமாக மின்னுகிற மாதிரி தோன்றியது. ஆறு மணி ஆகிவிட்டதால் ஏதாவது 'ஈவ்னிங் ஸ்டார்' ஆக இருக்கும் என்கிற நினைப்பில் கண நேரம் அசட்டையாக இருந்தார்.

உடனே குறுகுறுப்பு. அந்த மாத ஸ்டார் சார்ட்டைப் பார்க்க வேண்டும். என்று தூண்டியது. பார்த்தார். வானத்தில் மின்னி மினுக்கிய இடத்தில் ஒரு நட்சத்திரமும் கிரகமும் இருக்க நியாயமில்லை என்பது தெரிந்தது.

மறுபடி அதே இடம். கூர்ந்து பார்த்தார். வளையம் வளையமாய்ப் பூப் பூவாய் நெளிகிறமாதிரி ஒரு தோற்றம்.

விரல்களைச் சுழற்றி டெலிபோன் எண்ணைப்பிடித்து...

''ஹலோ! எஸ். கே. சாட்டர்ஜி, ஹியர்...'' வானியல் ஆராய்ச்சிக் கேந்திரம் உடனே கிடைத்தது ஆச்சரியம்தான்.

''யெஸ்! இதே நிமிஷம் இப்பத்தான்... தெற்கு தென் மேற்கு...க்கு முப்பது டிகிரியிலே! அது என்ன கவனிச்சீங்களா?''

அவர்களும் கவனித்திருந்தார்கள்.

''ஆமாம்! ஏதோ புதுசு... நம்மளோடதில்லே.... அந்நியம்தான்.... 'ஃபாலோ' பண்றோம்... தாங்க்யூ'' வைத்துவிட்டார்கள்.

அடுத்த அரைமணியில் ரேடியோ தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டு அந்த அறிவிப்பு வாசிக்கப்பட்டது.

''மாலையில்...இருட்டுகிற நேரத்தில் தில்லியிலும், நாகபுரியிலும், சென்னையிலும் பார்த்திருக்கிறார்கள். இது பூமியைச் சேர்ந்ததில்லே. ஏதோ அந்நியமான யூ. எஃப். ஓ. என்று...''

மறுநாள் காலை செய்தித் தாள்களுக்கு நல்ல தீனி. விதம் விதமான கதைகள். பார்த்தவர்கள் பார்க்காதவர்கள் என்று யார் யாரோ சொன்ன விளம்பரக் கட்டுக் கதைகள். மூலையில் ஒருபுறத்தில் சின்னதாகக் கட்டம் கட்டி நிஷா பற்றிய செய்தியும் தவறாமல் இடம் பெற்றது. 'ஒட்டு வாலாகப் போன வாரம் டேவிட் பட்ட அனுபவமும் சேர்ந்து கொண்டது.

எப்படியோ ஒரு கோணத்தில் 'பீஷ்மா-3' துணைக் கோள், அந்த அந்நிய விருந்தாளியைப் படமெடுக்கப் போக அதன் தாக்குதலுக்கு இரையாகி விட்டது என்பது நிரூபணமாயிற்று.

கடலில் விழுந்த பீஷ்மா-3யின் மிச்சங்களில் நல்லவேளையாய் அதன் படம் கிடைத்து விட்டது. ஒரு சின்ன மிதப்புப் பலகை, கடலில் தவிக்கிறவனுக்கு உதவுகிற மாதிரி அந்தப் படம் பயன்பட்டது.

எல்லாத் தரைக் கட்டுப்பாட்டு நிலையங்களும் பரபரப்பாய் இயங்கித் தத்தம் நாடுகளின் துணைக் கோள்களுக்குக் கட்டளைகளை அனுப்பிக் களைத்துப் போயின. மூன்று வாரங்கள் வரை மறுபடி அது பற்றித் தகவலே இல்லை. — ஒன்றிரண்டு புரளிகள் கிளம்பியதைத் தவிர.

நிஷா முழுவதும் குணமடைந்துவிட்டாள். ஆனால் நெற்றிக் காயம் மட்டும் ஆறுகிற வழியாய் இல்லை. முழுவதும் ஸ்கிராப் செய்து, சின்ன சர்ஜரி செய்தும் கூட உள்ளே ஆழத்தில் விஷம் வேலை செய்தது. வலப்புறக் கண்ணின் பார்வை மங்கி விட்டது!

நெற்றிக் காயம் வலியோ, வேதனையோ உண்டாக்கவில்லை என்பது ஒரு புதிய புதிர். நிஷா மாதிரியே டேவிட்டும் சொன்னான்.

சோதனைகளில் எதிர்பார்த்தபடியே கதிரியக்கம் பற்றிய விவரங்கள் கிடைத்தன. அது என்ன மாதிரியானது என்பது தெளிவாகவில்லை. பூமியில் அந்த நிமிஷம் வரை அறியப்படாத கதிர் வீச்சு என்பது மட்டும் ஊர்ஜிதமாயிற்று.

இருபத்து ஒன்பது நாட்கள் ஆன பின்னர் மறுபடியும் தகவல்கள் அணி அணியாக வரத் தொடங்கின. இப்போது மாஸ்கோவில் ஒரு நிகழ்ச்சியும் பாங்காக்கில் ஒரு நிகழ்ச்சியும் ஏறக் குறைய சென்னை நிகழ்ச்சிகளைப்போலவே கூறப்பட்டன. பிலிப்பைன்ஸில் மட்டும் சற்று வித்தியாசமான தகவல் கிடைத்தது.

ஓர் ஆதிவாசிச் சிறுவன், அப்படியே வானில் எழும்பி, நூறு அடி உயரே பறந்து சென்றானாம். அப்புறம் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே சிரித்துக் கொண்டு மெல்லத் தரையில் இறங்கினானாம். அவனுக்கும் நெற்றியில் அரை சென்டி மீட்டர் நீளத்துக்குச் சூட்டுக் காயம் காணப்பட்டதாம்.

மூன்று மாத காலத்தில் மொத்தம் அறுபத்தேழு சம்பவங்கள் அதிகார பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டிருந்தன. இந்தக் கால இடைவெளியில் 'பீஷ்மா' எடுத்த படமும் அக்கு அக்காய்ப் பகுக்கப்பட்டு அந்த அந்நிய விருந்தினர்களைப் பற்றிய விவரங்களை அறியப் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த யூ. எஃப். ஓ. ஒரு விண்கலம்தான் என்றும், விரும்புகிறபோது முழுவதுமாய் நம் பார்வையை விட்டு மறைந்து போய்விடுகிற மாதிரி ஒரு அமைப்பில் இயங்குகிறது என்றும் அனுமானித்தார்கள்.

அலறியடித்துக் கொண்டு போலீஸ் நிலையத்துக்கு ஓடிவந்தார் பண்டிட் வித்யாசாகர். ரொம்பவும் ஆசாரக்காரப் பிராமணர். அவருடைய ஒரே பிள்ளை சாந்தி ஸ்வரூப். செத்துக் கிடக்கிறானாம். போன வாரம்தான் குடும்பத்தோடு சென்னைக்குக் குடி வந்தார். மத்திய சர்க்கார் பள்ளிக்கூடம் ஒன்றில் உத்தியோகம். சம்ஸ்கிருத வாத்தியார்.

வாழ்த்துத் தந்தி கொடுப்பவர்கள் முப்பது நாட்களுக்கு முன்னதாகவே கொடுக்கலாம். எந்தத் தேதியில் கொடுக்க வேண்டும் என்பதைத் தந்தி பாரத்தில் எழுதிக் கொடுத்துவிட்டால் சரியாக அந்தத்தேதியில் போய்ச் சேரும்படி அனுப்பப்படுகிறது.

மேலே உள்ள செய்திக் குறிப்பு, சென்னை டெலிபோன் டைரக்டரி 1981ல் காணலாம். இந்த முறையைப் பொதுமக்கள் யாரும் கடைப்பிடிப்பதில்லை என்று தந்தி இலாகாக்களில் பணி புரிபவர்கள் சொல்கிறார்கள்.

-நாகை ஜி. அருமை




உங்கள் கேசம் அடர்த்தியின்றி
சக்தியின்றி இருக்கிறதா? உங்கள்
கேசத்தைப் பக்குவப்படுத்தி அழகையும்
ஆரோக்கியத்தையும் அளிக்கிறது...
செழுமையான புரதப்போஷாக்கு நிறைந்த
ஹேலோ எக் ஷாம்பூ
ஊட்டம் குறைந்த நிலையில் உங்கள் கேசம் அடர்த்தி
யின்றியும், சக்தியின்றியும், ஆரோக்கியமின்றியும்
காணப்படுகிறது.
பட்டுப்போன்ற, பொன் நிறமுள்ள வழவழப்பான
ஹேலோ எக் ஷாம்பூ செழுமையான புரத ஊட்டம்
நிறைந்த உத்தியின் மூலம் உங்கள் கேசத்தை சீராகப்
படியவைத்து அதற்குத் தேவையான எல்லா
ஊட்டங்களையும் அளிக்கிறது. உங்கள் கேசம் அழகாக
ஆரோக்கியமாக, அடர்த்தியாகத் திகழ்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூவின் செழுமையான நுரைவளம்
உங்கள் கேசத்தில் புகுந்து அதை பொலிவுடனும்
தூய்மையான பளபளப்புடனும் திகழச் செய்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூ...
அழகிய அடர்த்தியான ஆரோக்கியமான கேசத்திற்கு
EGG
Halo
SHAMPOO
HEB. C. 4. TM

காவல் நிலையம் பரபரத்தது. ஜீப்கள் விரைந்தன. சாந்தி ஸ்வரூப்பின் உடம்பு கிடந்த இடத்தில் ஏகக் கூட்டம். ராணுவம் வந்தால்கூட ஒழுங்கு பண்ண முடியுமா என்கிற மாதிரி ஒரு அமளி.

காலையில் கடற்கரைப் பக்கம் போகிறேன் என்று புறப்பட்டவன், இங்கே வடபழனிக்குப் பக்கம் வயல்காட்டில் எப்படிச் செத்துக் கிடக்கிறான்? அவனுடைய நெற்றியில் அதே கதிரியக்க வடு. உடம்பில் மருந்துக்குக்கூடத் துணியில்லை. என்ன இது?

போலீஸுக்கு பண்டிட்ஜி மீதே சந்தேகம் வந்தது. ஆழமாகப் பார்த்தார்கள்.

"பண்டிட்ஜி! எங்கே குடியிருக்கிறது?"

"நுங்கம்பாக்கம் ....தெரு. அறுபத்தி நாலாம் நெம்பர் வீடு."

"நீங்க வடபழனி வயல் காட்டுப் பக்கம் ஏன் போகணும்?"

"அங்கே நம்ம ஊர் ஆளு இருக்கு. அவரைப் பார்த்துட்டுத் திரும்பறப்போ யார் யாரோ ஓடினாங்க. நானும் என்னன்னு பார்க்கப் போனேன். அதான் தெரியும். இவனே கிடக்கான்."

"நிஜம்மா இது உங்க பையன்தானா?"

"சந்தேகமே இல்லே இன்ஸ்பெக்டர், அவனோட வலது மணிக்கட்டிலே ஒரு வெட்டுக் காயத் தழும்பு. சுண்டு விரல் கொஞ்சம் குட்டையா இருக்கு பாருங்க. ஜபல்பூர் கிட்ட ஒரு பஸ் ஆக்ஸிடெண்டிலே கண்ணாடி வெட்டி ஏற்பட்ட காயம்."

நம்பலாம் போலவும் இருந்தது வேண்டாம் போலவும் இருந்தது. பண்டிட்ஜி பொய் பேசக் கூடியவர் இல்லை என்று முகத்திலேயே எழுதியிருந்தது.

போலீஸ் துணையுடன் 'பாடி'யை மருத்துவமனைக்குக் கொண்டு போனார்கள். பண்டிட்ஜி அழுதுகொண்டே உடன் சென்றார். "இவனோட அம்மாவுக்கு என்ன பதில் சொல்லுவேன்."

ஜி. ஹெச். சுக்குள் வண்டி நுழையும் போது பண்டிட்ஜியை யாரோ அழைத்தார்கள்.

திரும்பினார். அவருக்குத் தூக்கி வாரிப் போட்டது. சாந்தி ஸ்வரூப் முழுசாய் நின்று அப்பாவை அழைத்தான். அவனுடைய நெற்றியில் சின்னதாய் ஒரு பிளாஸ்டர்.

"ஒரு சின்ன மின்னல் அடிச்சுது அப்பா! ஒரே சாம்பிராணிப் புகை மூட்டம். மூச்சு முட்டிச்சு. அப்புறம் எதுவுமே தெரியல்லே. இங்கே கொண்டு வந்து அரை மணியிலே மயக்கம் தெளிஞ்சு போச்சாம். நீ போகலாம்னு சொன்னாங்க. பிளாஸ்டர் போட்டு அனுப்பிச்சிட்டாங்க."

நிஜம்தான். இது சாந்திஸ்வரூப்தான். தொட்டார். முகத்தைத் தடவினார்....

"இன்ஸ்பெக்டர்! மன்னிச்சுடணும். இது தான் என் பையன். இவனேதான். என்னை விட்டுடுங்க."

"வாட் நான்ஸென்ஸ்! அப்ப இந்த பாடி யாருது? நீங்கதானே அடையாளம் சொன்னீங்க. ஜபல்பூர் பஸ் விபத்துக் காயம், சுண்டு விரல் வெட்டு. என்ன ஸார் இது?" இன்ஸ்பெக்டர் வெடித்தார்.



அவன்: "ஹலோ! அவசரப் போலீஸா? இங்கே ஆயிரம் விளக்குப் பகுதியிலே ஒரே கலவரம்! கொலை விழும்போல இருக்கு. உடனே ஒரு வேன் அனுப்புங்க சார்!"

போலீஸ் அதிகாரி: "வேனா? எதுக்குப்பா?"

அவன்: "நான் வீட்டுக்குப் போகணும். பயமா இருக்கு!"

-ஏ. ஜீ. வல்லபதாஸ்

பாடியை அவனும் பார்த்தான். கண நேரம் அவனுக்கு மூச்சு அடங்கிப் போனது. "இன்ஸ்பெக்டர்! கோபப்படாதீங்க. இது நானேதான்... இது எப்படிச் சாத்தியம்? இதப் பாருங்க. சுண்டு விரல் வெட்டு. உள்ளங்கை ரேகை. இன்னும் எங்க வேணும்னாலும் பார்த்துக்குங்க." அவன் தலையைப் பிய்த்துக் கொண்டு உட்கார்ந்தான்.


இன்ஸ்பெக்டர், டாக்டர்கள் யார் யாரோ பரபரத்தார்கள். ஒரே அச்சாய் இரண்டு பேர். ஒரு பிணம் ஒரு நிஜம். எப்படி இதெல்லாம்....

நெற்றிச் சூட்டுக் காயம் இங்கே புதிய பிரச்னைகளைத் தொடங்கி வைத்து எல்லோரும் மூளையைக் கசக்கிக் கொண்டு திணறிய வேளையில்—

அந்த 'யூ.எஃப்.ஓ' தன் தாய் வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தது. இப்போது வண்ண வண்ணமான அந்த விண் கலத்தை எல்லா வேவு கோள்களுமே படங்கள் எடுத்தன. டி. வி. திரையில் அந்தத் திரும்பலை எல்லோரும் பார்த்தார்கள்.

அந்தக் கலத்துக்கு உள்ளே — குறைந்த பட்சம் எண்பது பேர் — பூமியின் மனிதர்கள்— நிஷா, டேவிட், அந்த பிலிப்பைன்ஸ் ஆதிவாசிப் பையன் உட்படப் பத்திரமாய் இருந்தார்கள். அவர்களுடைய அசல்கள் பூமியில் வழக்கப்படி இருக்க... இவர்கள் நகலெடுக்கப்பட்ட மனிதர்கள் பிறந்த மேனியாய்.. ஆடை அணிகள் எதுவுமில்லாமல்...

"அந்த ஆள் சுண்டு விரல் துண்டா யிருந்திச்சாம். குறைபாடு உள்ளவன் வேண்டாம்னு அந்த நகலை வயல்லே வீசிடுச்சு" என்றான் டேவிட்... ஸாரி... அவனுடைய நகல்.


டூ-இன்-ஒன்
போர்ஹென்ஸ்
டபிள்—ஆக்ஷன்
டூத்ப்ரஷ் உங்கள்
பற்களை சுத்தம்
செய்யும்போதே
ஈறுகளையும்
தேய்த்துக்
கொடுக்கிறது.
போர்ஹென்ஸ்
டூ-இன்-ஒன்
டூத்ப்ரஷ்
அடல்ட்
மற்றும் ஜூனியர்

277 F-203 TAM

மயங்குது எதிர் காலம்!

முழுப்பெயர்: ஆர். வெங்கடரமணன்
வயது: 23
கல்வித்தகுதி: BSc. (Botany)
கூடுதல் தகுதி: டைப்ரைட்டிங் (லோயர் கிரேட்)
எதிர்பார்ப்புகள்: ஒரு நல்ல வேலை; வேலைக்குத் தகுந்த ஊதியம்

முகவரி !

R. Venkataramanan
AP 51.
12th Main Road
L. Block
Anna Nagar
Madras-40.

பள்ளியில் 10ம் வகுப்பு படிக்கும்போது அந்த வருடம் அறிமுகப்படுத்தியதாலோ என்னவோ ஒரு இனம் புரியாத சந்தோஷத்தில் உயிர் காதல் கொண்டு 'உயிரியல்' (Biology) பாடத்தைச் சிறப்புப் பாடமாக எடுத்தேன். 'எதிர் காலத்தில் ஒரு டாக்டராக வரலாம்' என்று மற்றவர்கள் ஓதிவிட்டதின் விளைவாக இந்த விஞ்ஞானப் பாடத்தையே பி. யூ. ஸி. யிலும் எடுத்துக் கொண்டேன். பி. யூ. ஸி. முடித்து எம். பி. பி. எஸ். 'அப்ளை' செய்யும் போது சில விரும்பத் தகாத குறுக்கீடுகள் காரணமாக திசை மாறி மீண்டும் கல்லூரியில் சேர்ந்து 'பி. எஸ். ஸி. படித்தேன், 'பாடனி'யை(Botany)முக்கிய பாடமாகக்கொண்டு. (ஆமாம், இது பெண்கள் சப்ஜெக்டாமே, அப்புறம்தான் தெரிந்தது!)



'மைக்ராஸ் கோப்'பின் மூலம் தாவர செல்களின் ஆச்சரியங்களைப் பார்த்த போதும், செத்துப்போன கரப்பான் பூச்சியை 'வீரத்துடன்!' 'அறுவை' செய்து சந்தோஷித்தபோதும், கெமிஸ்ட்ரி 'லாப்'பில் (Lab) 'டெஸ்ட் ட்யூப்'பில் பல கலவைகளை ஊற்றி 'ஜெமினி கலரை' வரவழைத்து மாயா ஜால வித்தைகளைச் செய்து பார்த்தபோதும் மூன்றாண்டுகளுக்குப் பிறகு இந்தச் சமுதாயத்தில் எங்களை எதிர்கொண்டிருக்கும் வேலையில்லாப் பிரச்னைகளை எந்தப் பூதக் கண்ணாடியையும் வைத்துப் பார்க்க முடியாமல் போயிற்று.

பட்டம் பெற்று வேலை கிடைக்கும் என்ற குருட்டு நம்பிக்கையில் இரண்டு வருடத்தை விழுங்கிய பின்தான் சும்மா வெட்டிப்பொழுதைக் கழிக்கிறோமே என்று கடந்த ஆண்டு மதுரை பல் கலைக் கழக அஞ்சல் வழிப் பாடத் திட்டத்தில் சேர்ந்து எம். ஏ(ஆங்கிலம்) படித்துக் கொண்டு வருகிறேன்.


ஆகநான் பயின்ற துறைக்கும் (விஞ்ஞானம்) இப்போது பயிலும் துறைக்கும் (கலைப் பிரிவு) எந்த விதச் சம்பந்தமுமில்லாமல் வருங்காலம் என்னவென்று புரியாமல் ஒளி மயமான எதிர்காலத்துக்காகக் காத்திருக்கிறேன்.


-ஆர். வி. ரமணன்

தபால் கார்டின் முப்பதாண்டு பயணம்!

சவுத் இந்தியா கோவாபரேட்டிவ் இன்ஷுரன்ஸ் சொஸைட்டி, 82-பி மவுண்டு ரோடு, சென்னையிலிருந்து சேலம் ஜில்லா அங்கிநாயனப்பள்ளியைச் சேர்ந்த ஆசிரியர் திரு டி. கே. நாகராஜன் என்பவருக்குச் சேர வேண்டிய மூன்று ரூபாய் பன்னிரண்டு அணுவுக்கான போனஸ் சர்ட்டிபிகேட் மார்ச் மாதம் 1953ம் ஆண்டு போஸ்ட் செய்யப்பட்டிருக்கிறது. இந்த முக்கால் அணு கார்டு கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகள் பிரயாணம் செய்தும் கடைசியில் அனுப்பியவருக்கோ அல்லது விலாசதாரருக்கோபோய்ச் சேரவில்லை. மாறாக, அந்த விலாசத்தில் தற்போது இருக்கும் ஒரு வங்கியின் அதிகாரிகளுக்கான கல்லூரிக்கு ஜூன் 1982ல் வந்து சேர்ந்திருக்கிறது.

—கலாமூர்த்தி.





நிலவு தாலாட்டும் சிந்து நதிக் கரை.


'ஆ' என்று வாய் பிளக்கும் அளவுக்கு அது பரந்து விரிந்து ஒரு நீண்ட சரித்திரம் போல நெடு வழிப் பயணம் செய்கிறது.

உலகமே அஞ்சும் மாவீரன் அலெக்ஸாந்தர், சிந்து நதியைக் கண்டு அஞ்சி அலறி ஆச்சரியத்தோடு நோக்குகிறான். இதனை எவ்விதம் கடப்பது?

எல்லாப் பாதைகளையும் தனது பாதைக் குட்படுத்திய ராட்சஸ வீரன் சிந்து நதியைக் கண்டுசிந்தாகுலம் அடைகிறான். இதனை எவ்விதம் கடப்பது?

உலகின் புயல்களில் நான்தான் பெரும் புயல் என்று திசைகளுக்குக் காய்ச்சல் ஊட்டியவன், தனக்கே காய்ச்சல் உண்டு பண்ணி விட்டதே

படகுப்



இந்தச் சிந்து நதி! இதனை எவ்விதம் கடப்பது?

சிந்து நதிக்கரையில் நின்று தனது மண்டையைப் பிய்த்துக் கொள்கிறான் கிரேக்க மாவீரன் அலெக்ஸாந்தர். அதே நேரத்தில் அவனது மண்டைக்குள் இன்னும் ஒன்று குடையோ குடை யென்று குடைகிறது...

அந்த ஒன்று....

பேராழி ஜ்வாலா...

உலகத்தையே தனது ஒரு குடை நிழலில் பார்க்க வேண்டும் என்று முதல் பேராசை கொண்டவன் அலெக்ஸாந்தர்.

கி. மு. 356ல் பிறந்த இவன், ஏன்தான் பிறந்தானோ என்று பின்னாளில் உலகமே மருண்டு முனகிய இவன், கிரேக்கரின் வழிவழி விரோதிகளான பாரசீகரை முறியடிக்கக் கர்ஜிக்கிறான்.

ஆசியக் கண்டத்துக்குள் அந்தச் சூறைக் காற்று நுழைகிறது.

சிரியா, எகிப்து, அடிபணிகின்றன. ஆர்பேலா என்னும் இடத்தில் பாரசீகச் சக்கரவர்த்தியாய் விளங்கிய மூன்றும் டேரைஸ் வீழ்ந்து பட்டான். பின்னர் நடு ஆசியாவிலுள்ள பாக்டிரியா என்னும் பாரசீக மாகாணம் பணிந்து நின்றது. அங்கே கிரேக்கர்களைக் குடியேற்றிய அவனது யுத்த வெறிக் கண்கள், நாவலந்தீவின் மீது (இந்தியாவின் மீது) நாட்டம் கொள்கின்றன.

வழிநெடுகப் பலரை விழி பிதுங்க முறியடித்து, சிந்து நதிக் கரையை அடைகிறான்.

காட்டிக் கொடுக்கும் கயவர்கள் — கருங்காலிகள் எந்தக் காலத்தில்தான் இல்லை? எந்த நாட்டில் தான் இல்லை?

அலெக்ஸாந்தரின் நாவலந்தீவு விஜயத்தின் போது, பலர் அவனது அடிவருடி

பாவம்

கோவி.மணிசேகரன்



நின்றனர்.

அவர்களுள் குறிப்பிடத் தக்கவன் சரித்திரச் சிம்பிடித்து நின்ற சசிருப்தன், தனது அமோகமான எதிர்கால வாழ்வுக்காக அவன் எதையும் செய்யத் துணிந்து வழி காட்டினான். அலெக்ஸாந்தர் வெற்றிக்குப் பிறகு வடதிசையையே தன் வாழ்வின் திசை என்று அற்பமான கனவு கண்டவன். அவனது அருமைமிகு காதலிதான் ஜ்வாலா.

காமதேவன் ஆலயத்துத் தங்கரத வெள்ளோட்டம் போன்ற இளமையும் அழகும் படைத்த ஜ்வாலாவைக் கண்டு, அந்தப் பெரும் புயல் புன்னகை புரிகிறது.

பாரசீகத்தை வென்றது பெரிதோ? அந்தப் பாரசீக ரோஜாவைப் போல் இதழ்விரித்து அழகுகாட்டும் இந்த ஜ்வாலா.... பொன்னும் மணியும் நிறைந்த தனது அரியாசனம், இவளது அழகாசனத்துக்கு முன்னே....

ஓ....ஜ்வாலா....

இவள் சசிருப்தன் காதலியாக இருக்கிறாள்.

இல்லையென்றால்.....

தன்னுடன் அழைத்து வந்த நூற்றுக் கணக்கான கிரேக்க அழகுப் பெட்டகங்கள்...

எழிலரசிகள் மூளிவிடும் எலிப்து மண்ணிலிருந்து பறித்து வந்த எத்தனையோ புஷ்பங்கள்....

பாரசீகத்தில் பறித்து வந்த எத்தனையோ விதவிதமான மலர்கள்...

எல்லாரையும் விழுங்கி ஏப்பம் விடத்தக்க அழகு. இந்தச் சிந்து நதிக் கரையில் பூத்த ஜ்வாலாவின் பேரழகு! இது அழகல்ல:அதற்கு ஏதோஒரு பெயரைச் சூட்ட வேண்டும் என்று அந்த மாவீரனுடைய அறிவு, அகராதியைப் புரட்டுகிறது.

"சசிருப்தனில்லையா?'' என்று கேட்டுக் கொண்டே கூடாரத்தினுள் நுழைகிறான் அலெக்ஸாந்தர்.

ஒரு மரியாதையை முன்னிட்டு அவள் எழுந்து நிற்கிறாள். அலெக்ஸாந்தர் கொஞ்ச நாட்களாகத் தன்னைக் கவனித்து வருகிற போக்கினை அவள் முற்றுமாக உணர்ந்து வருகிறாள்.

இப்படி ஒரு கருங்காலிக்குக் காதலியாக இருப்பதை விட, பின்னால் அவனை மணப்பதை விட, ஓர் உலக மகா வீரச் சக்கரவர்த்திக்கு ஆசைநாயகியாக இருப்பதில் மகோன்னதப் பெருமை இருக்கிறதல்லவா? கழுதையின் முதுகில் அமர்ந்திருக்கும் ஈயை விட சிங்கத்தின் வாலில் அமர்ந்திருக்கும் கொசுவுக்கு ஒரு மரியாதை இருக்கிறதல்லவா?

ஆயினும் அலெக்ஸாந்தர் அந்நியன்.

இந்த மண்ணுக்குரிய முல்லை, கிரேக்க மண்ணில் மணக்காது.

மானுஷ்யம் ஒன்றுதானாலும் அதன் மாறு பாடுகள் அநேகம்.

''உட்கார் ஜ்வாலா!''

அலெக்சாந்தர் ஓர் இருக்கையில் அமர்ந்து கொள்கிறான். அவள் நின்று கொண்டு இருக்கிறாள். இந்த மண்ணுக்குரிய மரியாதைப் பாடம் அது.

''கிரேக்க சக்கரவர்த்திகளே நான் ஒன்று கேட்பேன்.''

''கேள் ஜ்வாலா!''

''நீங்கள் என்மீது கொண்டிருக்கும் ஆசை அநியாயமானது.''

''ஜ்வாலா!''

''நான் அடுத்தவன் காதலி.''

''மனைவியாகவில்லையே!''

''மனைவியேயானாலும் சசிகுப்தன் நீங்கள் கேட்டால் மறுத்துவிட மாட்டார். தாயினும் மேலான நாட்டையே காட்டிக் கொடுக்கிறபோது, எத்தனை மனைவிகளையும் பெறலாம் என்கிற மனைவி ஸ்தானம் பெரிதா?''

கர்ஜனை போன்று பெரு நகை புரிகிறான் அலெக்ஸாந்தர்.

''ஏனிந்தக் கிரேக்கச் சிரிப்பு? இது சிந்து நதிக் கரை....''

அயர்ந்து போகிறாள் அலெக்ஸாந்தர்.

''ஜ்வாலா! சசிகுப்தனும் கொடுப்பான்; அவனைக் கேட்காமலேயே உன்னைப் பறிக்கவும் என்னால் முடியும். அன்புடன் பரிமாறுகிற விருந்தில் ஆனந்திப்பவன் நான். உடம்பில் ஒட்டாததுகள் இங்கே ஏராளமாக என்னுடன் வந்திருக்கின்றன. ஒன்று: சசிகுப்தன் மனமாற உன்னை எனக்கு அளிக்க வேண்டும். இரண்டு: நீ உன்னை எனக்கு மனப்பூர்வமாக ஒப்படைக்க வேண்டும்.''

அதுவரையிலும் கூடாரத்து வெளிப்புறத்தில் நின்று செவிகளுக்கு வேலை கொடுத்திருந்த சசிகுப்தன், உள்ளே நுழைந்து, மண்டியிட்டு கிரேக்க முறைப்படி வணங்கி, ''மனப்பூர்வமாக ஜ்வாலையை உங்களிடம் ஒப்படைக்கிறேன் பிரபோ!'' என்கிறான்.

அலெக்ஸாந்தர் மகிழ்ந்து கொள்கிறான்.

ஜ்வாலாவின் கண்களில் ஜ்வாலை.

யார்?

''அனுராதா ரமணனின் 'மேடை ராஜாக்கள்' நல்ல சிறுகதை., படித்து முடிக்கையில் பத்து வயது குறைந்தது போன்ற உணர்வு ஏற்பட்டது. முடிவு இளமைக் கதைக்கு ஏற்றதாயிருக்கலாம்; ஆனால் இலக்கிய சிந்தனைக்கு ஏற்றதல்ல; நிஜ வாழ்க்கையில் அப்படி ஒரு பெண் செய்தால் அவளை இரண்டுங்கெட்டான் என்பார்கள். எனவே இந்தக்கதையை 'சிறந்த கதை'யாய்த் தேர்ந்தெடுக்காது தள்ளுபடி செய்கிறேன். ஆனாலும் கதாசிரியருக்கு என் பாராட்டுக்கள்.''

இப்படி இலக்கியச் சிந்தனைக் கூட்டத்தில் பேசியது யாராயிருக்கும்? அடுத்த பக்கம் பார்க்க! —தகவல்: சந்திரமௌளி

''பிரபோ! இரண்டாவதாகக் குறிப்பிட்ட சமாச்சாரம் அவளுக்குரியது. நான் வற்புறுத்தலாம். இசைவது ஜ்வாலையின் விருப்பத்தைப் பொருத்தது.'' என்று கூறிய வண்ணம் எழுந்து கொள்கிறான் சசிகுப்தன்.

ஜ்வாலா நெருப்பு ஜ்வாலையாய்ச் சிரிக்கிறாள். ''கிரேக்க மகா சக்கரவர்த்தி! சசிகுப்தன் தனது பேச்சில் இரு முறை ஜ்வாலை என்றே குறிப்பிட்டான். நான் ஜ்வாலை! அவ்வளவு எளிதில் நெருங்கிவிட முடியாது. தீயணைக்கும் பலாத்காரத்தில் மகா வீரரும் மகா அறிவுஜீவியுமான நீங்கள் இறங்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். உங்களைக் காட்டிலும் உங்களுக்கு அறிவு புகட்டிய மேதை அரிஸ்டாட்டிலை அறிவேன். அந்த மாமேதையிடம் அறிவு பயின்றவர்கள் நீங்கள். அத்து மீறினால், அது அரிஸ்டாட்டிலுக்கு அவமானம்.''

அவள் கூடாரத்து ஓரமாகச் சென்று திரும்பிக் கொண்டாள்.

அலெக்ஸாந்தருக்கு ஓர் அதிர்ச்சி.

சசிகுப்தனை தன்னை 'அவன் இவன்' என்று மரியாதைக் குறைவாகப் பேசிவிட்டாளே என்கிற ஆத்திரம்.

வானில் நிலவு சிரிக்கிறது.

சிந்து நதிக் கரை யோரத்தில் எத்தனை நாட்களுக்குத்தான் இந்த முற்றுகை நீடிப்பது?

ஏக்கப் பெருமூச்சோடு மந்திராலோசனையில் அமருகிறான் கிரேக்கத்து அரிமா அலெக்ஸாந்தர். அந்தப் பெருமூச்சோடு இன்னொரு பெருமூச்சும் மோதுகிறது. அது

ஜ்வாலா! அவள் கூறிய சொற்கள்:

''அந்த மாமேதையிடம் அறிவு பயின்றவர் நீங்கள். அத்துமீறினால் அது அரிஸ்டாட்டிலுக்கு அவமானம்.''

அறிவு சான்றோர் பலர் அலெக்ஸாந்தரைச் சுற்றியமர்ந்து காணப்படுகிறார்கள். சரித்திரப்படி பார்த்தால், நாவலந்தீவின் அறிவு ஒருவித உயர்வில் தீபமேற்றியது என்றால், கிரேக்கத்தின் அறிவு ஒருவித உயர்வில் தீபமேற்றியது.

சிந்து நதியைக் கடப்பது எப்படி?

இதுதான் நெற்றிப் பொறியில் சுத்தியால் அடிக்கும் கேள்வி.

பலர் பலவிதமாக ஆராய்கிறார்கள்.

மகா சமுத்திரம் போன்ற சேனைகளை இந்தப் பெருநதியான சிந்துவைக் கடக்கச் செய்கிற உபாயங்கள் தெரியவில்லை.

அலை எப்போது ஓய்வது? தலை எப்போது முழுகுவது என்கிற மாதிரியான பதில்களே தலைதூக்குகின்றன.

அப்போது....

சிலம்பு சிரிக்க, சிருங்கார ரசம் சிரிக்க, இளம் நரம்பு தெறிக்க, இன்பக் கிறக்கம் வெறிக்க, கோடை இளங் காற்று போல் குளிரக் குளிர ஈர நிலா உள்ளே உதயமாகிக் கொண்டிருந்தது.

பகலிலும் நிலவு இவ்வாறு உதயமாகுமோ என்பன போன்ற பார்வைகள்.

ஜ்வாலா உள்ளே நுழைந்ததும் அலெக்ஸாந்தரை வணங்குகிறாள்.

எங்கே வந்தாள் இவள்?

புதிய
கோல்கேட் ஃப்ளோரிகார்ட் டூத்பேஸ்ட்



குழந்தைகளுடைய பற்களின் மென்மையான எனாமல் எளிதில் துவாரங்களுக்கும் சிதைவுக்கும் உள்ளாகிறது. பெரியவர்களுக்கும் பற்சிதைவுக்கு எதிராக பாதுகாப்பு தேவை.

புதிய ஃப்ளோரிகார்ட் டூத் பேஸ்ட் பல் துவாரங்களுக்கும், பற்சிதைவுக்கும் எதிராக உங்கள் குடும்பத்தினருக்கு நிச்சயமான பாதுகாப்பைத் தருகிறது. துவாரங்களையும், பற்சிதைவையும் உண்டாக்கும் வாய் அமிலங்களுக்கு எதிராகப் பற்களை உறுதிப்படுத்துவதற்கென பல் எனாமலுடன் இணைந்து செயல்படும் விசேஷ கோல்கேட் எம்.எஃப்.பி ஃப்ளோரைட் அதில் உள்ளது.

கோல்கேட் ஃப்ளோரிகார்ட் புல்லரிக்கும் புதுச்சுவை கொண்டது. உங்கள் குடும்பத்தினருக்கு இன்றே வாங்குவீர்.

MFP FLUORIDE

MFP FLUORIDE


உலகெங்கும் உள்ள ஆராய்ச்சிசாலைகளில் சோதிக்கப்பட்டுள்ள எம்.எஃப்.பி ஃப்ளோரைட் துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராகப் பற்களை உறுதிப்படுத்துகிறது என்பது மருத்துவ ரீதியாக நிரூபணமாகியுள்ளது. கோல்கேட்டின் தனி ஆராய்ச்சி மட்டுமே இந்த தனிப்பட்ட எம்.எஃப்.பி ஃபார்முலாவை உங்களுக்கு வழங்க முடியும்.



ஃப்ளோரிகார்டில் உள்ள எம்
எ.ஃப்.பி ஃப்ளோரைட் எனாமலுடன் இணைந்து துவாரங்களுக்கும்,
சிதைவுக்கும் எதிராக உங்கள் பற்களை உறுதிப்படுத்துகிறது.

தமிழ்நாடு, கேரள மாநிலங்களிலும், கர்நாடகத்தில் குறிப்பிட்ட சில மார்க்கெட்டுகளிலும் இப்போது கிடைக்கும்.

CFT.G.3 TM


ஒவ்வொரு துளியிலும் தேர்ந்தெடுத்த தேங்காய்களின் நறுமணம்!
Yendelux
coconut oil
என்டிலக்ஸ்
தேங்காய் எண்ணெய்
மு. மு. நாகலிங்க நாடார் சன்ஸ்
கொல்லம்—கேரளா
ஆபீஸ் : 2244, 4484, மில்ஸ் ; 2266, 4611
DISTRIBUTORS FOR TAMIL NADU
M. M. NAGALINGA NADAR
VIRUDHUNAGAR.Phone : 3107, 3745.

சசிகுப்தன் கண்களில் ஜ்வாலை.

அவனை, 'ஏ, அற்பப் புழுவே!' என்பது போல் நோக்குகிறுள் ஜ்வாலா.

''கிரேக்க மகா வீரரே! சிந்து நதிக் கரையைக் கடக்க மார்க்கம் சொன்னுல் எனக்கு என்ன தருவீர்கள்?''

துணிந்து கேட்ட கம்பீரமான கேள்வி.

ஒரு கணம் யோசிக்கிறுன் அலெக்ஸாந்தர்.

''ஜ்வாலா! எனது இந்த நாடு பிடிக்கும் லட்சியம்; எனது நாடு; எனது கௌரவம் இவற்றைத் தவிர எதை வேண்டுமானுலும் கேள்.''

''அவ்வளவு பெரிய விஷயங்களையெல்லாம் நான் கேட்டுவிட மாட்டேன். பயப்படாதீர்கள். இரண்டே இரண்டு சின்ன விஷயங்களை யாசிப்பேன், கொடுப்பீர்களா?''

''கேள் ஜ்வாலா! சத்தியமாகக் கொடுப்பேன். சிந்து நதிக் கரையைக் கடக்கிற உருப்படியான சிந்தனையாக அது இருக்க வேண்டும்.''

''நிச்சயமாக இருக்கும்'' என்று கூறிய ஜ்வாலா விளக்குகிறுள்.

''ஆயிரக் கணக்கான படகுகள் தேவைப்படும். அந்தப் படகுகள் ஆழமுள்ளவையாக இருக்க வேண்டும்.''

இடைமறித்தான் அலெக்ஸாந்தர்.

''நாங்களும் இது குறித்து யோசித்தோம். படகுகளில் சேனைகளையும் தளவாடங்களையும் மிருகங்களையும் ஏற்றுவது சாத்தியமாகத் தெரியவில்லை.''

''கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள். ராஜதந்திரம் எங்கள் நாட்டுக்கே உரியது. நான் சசிகுப்தனின் காதலியாக விதி வசமாக அகப்பட்டுக் கொண்டிருக்கலாம். ஆனுல் ஒரு மகா ராஜதந்திரியின் மாணவி! உங்கள் அரிஸ்டாட்டிலை விட மிகப்பெரிய அறிவாளி. அவர் பெயரை இங்கே குறிப்பிட்டு அவரை நாணப்படுத்த நான் விரும்பவில்லை.''

''யார் அவர் ஜ்வாலா?''

''தேவையில்லை. அவரால் இந்த நாட்டுக்கு நடைபெற வேண்டிய காரியங்கள் பல இருக்கின்றன. அநியாயமாய் நீங்கள் அவரைக் கடத்தக் கூடாதல்லவா? நான் என்ன சசிகுப்தனைப் போன்று துரோகியா?''

''ஜ்வாலா! சொல்ல வேண்டியதைச் சொல்லி முடிக்கலாம்.''

''ரொம்பவும் சாதாரணம். ஆழமான படகுகளை ஆயிரக் கணக்கில் செய்து அவற்றைக் கவிழ்த்துப் போட்டு, மரப் பலகையினுல் பாலம் நிர்மாணிக்க வேண்டும். அந்தக் கரைக்கும் இந்தக் கரைக்குமாக அமைத்துப் பெருத்த கயிறுகளை இரு முனைகளில் கட்டி மரங்களில் கட்டிவிட்டால் ஒதுங்காது. அந்தப் பாலத்தின் மீது சேனைகளைச் சிறுகச் சிறுகச் செலுத்தி அக்கரையடைந்து விடலாம்.''

அந்தக் கூட்டமே மூக்கின் மீது விரல் வைக்கிறது.

''இப்போது நான் கேட்ட இரண்டை யாசிக்கலாமா கிரேக்கச் சக்கரவர்த்தி?''

''தாராளமாக யாசிக்கலாம்.''

''ஒன்று எனது கற்பு.''

ஒரு கண யோசனை.

விடை: அனுராதா ரமணனேதான்!



பின் தங்கிய நாடுகளுக்குச் செல்கிறீர்களா — அங்கே தண்ணீர் குடிக்காதீர்கள்; அசுத்தமானதாக இருக்கும்.

முன்னேறிய நாடுகளுக்குச் செல்கிறீர்களா அங்கே சுவாசிக்காதீர்கள்? காற்று அசுத்தமாக இருக்கும். -ராமுசாமி

''அதற்குப் பங்கமில்லை. நீ உன் வழியில் செல்லலாம். இரண்டாவது?''

மிடுக்காக சசிகுப்தனை நோக்குகிறுள்.

கொலை செய்யப் போகிறுளோ...

ஒரு பெண் சிங்கத்தின் நடையே போன்று சசிகுப்தன் அருகில் சென்ற அழகி ஜ்வாலா...

அவனது இடுப்பிலிருந்த குத்துவாளை உருவுகிறுள்.

''ஜ்வாலா....''

கத்துகிறுன் சசிகுப்தன்.

''ம்! சத்தம்! கிரேக்கமா சக்கரவர்த்திகளின் ஆணை!''

வியர்த்துக் கொட்டுகிறது சசிகுப்தனுக்கு.

அலெக்ஸாந்தர் கூட அரண்டுமருண்டு கவனிக்கிறுர். என்ன நடக்குமோ?

கையிலிருந்த குத்துவாளுடன் சசிகுப்தனை அக்கினி ஜ்வாலையாக நோக்குகிறுள்.

''கோழையே! உன்னைக் குத்துவதால், இந்தக் குத்துவாளை நான் அவமதித்ததாகும்! இது எனது நாட்டில் தயாரான குத்துவாள். உனக்குத் தண்டனை....''

ஒரு கணம் யோசனை.

''தூ!'' என்று காறி உமிழ்கிறுள்.

சசிகுப்தன் முகம் முழுவதும் எச்சில்.

அலெக்ஸாந்தரைக்கவனித்தஜ்வாலா, ''சக்கரவர்த்திகளுக்கு என் நன்றி'' என்று கூறியவள் குத்துவாளை இடுப்பில் பாதுகாப்புக்காக வைத்துக் கொள்கிறுள். ''எனக்கு எந்தவித மான இடையூறும் ஏற்படாது என்று நம்புகிறேன் சக்கரவர்த்திகளே!''

அவள் தனது திசை நோக்கி நடக்கிறுள். சிலம்பு சிரிக்கிறது; சிருங்காரம் மறைகிறது!

ஓ.... இவள்தான் இந்த மண்ணுக்குரிய பெண்ணே?

வியந்து நோக்குகிறுன் வீரபுத்திர செல்வன் அலெக்ஸாந்தர்.



உங்கள் அழகுக்கு அழகூட்டும் குங்குமம்

புதிய சுமங்கலி டீலக்ஸ் குங்குமம்

இன்று தன் இயற்கை எழிலை எந்த மங்கையும் மேலும் பொலிவுறச் செய்யலாம். உங்கள் ஒப்பனைக்கு மேலும் மெருகூட்டுவது சுமங்கலி குங்குமம்.

கொஞ்சம்கூட வெளியே சிந்தாத சிறந்த பாக்கிங்கில் வரும் குங்குமம் அது ஒன்றே. ஆகவே அது உங்கள் கைப்பையிலோ அல்லது டிரஸ்ஸிங் டேபிள் மேலோ வைத்துக்கொள்ள உகந்தது. சுமங்கலி உங்களுக்குப் பிடித்தமான பலவித வண்ணங்களில் கவர்ச்சியான ஜாடிகளிலும், பௌடர் உருவிலும் மற்றும் டீலக்ஸ் பர்ஸ் பாக்கிங்குகளிலும் கிடைக்கிறது.



டீலக்ஸ் ● குங்குமம்

சுமங்கலி

ஒரு கேசவர்த்தினி தயாரிப்பு

OBM 4952 TM

ராஜா வேத காவ்ய பாடசாலை

ஸ்தாபிதம் : 1542

கும்பகோணம்

உபநயனம் ஆன

7 வயதுக்கு மேற்படாத அந்தண சிறுவர்களை சேர்த்துக் கொண்டு ரிக், யஜுர், ஸாம வேத அத்யயனமும், காவ்யம், இங்கிலீஷ், தமிழ், கணிதம் முதலிய பாடங்களும், சொல்லி வைக்கிறோம். உபநயனம் செய்ய முடியாதவர்களுக்கு இவ்விடமே உபநயனம் செய்விக்கிறோம். ரிக் வேதம், ஸாம வேதத்திற்கு சேரும் வயது 9க்குள் இருக்க வேண்டும். குழந்தைகளுக்கு ஆகாரம் முதலிய ஸகலஸௌகர்யங்களும் செய்து தருகிறோம்.


(1) கோத்ரம், (2) ஸூத்ரம், (3) எந்த வேதம், உபநயனம் ஆகிவிட்டதா? வயது, இங்கிலீஷ், தமிழ் பிறந்த தேதி ஜாதகத்துடன், தாய், தந்தை, கார்டியன், பெயர், தொழில், விலாஸம் முதலிய விபரங்கள் தெளிவாய் எழுதி ஒரு ரூபாய் தபால் தலையுடன் ஜூன் மீ 30 தேதிக்குள் விண்ணப்பித்துக் கொள்ள கோருகிறோம்.

விபரங்களுக்கு

சேர்மன்

ராஜா வேத காவ்ய பாடசாலை

கும்பகோணம்



● இன்று குருவாரம். (வியாழன்). காலையில் எழுந்ததும் மகா குருவின் திவ்விய தேஜஸுடன் கூடிய படத்தை கல்கி அட்டையில் கண்டதும் மனம் புளகாங்கிதம் அடைந்தது. அட்டைப் படத்தைப் பார்த்த வண்ணமே இருக்கத் தோன்றியதே தவிர இதழைப் புரட்டத் தோன்றவில்லை.
சென்னை-4 வெ. முத்துகிருஷ்ணன்

● கருணைக் கடல் காஞ்சிப் பெரியவாளின் கருணை முகத்தை அட்டையில் பார்த்தும், உள்ளே அவரது வெவ்வேறு அருள் முகங்களைப் பற்றிப் படித்தும் பரவசமடைந்தேன். குழப்பமான இந்தச் சூழ்நிலையில் மக்களுக்குத் தேவையான ஆன்மிக எழுச்சியை வளர்க்கிறீர்கள்.
சென்னை-5 எஸ். வி. சேகர்

● தலையங்கத்தில் சாகித்ய அகாதமியின் நடைமுறைகளில் குறைபாடுகள் இருப்பினும், அது சரியான முறையில் பணியாற்றுகிறதா என்று கணிக்க மேலும் சில காலம் அவகாசம் அளிக்க வேண்டுமென்கிற தங்களின் கருத்தை வரவேற்கிறேன். ஆனால், அரசியல் என்பது நுழைந்து ஆட்டி வைக்கிறபோது அகாதமி போன்றவை நேர்மையுடனும் திறமையுடனும் நடக்க வழி இருக்கிறதா?
செங்கவல்லி கி. முருகவேள்

● ஹலோ மெட்ராஸ் பலே என்று பாராட்டும்படி இருந்தது. ஆனால் 'ஏ.வி.எம். சரவணன் மன்னிப்பாராக' என்று போட்டிருந்தது ஏன் என்று மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டதுதான் மிச்சம்.
வடகாடு கே. என். செல்வரத்னம்

✱ 'ஹலோ மெட்ராஸ்' என்ற பெயர் தாங்கிய சுற்றுலா பயணிகள் பத்திரிகை அவருடையது. -ஆர்

● கல்கி இதழில் கூட தலைப்பு எழுத்தில் தவறு உண்டாகிறதே? ஏன்? நீங்கள் கேட்டவையில் 'ங்'ல் புள்ளி இல்லையே? ஒருவேளை புள்ளி இல்லாத இதழ் கிடைத்தவருக்கு எல்லாம் ஏதாவது பரிசு உள்ளதா?
பெரியகுளம் 'பிடிவி'

● 'தேவை ஒரு பார(ர்)வை', போன்ற மட்டமான கதைகளை இனிமேல் வெளியிடாதீர். அது ஒரு சிரிப்புக் கதையா? சிரிப்பு வரவில்லை. சீற்றம்தான் வந்தது கதை எழுதியவர் மீது!
சென்னை-45 கே.எஸ். கணபதி சுப்ரமணியம்

● 'ஜோக்கில்லாத ஜோக்' போட்டியை வேறு பக்கத்தில் வெளியிடக் கூடாதா? 'ரவிகுல திலகன்' தொடரின் இடையே போட்டிருக்கிறீர்களே! அதை மட்டும் தனியாகக் கிழித்து அனுப்ப நான் இந்த வாரம் இரண்டு 'கல்கி' இதழ்கள் வாங்க வேண்டியதாயிற்று!
600 035 ஜி. பூபால் சிங்

● வேகவுக்கு ஒரு ஞானத் திருப்புகழ் ஒரு புலவர் பாடியிருக்கிறார் என்ற அதிசயச் செய்தியைப் புலவர் கீரன் அவர்களின் 'இலக்கியத்தில் இறையுணர்வு' என்ற அற்புதக் கட்டுரை வாயிலாக அறிந்து கொண்டேன்.
வடதூர் வெ. லட்சுமி நாராயணன்

● படிக்கும் காலத்தில் விஞ்ஞானத்தை வெறுத்த என்னைப் போன்ற பலருக்கு 'விஞ்ஞானப் பக்கங்கள்' எளிமையாக, புதிய புதிய கண்டுபிடிப்புக்களைப் பற்றி வாரா வாரம் அறிந்துகொள்ளத் துணை புரிகின்றது.
உடுமலைப்பேட்டை ஏ. சாகுல் அமீது

● 'ஆயிரம் ஆயிரம் அள்ளிக் கொடுத்தாலும் அனுசரணையும் வேண்டும்! காசைக் கொடுத்து மனசை வாங்க முடியாது! தொழிலாளர்களோட பாக்கெட்டை நிரப்புவதோடு நிக்காம அவங்க மனசிலேயும் நிறையணும்!' — ''புன்னகையின் பொருள்'' பற்றி சுவைபடத் தன் சிறுகதை மூலம் விளக்கம் தந்த ஜெரா அவர்களை ஜோராகப் பாராட்டியே தீருவேன்!
மதுரை-1 பி. எல். பரமசிவம்

● ஸ்ரீ நா. கண்ணன், 6.6.82 கல்கியில் ரா. முருகேசன் கடிதத்தைச் சாடுகிறார். அமெரிக்காவிலும் ஜெர்மனியிலும் Sociologyயின் முக்கியத்துவத்தை அறிந்திருக்கலாம். ஆனால் நம் இந்தியாவில் (ஸ்ரீ கண்ணன் மாதிரி) வாயளவில் போற்றுவார்களே தவிர மதிப்பாரில்லை.உபயோகிப்பாரில்லை. இதைத்தான் ரா. முருகேசன் வலியுறுத்தியிருக்கிறார். 'கடை விரித்தோம் — கொள்வாரில்லை' என்பதைத்தான் வருத்தத்தோடு சுட்டிக் காட்டியிருக்கிறார்.
வேலையில்லாமல் போனால் அவர் படித்ததற்குத்தான் என்ன பயன்? மற்ற துறைகளிலும் வேலை கிடைப்பதில்லை என்றால் Sociologyயும் மற்ற படிப்புகள் போல் ஒன்று என்பதைத்தான் காட்டுகிறதே தவிர அதன் தனிப் பெருமை ஒன்றும் வெளியாகவில்லை.
சென்னை-17 கே. நடராஜன்

● நடுத்தரக் குடும்பங்கள் பணக் கஷ்டத்துக்கு ஆளாகாதிருக்க காப்பிப் பழக்கத்தை விட்டொழியுங்கள் என்று உபதேசிக்கும் ஆசாரிய சுவாமிகள் தமது மடத்தில் காப்பிப் பழக்கத்துக்கு ஏற்பாடு செய்தார் என்று தராசு பதிலில் கூறியிருப்பதைக் கண்டு திடுக்கிட்டேன்.
சென்னை-35 எஸ்.வி.எஸ்

[மேற்படி சம்பவம் ஆசாரியரை நன்கு அறிந்த ஒருவர் கூறியது. அதைச் சந்தேகிக்க இடமில்லை. காப்பி பழக்கம் இல்லாதிருப்பது ரொம்ப நல்லதுதான். ஆனால் அதைவிட முடியாத சிலரிடம் பெரியவாள் காட்டிய கருணையைக் கவனித்தால் திடுக்கிட இடமிராது. -தராசு]

23

அன்று காலை சந்தியாவுக்குப் பள்ளிக்கூடம் துவங்கியதும் தொடர்ந்து மூன்று வகுப்புகளுக்குப் போதிக்க வேண்டியிருந்தது. அதற்குப் பின்னர் ஓய்வு நேரம். சாதாரணமாக அவள் தனது ஓய்வு நேரத்தில் அடுத்தபடியாக அவள் எடுக்கவேண்டிய வகுப்புப் பாடங்களைப் பற்றிக் குறிப்புகள் .தயார் செய்து கொண்டிருப்பாள். அது சமயம் ஆசிரியைகளின் அறையில் ஓய்வு நேரம் காரணமாக உட்கார்ந்திருக்கும் மற்ற எவருடனும் அவள் வம்பு பேசும் வழக்கம் கிடையாது. இந்த ஒரு காரணத்துக்காகவே அவள் மீது சில ஆசிரியைகளுக்கு எரிச்சல்; சில இளம் ஆசிரியைகளுக்கு மதிப்பு. 'சந்தியா டீச்சர் போல இருக்கணும். தான் உண்டு தன் வேலையுண்டுன்னு எப்படிக் கட்டுப்பாடா இருக்காங்க? தங்களுக்குள் பேசிவியப்பது உண்டு.

அப்படி அவள் தன் வேலைவரை ஒரு நல்ல பெயரைத்தான் இதுநாள்வரை தேடிக் கொண்டிருந்தாள். இப்பொழுது தான் அந்த மொட்டைக் கடிதத்தின் பின் தலைவியின் பெரும் அதிருப்திக்கு ஆளாகிச் சில்லரைத் தொந்தரவுகளை அனுபவித்துக் கொண்டிருந்தாள். கொடுக்கப்பட்ட வேலைகள் அனைத்தையும் விரைவாக செவ்வனே செய்து முடித்தாலும் தலைவி அவ்வப்போது அவளைத் தன் அறைக்கு வரவழைத்துக் குற்றங்களைச் சுட்டிக் காட்டிக்கொண்டிருந்தாள். ஊசியாகக்குத்தி அவளை இம்சை செய்வது தலைவிக்கு ஒரு பொழுது போக்காகி விட்டிருந்தது. ஆனால் சந்தியா சிறிதும் சளைக்கவில்லை. ஒவ்வொரு கேள்விக்கும் தக்க பதிலளித்துத் தலைவியைத் திணற அடித்துக் கொண்டிருந்தாள்.

அன்று காலை ஓய்வு நேரத்தில் ஆசிரியைகளின் அறைக்குள் நுழைந்த போது ஒரு மூலையிலிருந்து லேசாக விசும்பல் சத்தம் கேட்டது. திடுக்கிட்டுத்திரும்பினாள். ஓராண்டு காலமாக அந்தப் பள்ளிக்கூடத்தில் வேலை பார்த்துக் கொண்டிருப்பவள் மீனு. காலியாகிவிட்ட சரித்திர ஆசிரியையின் இடத்தில் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்தவள். அவள் தான் விசும்பிக் கொண்டிருந்தவள். பள்ளிக்கூட ஆசிரியைகள் அனைவரிலும் வயதில் சிறியவள். அனுபவம் குறைந்தவள். தலைவியின் தாக்குதலைத் தாங்க மாட்டாது அழுகிறாள். சந்தியாவுக்குப் புரிந்து விட்டது.

ஒரு பள்ளிக்கூடத் தலைவி வயதிலும் அனுபவத்திலும் பெரியவளாக இருப்பாள். மற்ற இளம் ஆசிரியைகளுக்கு அந்த வகையில் அன்புடன் ஆதரிக்கும் ஒரு தாய்க்கு ஒப்பானவள். அன்பும் ஆதரவும் கிடைத்தால்தான் ஆசிரியைகள் எல்லாம் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போல ஒன்றி சிறப்பாக வேலையைக் கவனிக்க இயலும்.



ஆனால் தலைவி சீராக அமையாவிடில் நவக் கிரகங்கள் போல் ஆசிரியைகள் வக்கரித்துக் கொண்டு போட்டியும், பொறாமையுமாக அடுத்தவளுக்குக் குழி பறிப்பதில் கண்ணாக இருந்தால் அனுபவம் இல்லாத பயந்த

சாதாரண மனிதன்

'லக்ஷ்மி'



சுபாவமுள்ள இளம் ஆசிரியைகளின் பாடு கஷ்டம்தான்.

சந்தியா மனம் கரைந்து போனாள். மெல்ல மீனாவை அணுகித் தோளைத் தட்டினாள்.

''என்ன நடந்தது? ஏன் இந்த அழுகை?'' அன்பாக விசாரித்தாள். மீனாவுக்குப் பேச முடியாது தொண்டையடைத்துக் கொண்டு துக்கம் குமுறியது.

''நீடிச்சு என்னால் இங்கே வேலை செய்ய முடியாதுன்னு நினைக்கிறேன். தலைவி ஏன் இப்படி எதற்கெடுத்தாலும் எரிச்சல் படுறாங்க... போன டெஸ்டில் என் வகுப்பு மாணவிகள் இங்கிலீஷில் ரொம்பக்குறைந்த மார்க் வாங்கியிருந்தாங்க. அதுக்கு தலைவி என் போதனைத் திறமை குறைவுன்னு குற்றம் சாட்டிக் கத்தறாங்க.''

''தனியாக் கூப்பிட்டுத் திட்டாம, பியூன் முன்னாடிக் கத்தியிருக்காங்க இல்லையா?''

''எப்படி உங்களுக்குத் தெரியும்?'' அழுகையை விட்டு அதிசயமாக அவளைப் பார்த்தாள்.

''உன்னைவிட சீனியர் டீச்சர் என்கிறமுறையிலே அவங்க பழக்க வழக்கங்களை நல்லாவே புரிஞ்சுக்கிட்டிருக்கேன்.''

''என் வகுப்பு மாணவிகள் பலர் ஆங்கிலம் படிக்க எழுத ரொம்பக் கஷ்டப்படுறாங்க.''

''அது உன் பிசகில்லே. அடிப்படை ஆங்கிலக் கல்வி அதிகமில்லாத பல மாணவிகளை ஒட்டு மொத்தமாக ஒரே பிரிவில் குவிச்சுட்டது தலைவியின் தப்பு. எல்லாப் பிரிவு வகுப்புகளிலும் அவர்களைப் பரவலாக அனுமதிச்சிருக்கணும். அப்போ இப்படி பளிச்சினு 'மாதப் பரீட்சை முடிவு மட்டமாக இருக்காது. நீ எடுத்துச் சொல்லியிருக்கணும்.''

''அதைச் சொல்ல எனக்குப் பயமாக இருந்தது.''

''அவங்களே உணர்ந்துக்கட்டும்னு அவங்க திட்டினதைக் காதிலே வாங்காம மௌனமாக இருந்துடறது இன்னொரு வழி.''

மீனா திடீரென்று அழுகையை விட்டுச் சிரித்தாள். ''டீச்சர், உங்க துணிச்சலை நான் ரொம்பப் பாராட்டறேன். எனக்கு எதிர்த்துப் பேசத் தைரியம் வர மாட்டேங்கறதே!''

''நமக்கு மேலே இருக்கிறவங்களுக்கு நாம் உரிய மரியாதை கொடுக்கிறது அவசியம். ஆனா அவங்க நம்மைப் புழுவா மதிச்சுக் காலடியில் போட்டு மிதிச்சா ஒத்துக் கொண்டு ஏமாளியா இருக்கக் கூடாது.''

''டீச்சர்... இவங்க பள்ளிக்கூடத்திலே எல்லார் கிட்டேயும் எரிஞ்சு விழறாங்களே—இதே போலத்தான் வீட்டிலேயும் நடந்துக்கிறாங்க.''

''அப்படியா? உனக்கு நம்ப தலைவியைப் பத்தி அதிகம் தெரிஞ்சிருக்கே?''

மீனா சுற்றுமுற்றும் பார்த்தாள். அவளது அழுத கண்களில் ஒரு தனி கள்ளத்தனம் பளிச்சிட்டது.

''கொஞ்சம் இவங்களைப் பத்தி எனக்குத் தெரியும். எடுத்து விட்டால் அம்மா

ஆடிப்போயிடுவாங்க. நான் சின்னவ. இந்த வாத்தியார் பிழைப்பை ரொம்பவே எதிர் பார்த்துக் கொண்டு வாழுறவ. வாயாடக் கூடாதுன்னு அவங்க திட்டினதை யெல்லாம் விழுங்கிக்கொண்டு வந்தேன்.''

தலைவி பயந்துபோகும் ஒரு ரகசியம் மீனுவுக்குத் தெரியுமா? அட எப்பேர்ப்பட்ட ஒரு ஆயுதம்! இதை அவனும் தெரிந்து வைத்துக் கொண்டால் மிகவும் உபயோகமாக இருக்குமே. ''மீனு உனக்கு மறுப்பு இல்லேன்னு சொல்லு கேட்டுக்கிறேன்.'' – மிகவும் ஆதரவாக அவள் தோள்களைக் குலுக்கினாள்.

''உங்க வயசிலே நம் தலைவி சேலத்திலே ஒரு பள்ளிக்கூடத்தில் நம்மைப் போல ஒரு ஆசிரியையாக வேலை பார்த்துக் கொண்டிருந்தாங்க. அப்போகூட இருந்த விதவைத் தங்கச்சி தன் நாலு வயதுக் குழந்தையை விட்டுட்டுத் திடீர்னு செத்துட்டாங்க. இந்தம்மாளுக்குத் தன் வேலைதான் பெரிசு. அந்தக் குழந்தை கிட்ட உட்கார்ந்து ஐந்து நிமிஷம் அன்பாப் பேசத் தெரியாது. பள்ளிக் கூடத்திலே தொண்டை காயக் கத்திட்டு வரேனே போறுதா? உன்னோட வேறே கத்தணுமான்னு கூச்சல் போடுவாங்களாம். எரிஞ்சு விழுவாங்களாம். ரொம்பத் தப்புக் கண்டு பிடிப்பாங்களாம்.''

''உனக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்?''

''என் பாட்டி சேலத்தைச் சேர்ந்தவங்க தானே? அப்போ இவங்களுக்கு எதிர் வீட்டிலே குடியிருந்தாங்களாம். நடந்தது எல்லாம் அந்தத் தெருவுக்கே தெரியுமாம்.''

''அந்தப் பையன் பெயர் சுகுமார் – பத்து வயசுக்குள்ளே பெரிய தத்தாரியாப் போயிட்டானும். படிப்பில் மகா மட்டம். சின்ன வயசிலேயே திருடவும் பொய் பேசவும் ரொம்பக் கத்துக் கொண்டு விட்டானும். ஒரு பெரிய திருட்டிலே கையும் களவுமா அகப்பட்டுக் கொண்டு அது பெரிய கேஸாகிப் போய் சுகுமாரை நீதிபதி சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பிச்சுட்டாராம். அவன் அங்கே நல்லா திருந்திப் படிச்சு இப்போ பட்டணத்திலே எங்கேயோ வேலை பார்த்துக்கிட்டிருக்கானும். ஆனால் நம்ப தலைவி அவனைத் தன் உறவுன்னு கூடச் சொல்றதில்லையாம். – அப்படி ஒரு அவமான உணர்வு அவங்களுக்கு.''

சந்தியாவின் நெஞ்சு உற்சாகத்தில் வேகமாகத் துடித்தது. எப்பேர்ப்பட்ட தொரு ஆயுதம் அவள் கையில் இப்போ சிக்கி விட்டிருக்கு....!

இனி தலைவி அவளிடம் தாறுமாறாக நடந்து கொண்டால் ஆணியின் தலைமேல் ஓங்கிச் சுத்தியால் ஒரு போடு போடுவதைப் போல சுகுமாரின் கதையை எடுத்து முன்னால் போட்டு அலற அடித்துவிட வேண்டும்.– தன்னுள் கறுவிக் கொண்டிருந்தாள். வெகு விரைவில் அந்த வாய்ப்பும் கிட்டிவிட்டிருந்தது. ஒரு நாள் காலை தலைவி அவளை நடு வகுப்பிலிருந்து அவசரமாகத் தன் அறைக்கு வரும்படி ஆள் அனுப்பியிருந்தாள். வழக்கம் போல் அவளை நிற்க வைத்துத்தான் கால் மேல் கால் போட்டுக் கொண்டு முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு ஆரம்பித்தாள், குற்றச்சாட்டை.

''உன் வகுப்பிலே சாரதான்னு ஒரு மாணவி வைதேகி என்கிற மற்றொரு மாணவியிடமிருந்த பணத்தைத் திருடினளாம். நீ அதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லையா?''

அந்தச் சங்கதியை வகுப்புக்குள்ளேயே அடக்கிவிட அவள் முயன்றது தலைவிக்கு எப்படியோ எட்டி விட்டிருந்தது.

''தனிமையில் கூப்பிட்டு விசாரித்தேன். அந்தப் பெண் சாரதா தான் திருடியதாக ஒத்துக்கொண்டு பணத்தைத் திருப்பிக்

● மாட்டுக்கும் நதிக்கும் நேர் விரோதம். தான் வந்து சேர்ந்து கலக்க வேண்டிய இடம் வரும்போது நதியின் வேகம், சத்தம் எல்லாம் அடங்கிவிடும். ஆனால் மாடு அப்படி அல்ல. வெளியூருக்குப் போகிறபோது மெள்ளப் போனாலும் போகும்; வீட்டுக்கு வரும்போது ஒரே வேகம். நிறுத்தினால் கூட நிற்காது. அதற்கு நேர் எதிர் நதி. அபார வேகத்தோடு ஆரம்பத்தில் வரும். நாதனோடு சங்கமமாகப் போகிற இடம் நெருங்கின உடனேயே எவ்வளவு மரியாதையாக எவ்வளவு அடக்கமாக வரவேண்டுமோ அவ்வளவு அடக்கமாகச் சத்தம் எதுவும் இன்றி வேகமே இல்லாமல் மெள்ள வரும்.

–ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

மகிழ்ச்சியின் வேர் தர்மத்தில் புதைந்திருக்கிறது. –கௌடில்யர்

● விஞ்ஞானத்துக்கு வேகம், செயலாற்றல் உண்டு; ஆனால் அதற்குப் போகும் வழி தெரியாது. நாம்தான் அதை நல்வழிப்படுத்த வேண்டும். –வினோபாபவே

● பெண்களிடம் அழகும் மயக்கும் சக்தியும் இயற்கையாகவே அமைந்திருப்பதன் காரணமென்ன? அவர்களின் வலையில் ஆண்கள் சிக்கிக் கொள்ளும்படி செய்வதற்காகவே! –டால்ஸ்டாய்

பாவத்தின் கூலி மரணம். –பைபிள்




இயற்கைக் கூந்தலின்
இளமை ரகசியம்
V.V.D
தேங்காய்
எண்ணெய்
Coconut Oil
EP-VVD 1502



குழந்தைக்கு 3 மாதமாகும்போது, பால் மட்டும் போதாது

உங்கள் குழந்தைக்குத் தேவை ஃபாரெக்ஸ்

குழந்தையின் உன்னத திட உணவு

3-ஆம் மாதம்—திட உணவு துவங்கும் காலம்.

3 மாதம் ஆனபின், குழந்தையின் வளர்ச்சிக்குப் பால் மட்டும் போதாது. குழந்தை சுறுசுறுப்பாயும் விரைந்தும் வளரும் சமயம்—பாலில் கிடைப்பதை விட அதிக கலோரிகள் தேவை. குழந்தைக்கு திரவ உணவைக் குறைக்கும் வகையிலும் அதிக கலோரிகளை வழங்கவும் மென்றுத் தின்னப் பழகவும் திட உணவு தேவை.

3-ஆம் மாதம் அதிக இரும்புச் சத்து தேவை

பிறந்த 2-4 மாதங்கள்தான் குழந்தைக்குத் திட உணவு துவங்க சிறந்த சமயம். பால் நல்ல உணவாயிருப்பினும் இரும்புச் சத்துப் பற்றாக் குறையினால் அது முழுமையாவதில்லை. ஆகவே, குழந்தைக்கு இரும்புச்சத்து அடங்கிய திட உணவுத்தேவைப் படுகிறது.

—Dr. Subhash C. Arya
"Infant & Childcare for the Indian mother"

ஏன் டாக்டர்கள் ஃபாரெக்ஸ் சிபாரிசு செய்கிறார்கள்?

குழந்தைக்கு திட உணவைத் துவங்குவதற்கு தனிப்படத் தயாரிக்கப்பட்டது—ஃபாரெக்ஸ். இதில் புரதம், கார்போஹைட்ரேட், கொழுப்பு, கால்ஷியம், பாஸ்பரஸ், மற்றும் வைட்டமின்கள் உள்ளன. இரும்புச் சத்தும் அதிகமுள்ளது—ஃபாரெக்ஸ். ஆகவே, குழந்தையின் விரைந்த முழு வளர்ச்சிக்கு உன்னதமான திட உணவாகிறது—ஃபாரெக்ஸ்.

இலவசம்! குழந்தையின் முதலாண்டு புத்தகத்திற்கு, 50 பைசா தபால் தலையுடன் எழுதுங்கள்.

த.பெ. எண் 19119,
பம்பாய்-400025.(FAR-202T)





டாக்டர்கள் சிபாரிசு செய்வது ஃபாரெக்ஸ்
குழந்தையின் விரைந்த முழுவளர்ச்சிக்கு உன்னதமான திட உணவு

CASGLF-10-203 TAM

கொடுத்து விட்டாள். கண்டித்து மன்னித்து விட்டேன்.''

''இதைப் பற்றி நீ என்கிட்ட எதுவும் கேட்காம நீயே கையாண்டு காரியத்தை ரகசியமா முடிச்சுட்டே?''

''உங்க நேரத்தை வீணுக்கக் கூடாதுன்னுட்டும், அவள் என் வகுப்பு மாணவி அவளை நானே விசாரிக்க முடியும் என்கிற நம்பிக்கையிலும் செய்தேன்.''

''ஏன் திருடினுள் எதுக்காகத் திருடினுள்னு தெரிய வேண்டியது அவசியமில்லையா? ஒரு சமயம் அவள் ஒரு க்ளெப்டோமேனியா கேஸோ என்னவோ?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. அவ தம்பி காய்ச்சலாகப் படுத்திருக்காளும். வைத்தியர் எழுதிக் கொடுத்த மருந்தை வாங்க அவள் தாயால் முடியவில்லை. இப்படித்தான் அவள் தந்தை நோயாக இருந்தபோது மருந்து வாங்கித் தரக் காசில்லாது போய்—முடிவில் அவர் செத்துப் போனுராம். அந்தப் பயத்தில் சாரதா தம்பியைக் காப்பாத்தணும் என்கிற தீவிரத்தில் பக்கத்தில் உட்காரும் வைதேகி தன் புத்தகப் பையில் பதினைந்து ரூபாய் வைத்திருந்ததைக் காட்டியபோது திருடத் தோணித்தாம். தன் தாத்தா பிறந்த நாளுக்கு ஏதாவது வாங்கக் கொடுத்த அத்தனை பணத்தையும் பள்ளிக்கூடத்துக்குத் தோழிகளிடம் காட்டிப் பெருமை அடித்துக் கொள்ள வைதேகி கொண்டு வந்திருக்கக் கூடாது. தப்பு அவள் மேலும் இருக்கது.''

''இத்தனையும் கேட்டுட்டு நீ சும்மா பணத்தைத் திரும்ப வாங்கி உரியவள் கிட்டக் கொடுத்து இரண்டு பேருக்குமிடையே சமாதானம் பண்ணி வச்சியா?''

''பணத்தை வைதேகி கிட்டக் கொடுத்துட்டு சாரதாவின் தம்பிக்கு உடனடியாக மருந்து வாங்க என்னிடமிருந்து ஒரு பத்து ரூபாயைக் கொடுத்து உதவினேன். இது மாதிரி தவறு செய்யக் கூடாதுன்னு புத்தி சொன்னேன்.''

''உனக்குத் தெரிந்த டாக்டர் ஒருத்தர் இருக்காரே அவரை விட்டுச் சாரதாவின் தம்பியைக் கவனிக்கச் சொல்லி யிருக்கலாமே?''

''அவர் ஊரில் இல்லை. இருந்தால் அவரையே கேட்டுக் கொண்டிருப்பேன். ஏழை எளியவர்களுக்கு இரங்கும் ஒரு நல்ல டாக்டர் அவர்.''

''மருந்து வாங்கப் பணமில்லேன்னு திருடறது. பிறகு தம்பியைப் படிக்க வைக்கப் பணமில்லேன்னு சோரம் போறது... இவைகளை நீ ஆதரிக்கிறுயா?''

''தவறுகளை நான் ஒருகாலும் நியாயப் படுத்த மாட்டேன். — ஒரு சிறு குழந்தை அதிகமான அன்பால் செய்த ஒரு தவறு உணர்ந்து மன்னிப்புக் கேட்டாள். அவளை உடனே மன்னித்து அந்த வழியில் போவது தவறு என்பதை அன்புடன் வற்புறுத்தினேன். அவள் இனி அந்த மாதிரி காரியம் செய்ய மாட்டாள் என்பது என் நம்பிக்கை. தன் சகோதரனைப் படிக்க வைக்க ஒரு பெண் தன் பெண்மையை அடகு வைக்கிறுள் என்ருல் அதை நான் நியாயம் — தியாகம் என்று ஒப்புக்க மாட்டேன்.''

''நீ பெரிய சீர்திருத்தவாதின்னு எண்ணம் இல்லையா?''

''நான் சீர்திருத்தவாதியில்லை. — சீர்திருத்தும் பள்ளிகள் பற்றியும் அறிந்தவள் இல்லை.''

விருக்கென்று தலைவி கோபத்துடன் நிமிர்ந்து பார்த்தாள்.

''உங்க தங்கை பிள்ளை சுகுமாரிடம் நீங்க கண்டிப்பாகவும் கடுமையாகவும் நடந்து கொள்ளாதிருந்திருந்தால் பாவம் அவன் ஏன் சீர்திருத்தப் பள்ளியில் போய்ச் சேருகிறுன்? ஆசிரியை என்பவள் ஒரு வகையில் மாணவிகளுக்கு ஒரு தாய்க்குச் சமமானவள். ஒவ்வொரு தாயும் தன் குழந்தையைக் கருத்தோடு வளர்க்க ஆசைப்படுவது போல ஒவ்வொரு ஆசிரியையும் தன் மாணவிகளை ஒழுக்கமுள்ளவர்களாக உருவாக்க ஆசைப் படணும்.

''உன் மேலே ஆயிரம் குற்றம் இருக்கு. அதை மறந்து துணிச்சலாப் பேசறே?''


''நான் ஒருவரை விரும்புவது குற்றம் என்ருல்... வளர்க்கத் தெரியாம ஒரு சிறுவனை அநியாயமாகச் சீர்திருத்தப்பள்ளிக்குஅனுப்பி விட்ட நீங்க செய்திருப்பது பெரிய குற்றம். ஆகமொத்தம் தவறு செய்யாதவர்களே ஒருத்தரும் உலகில் கிடையாது. வீட்டுக்கு வீடு வாசப்படின்னு சொல்லுவாங்க.''

''ஷட்-அப்... அண்ட் கெட் அவுட்''— தலைவி சீறினுள்.

வெளியே வந்த சந்தியா தன்னுள் கோபத்துடன் சிரித்துக் கொண்டாள். மொட்டைக் கடிதம் எழுதிய அத்தானை அன்று மாலை அவள் அலற அடித்து விட்டாள். அதைப் பற்றிக் கேட்டு அவமானப்படுத்திய தலைவியை இன்று நன்ருக மட்டம் தட்டிவிட்டாள். அடுத்தது கிரிதரன்!

ஆமாம்.... இப்படி அவளை வம்பில் மாட்டிவிட்டு ஊருக்குப் போய் மறைந்து கொண்டிருக்கும் அவரை.... கோபத்துடன் தன்னுள் மீண்டும் சிரித்துக் கொண்டாள்.

(தொடரும்)



பொன்மொழிகள்

உலகில் அடக்கமுடியாத சர்வாதிகாரி அலட்சியம். —ஜே. பி. சென்

விதை ஒரு புதுவாழ்வில் மறைந்து விடுகிறது. அதுபோலத்தான் மனிதனும். —ஜீ. மாக்டொனல்டு

எங்கு போனுலும் சரி, உன் முழு இதயத்தோடு போ. —கன்பூசியஸ்

—கனியூர் பருக்



திரைஞானி : சினிமா சினிமா



உ

அகர வரிசைப் பேட்டி: விஜயகாந்த்

உடன் பிறப்பு

என் தந்தைக்கு இரண்டு தாரம். அந்த வகையில் உடன் பிறப்புக்கள் பத்துப் பேர். எனக்கு உடன் பிறவாச் சகோதரர்கள் இப்ராஹிம், போஸ், ராதா, பேபி, செல்வராஜ் என ஐந்து பேர். இவர்களுள் இப்ராஹிம் என்னுடன் படித்தவர். இப்போதும் என்னுடனேயே என் அறையில் தங்கி எனக்கு உதவியாக உள்ளார். நாங்கள் மதத்தால் வேறுபட்டாலும் மனத்தால் ஒன்று பட்டவர்கள்.

உற்சாகம்

சரித்திர நாவல்களைப் படிப்பதில் எனக்கு உற்சாகம் அதிகம். 'கல்கி' எழுதிய 'பொன்னியின் செல்வன்' நாவலை சுமார் 15தடவை படித்திருப்பேன். அதில் வரும் வந்தியத் தேவன் வேடத்தை ஏற்று நடிக்க ஆசை.

உயிர்

பதினெட்டு வயது வரை உயிர் பற்றிய கவலை இருந்தது. இப்போது அந்தக் கவலை இல்லை. சண்டைக் காட்சிகளில் நான் நடிப்பதைப் பார்ப்பவர்கள் பயமுறுத்துவார்கள். நான் லட்சியம் செய்யாமல் மேலே இருந்து குதிப்பேன்.

உண்ணாவிரதம்

தேவகோட்டை டிஸ்ட்ரிக்ட் போர்டு ஹைஸ்கூலில் ஏழாவது படிக்கும்போது இந்திப் போராட்டத்தில் கலந்துகொண்டு ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்திருக்கிறேன். ஒரு நண்பரின் அறிவுரைப்படி—என் சாஸ்திரப்படி—மாதத்துக்கு மூன்று நாள் உண்ணாவிரதம் இருந்து வருகிறேன்.

உதாரணம்

என் நடிப்புக்கு நான் உதாரணமாக—மானசிகக் குருவாக ஏற்றுக்கொண்டிருப்பவர் எம். ஜி. ஆர். சண்டைக் காட்சிகளில் நடிக்கும்போது அவரை நினைத்துக் கொண்டே நடிப்பேன்.

உடை

ஜரிகைக் கரை வேஷ்டி, சில்க் சர்ட் அணிவதுதான் எனக்குப் பிடிக்கும். பச்சையும் வெள்ளையும் பிடித்த கலர்கள். என்றாலும் பெரும்பான்மையான படங்களில் பழைய துணியே எனக்கு உடையாகத் தருகிறார்கள். விலை உயர்ந்த ஆடைகள் எனக்கு அமைந்தது 'பார்வையின் மறு பக்கம்' படத்தில்தான். அடுத்தபடியாக 'சட்டம் சிரிக்கிறது' படத்தில்.

உபகாரம்

எனக்கு சினிமாவில் நடிக்க டைரக்டர் காஜாவிடம் சிபாரிசு செய்து உபகாரம் செய்தவர் பெயர் சேனுஸ். பிரபல விநியோகஸ்தர் இவர்.

உடலமைப்பு

உடலை வைத்துத்தான் கவர்ச்சி. என் உடம்பை மேலும் பருக்காமல் பார்த்துக் கொள்ள தினசரி அதிகாலையில் கடற் கரையில் ஓடுகிறேன். சினிமாவில் நடிக்க வருவதற்கு முன்பு என் எடை 70 கிலோ இருந்தது. தற்சமயம் கொஞ்சம் கூடியிருக்கலாம்.

உண்மை

ஒரு தயாரிப்பாளர் வந்து என்னிடம் கதை சொன்னார். எனக்குப் பிடிக்கவில்லை என்கிற உண்மையைச் சொன்னேன். அவர் கோபித்துக்கொண்டு போய் வேறொருவரை வைத்துப் படம் எடுத்து வெளியிட்டுவிட்டார். அதனால் வியாபார ரீதியாகக் கொஞ்சம் பொய் பேச வேண்டியிருக்கிறது என்கிற உண்மையை இங்கே சொல்லிக் கொள்கிறேன்.

சினிமா



(நாஞ்சில் கி. மனோகரன் படம் பார்த்து விட்டு டெலிபோனில் தமது கருத்தைக் கூறினார்.)

● படத்தைப் பார்த்தேன். நாட்டு நடப்புகளை நல்லபடியாக எடுத்துரைக்கும் படம்.

'பராசக்தி'க்குப் பிறகு வேகமாகச் சிந்தனையைத் தூண்டி, உள்ளக் கிளர்ச்சிகளை எழுப்பி, கலைஞருக்கே உரிய வசனங்கள் அதிலே மின்னுவதைக் கேட்டேன்; பரவசமடைந்தேன்.

கதாநாயகனாக வரும் சந்திரசேகர் கலைஞரின் வசனங்களை அற்புதமாகப் பேசி உணர்ச்சி பொங்க நடித்திருக்கிறார். குறிப்பாக பகவத் சிங் வேடத்தில் தோன்றி நடிக்கும்போது வீர வசனங்களைத் தொய்வின்றிப் பேசியிருக்கிறார்.

அதே மாதிரி சக்கரவர்த்தியும் ரொம்ப அருமையாய்ப் பேசி சினிமாக் கொட்டகையில் படம் பார்ப்பவர்கள் கரவொலி எழுப்பக் காரணமாகிறார். பல சந்தர்ப்பங்களில் கலைஞரின் வசனங்களைப் பேசி நடித்த சிவாஜி கணேசனை நினைவுபடுத்துகிறார்.

மேனகாவும் இதர நடிகர்களும் சிறப்பாக நடித்திருக்கிறார்கள்.

கோயிலில் கற்பழிப்பது, உண்டியல் திருடுவது, மகாத்மா காந்தி படத்திற்குப் பின்னால் சாராயப் பாட்டிலை ஒளித்து வைப்பது போன்ற சமூக விரோதச் செயல்களைக் காட்டி அதைக் கண்டித்திருக்கும் நயம் அருமை.

கலைஞர் வசனங்களைப் போலவே அவர் எழுதிய "கோல் உயரக் குடி உயரும்" எனத் துவங்கும் பாடல் ஒன்றும் நல்ல கருத்துடன் படத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அப்பாட்டிற்கு ஏற்ப சந்திரசேகர் நடிக்கும் நடிப்பும் என்னைக் கவர்ந்தது.

பாரதியார் பாடல் ஒன்றைத்தக்க சந்தர்ப்பத்தில் மிகப் பொருத்தமாகப் படத்திற்குப் பயன்படுத்திக் கொண்டிருப்பது பாராட்டுக்குரியது.

ஒளிப் பதிவு தரமாகவே உள்ளது.

'தூக்கு மேடை' தமிழகமெங்கும் வலம் வந்து சிந்தனையைக் கிளறி ஒரு புதிய எழுச்சியை உண்டு பண்ணும் என்கிற வகையிலே அமைந்துள்ளது.

கலைஞருக்கு என் பாராட்டுக்கள்.

→



சினிமா சினிமா

(சட்டமன்ற மேலவை அரசுக் கொறடா டாக்டர் இரா. சனார்த்தனம் எழுதித் தந்தார்.)

● அன்று பராசக்தி — இன்று தூக்கு மேடை என்று விளம்பரப்படுத்தப்பட்ட படம். ஆம்! ஒருவேளை பராசக்தி வந்தபோதே வந்திருக்க வேண்டிய படமோ? 1982லிருந்து 1952ஆம் ஆண்டைத் திரும்பிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

படங்களுக்கு 'ஏ' முத்திரை மட்டும் போதாது? (அ) அரசியல் என்ற முத்திரையோடு 'தி.மு.கழகத்தினர் பார்வைக்கு மட்டும்' என்று குறிப்பிடப்பட்டிருந்தால் குறை சொல்ல என்ன இருக்கிறது?

கருத்துக்களைப் புகுத்தக் கலைத் துறையைப் பயன்படுத்தக் கூடாதா? ஏன் கூடாது? 'வேலைக்காரி, ஓர் இரவு, சொர்க்க வாசல்' ஆகிய அண்ணாவின் படைப்புக்களில் பார்க்காததா!

ஆனால் கலையில் பிரசாரம் என்பது பாலில் கலந்த தேனாகவும், தேனில் கலந்த தினை மாவாகவும், கொம்புத்தேனில் ஊறிய பலாச்சுளையாகவும் இருக்க வேண்டும். இந்தப் படத்தில் அப்படி இருக்கிறதா!

காளி கோயில் கொள்கை முழக்கம், நீதி மன்றத்தில் நீண்ட வசனம், பாசறையில் பகுத்தறிவுப் புரட்சி விளக்கம், கல்லூரி மேடையில் பேச்சுப் போட்டி. இவையெல்லாம் கலை நயத்துடன் உள்ளனவா!

செய்தித் தாளில் கொலையாளி எனப் படத்துடன் வந்திருப்பதைக் கண்டு வீதியில் போட்டால் மற்றவர்கள் பார்ப்பார்களே என்று எண்ணாது பெண்ணுடன் பயணமாகும் கதாநாயகன், பார் புகழும் காந்தி படத்திற்குப் பின் பீர் பாட்டில் வைத்து யார் வைத்தது•என்ற விளக்கம், ஆலை முதலாளியின் பணத்தைத் துப்பாக்கி முனையில் பறித்து, தொழிலாளிகளுக்கு வழங்கும் வீராங்கனை — இப்படி படத்தின் குழப்பங்கள்- இல்லை, தவறான விளக்கங்கள் பல. யார் பொறுப்பாளி என்ற ஆராய்ச்சி நமக்குத் தேவையில்லை.

பிடித்தது, பகவத்சிங் வரலாற்றைச் சொல்லிய விதம்—

முதலில்தான் திருச்செந்தூர் செய்திப்படம் என்றால் — முழுப் படமுமே செய்திப் படமாக இருக்கும்போது கதை—காட்சி, உணர்ச்சியான சந்திரசேகரன் நடிப்பு — இவற்றைப் பற்றி என்ன சொல்ல — மேடையை விட்டுப் படத்தைத் தூக்கு என்ற சலிப்பு பொது மக்களுக்கு வந்துவிடுகிறது.

பூந்தொட்டி...

● படப் பிடிப்பு நடக்கும் நேரத்தில் கலைஞர்கள் யாரேனும் காமெரா மூலமாகப் பார்த்தால் உடனே அபராதம் ரூபாய் நூறு கட்டவேண்டும். இந்தப்பணத்தை லைட்பாய் காமராமேன் மற்றுமுள்ளவர்கள் பங்கு போட்டு எடுத்துக்கொள்ள வேண்டும். இது இன்றும் ஸ்டூடியோக்களில் இருந்து வரும் பழக்கம்.

எம். ஜி. ஆர். நடிக்கும்போது அவர் காமெரா மூலமாகப் பார்த்துவிட்டுத் தாமே ரூபாய் 1001 கொடுத்து விடுவாராம்.

-கலாமூர்த்தி

● பத்மினி மீண்டும் சினிமாவில் நடிக்கப் போகிறாராம். ஜேப்பியாரின் ''உன்னை விட மாட்டேன்'' படத்தில் விஜயகாந்தின் தாயாராக.

● ''பெங்களூரில் உள்ள சந்தோஷ் தியேட்டர் பக்கம் போகிறவர்களின் கழுத்துச் சுளுக்கிக்கொள்ளும்'' என்கிறார் அண்மையில் அங்கு சென்று வந்த ரஜனிகாந்த் ரசிக மன்றத்தைச் சேர்ந்த டைலர் குமார்.

ராஜ்குமாரின் உருவத்தை 200 அடி உயரத்துக்குக் கட் அவுட் செய்து வைத்திருக்கிறார்களாம். ''பெங்களூரில் இவ்வளவு பெரிய கட் அவுட் யாருக்குமே அமைத்த தில்லை'' என்கிறார் அவர்.

● எஸ். வி. சேகரைப் பற்றிய ஒரு செண்டிமெண்ட். இவர் நடிக்கும் படங்கள் எல்லாம் நூறு நாட்கள் ஓடிவிடுகின்றன.

உதாரணம்: வறுமையின் நிறம் சிவப்பு, குடும்பம் ஒரு கதம்பம், பயணங்கள் முடிவதில்லை.

சிம்லா ஸ்பெஷல், மணல் கயிறு படங்கள் நூறு நாள் ஓடும் என எதிர்பார்க்கப்படுகிறது.


விதிவிலக்கு: கனவு.

● பி. எஸ். வீரப்பா புதிதாகத் தயாரிக்கும் 'மாதுளை முத்துக்கள்' படத்தில் கதாநாயகியாக நடிக்கும் புது . முகம் மனோ சித்ரா ஏற்கனவே 'சின்னஞ் சிறு கிளியே' படத்தில் வேப்பிலைக் கொத்தைக் கையில் ஏந்தி இவ்வாறு நடித்துள்ளார்!



'கதலிகர்ணம்'

நமது விஞ்ஞானமே!



● திரு கோவி. மணிசேகரன் அவர்கள் கடிதம் கண்டதும் வியப்பேற்பட்டது. தன் ஊகத்தையே தக்க ஆதாரம் இன்றி இன்னும் சாதிக்கவும் ஸ்தாபிக்கவும் முயல்வது கண்டு வேதனையுற்றேன்.

கதலி கர்ணம் சிற்ப நூலியலைச் சேர்ந்தது. கதலியாகிய வாழைக் குலையைத் தூக்கிப் பிடித்துப் பாருங்கள். விமானம் அதன் அமைவு.

● This mature and truly Chola design was ultimately born from the seventies of the 10th C.A.D.

● It was only during Rajaraja's time that the effort climaxed into the architecturally individualistic Chola model, well and truly established.

● Rajaraja initiated his grandest ever temple - the Brahadisvara

(ஆலயக் கலை வரலாற்றில் தொல்பொருள் ஆய்வால் பிரபல அறிஞர் திரு. கே. வி. சௌந்தரராஜனின் "Tamilnadu & Kerala")

ராஜேந்திரனின் கங்கை கொண்ட சோழீச்சரம் — கங்கை கொண்ட சோழபுரம், 2வது ராஜராஜனின் ஐராவதேஸ்வரம் — தாராசுரம், சாயாவனேஸ்வரம் — திருச்சாய்க்காடு, குலோத்துங்கனின் கடம்பஹரேஸ்வரம் — திருபுவனம் ஈதெல்லாமும் தஞ்சைப் பாணியனவே.

தஞ்சையில் உள்ளது அனைய ஒரு கருங்கல் சீன உருவம் மதுரைக் கோயிலில் உண்டு. இதனால் அக்கோயிலை அவனே நிர்மாணித்ததாக எண்ணலாமா?

மதுரைத் தென் கோபுரம் தனிப்பாணி. அதுபோல் வேறு காண்பது அரிது. அதனாலேயே அது அயல் நாட்டு நிர்மாணம் என்னலாமா?

கதையில் சீனனே நிர்மாணித்தது என்றார். கடிதத்தில் பொதுவாக ஒரு வெளி நாட்டு விஞ்ஞானப் பாதிப்பு, குறிப்பாக சீனத் தொடர்பில் மட்டுமே பாதிப்பு என்கிறார்.

தஞ்சையது சீனத் தொடர்பு மட்டுமே எனினும் அக்கதாபாத்திரம் ராஜராஜனை அடையுமுன்பே சீனாவில் சிறப்பாய் வாழ்ந்த போது உருவாக்கிய தஞ்சை விமானம் போன்ற ஏதும் இருக்க வேண்டுமே, சீனாவில். அது பற்றிக் கதாசிரியர் தெரிவித்தால் நலம்.

விசேஷித்த அறிவைப் பெற்று வித்தை புரியும்போது விஞ்ஞானம் விளைகிறது: அத்தகைய விஞ்ஞானிகள் இன்று மட்டுமல்ல தமிழகத்தில் அன்றும் இருந்திருக்கிறார்கள்.

திருப்பதி ஜி. கே. மணி ஸ்தபதி

● டாக்டர் கோவி. மணிசேகரன் அவர்கள் எழுதிய (25-4-82 இதழ்) 'பழந் தீவு பன்னீராயிரம்' கதையை யொட்டி திருப்பதி ஸ்தபதி திரு ஜி. கே. மணி அவர்கள் அளித்த விளக்கத்தையும் (கல்கி 9—5—82) அவருக்கு மறுப்பளித்த டாக்டர் கோ. வி. மணிசேகரன் அவர்களுடைய கடிதத்தையும் (23-5-82) கண்டேன்.

தஞ்சைப் பெரிய கோயிலை உருவாக்கியவர்கள் 'கல்தச்சன் வீரசோழன் குஞ்சர மல்லனை இராஜராஜப் பெருந்தச்சனும்' அவன் உதவியாளர்கள் 'நித்த விநோதப் பெருந்தச்சன், கண்டராதித்தப் பெருந்தச்சன் ஆகியோரும் ஆவர் என்பது வரலாறு கூறும் உண்மை.

நம் முன்னோர் ஆகம விதிகளின் அடிப்படையில் கோயில் விமான வடிவமைப்புக்களை இருபது வகையாக வகுத்துள்ளனர். அதில் 'மேரு' என்னும் விமான வடிவமைப்பு தஞ்சை பெரிய கோயிலை அணி செய்கிறது. எனவே தான் தஞ்சைப் பெரிய கோயில் 'தட்சிண மேரு' என்று போற்றப்படுகிறது. Percy Brown என்ற புகழ் பெற்ற கட்டடக் கலை நிபுணர் தன்னுடைய Indian Architecture என்ற நூலில் 'திராவிடக் கலைஞரின் ஒப்புயர்வற்ற நேர்த்திமிகு கலைப் படைப்பு இவ்விமானம்... இந்தியக் கட்டடக் கலை முழுமைக்கும் தஞ்சைப் பெரிய கோயில் விமானம் ஓர் உறைகல்லாக ஒளிர்கிறது' என்று சான்று கூறியுள்ளார்.

இராஜராஜன் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 985 — கி.பி. 1014) சீனாவை ஆண்ட வம்சம் டாக்டர் கோவி. மணிசேகரன் கூறுவதுபோல 'தாங்' (Tang) வம்சமல்ல. சீனாவைக் கொடுங்கோலர்களான 'தாங்' வம்சம் ஆண்டது கி.பி. 618 முதல் கி.பி. 960 வரைதான். கி.பி. 960லிருந்து கி.பி. 1279 வரை சீனாவை ஆண்டது 'சுங்' (Sung) வம்சம்.

இறுதியாக ஒரு வார்த்தை. 'நான் வெறி பிடித்த தமிழன்' என்று மார்தட்டிக்கொள்ளும் டாக்டர் கோவி. மணிசேகரன் தமிழனுக்கு விஞ்ஞான அறிவு இருந்ததில்லை என்று கூறியுள்ளார்.

தமிழனின் அறிவியல் அறிவுக்குச் சான்று வேண்டுமானால் 'கல்லணை'யைச் சென்று காணட்டும்.

பொன்னேரி கோ. திருமா வளவன்
துணைப் பேராசிரியர், வரலாறு



கிராக்கி

30–5–82 இதழ் 'நீங்கள் கேட்டவை' பகுதியில், ''அடுத்து 'தாண்டிக் குதி' என்ற தலைப்பில் கிராக்கியிடமிருந்து கட்டுரை எதிர்பார்க்கலாம்!'' என்று 'தராசு' குறிப்பிட்டிருந்ததைச் சிறந்த நகைச்சுவையாளரான **கி. ராதாகிருஷ்ணன்** அதே உணர்வுடன் ஏற்று எழுதி அனுப்பியிருக்கிறார். தமது பெயரிலிருந்தே சில எழுத்துக்களைப் பொறுக்கி ''கிராக்கி'' என்று ஹாஸ்ய மாகப் புனைப் பெயர் சூடிக்கொண்ட இவர், பிரபல பத்திரிகைகள் பல வற்றில் கட்டுரைகள் எழுதியுள்ள போதிலும் 1980 நவம்பரில் முதன் முதலாக ''மீசையோ மீசை'' என்ற தமது கட்டுரையைப் பிரசுரித்தது ''கல்கி'' பத்திரிகையே எனக் கூறி மகிழ்கிறார்.

'நிறம் மாறும் மனிதர்கள்' என்ற தலைப்பில் நாவல் எழுதத் தொடங்கிப் பதினேழு அத்தியாயங்களை முடித்துள்ளேன்... பத்து நாட்களில் மொத்தம் 25 அத்தியாயங்கள் எழுத இருக்கிறேன்.'' என்று அவர் கூறும் போது படைப்பிலக்கியஆர்வம் அவர் வார்த்தைகளில் எதிரொலிக்கிறது.

1952ம் ஆண்டு காவல்துறையில் நுழைந்து இன்று அத்துறைக்கே தலைவராகும் வரை (டைரக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ்) இவர் வகித்த பதவிகள் பல. பல்லவன் போக்குவரத்துக் கழகத்துக்குத் தலைவராக இருந்த போது இக்கழக மேம்பாட்டிற்காக உலக வங்கியின் உதவியைப் பெற்று வந்தவர்.

காவல் துறை என்றாலே கம்பிகளைப் பற்றி எண்ணாமல், 'கண்ணியம் மிக்க நண்பன்' என்ற எண்ணத்தை மக்கள் மனங்களில் வேரூன்றச் செய்வதும், விரைவில் அறிமுகப் படுத்தப்படவிருக்கும் நடமாடும் காவல் நிலையங்களின்' துணையோடு குற்றங்களைக் குறைப்பதுவும் – தமது இலட்சியம் என்கிறார் டி. ஜி. பி.

பேட்டி, படம்: எம். ஏ. எஸ்





தாண்டிக்குதி!

சீதை 'அசோக' வனத்தில் சோகமே உருவாக அரக்கிகள் புடைசூழ அமர்ந்திருந்தாள். கீழ் வானத்தை எட்டிப் பிடித்துப் படர்ந்து கிடக்கும் கடலைக் கண்டு இக்கரையிலே நின்று என் செய்வது என்று தெரியாமல் சிலையாகி இருந்தான் அனுமன். ஜாம்பவான் போன்றவர் மாருதியிடம் உள்ளடங்கியிருக்கும் சக்தியைநினைவூட்டியவுடன் விஸ்வரூபம்எடுத்துக் கடலை ஒரே மூச்சில் தாண்டிக் குதித்தான் அசோக வனத்தில். கண்டான் சீதையை.

தாண்டிக் குதித்தல் ஆரம்ப காலத்தில் சிவபெருமானால் தாண்டவ நடனம் மூலம் மனித குலத்துக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. பிறகு இது ஒரு கலையாக நடன மேடையையும், களியாட்டமாக விளையாட்டு அரங்கங்களையும் பிடித்தது.

விளையாட்டு அரங்கில் தாண்டிக் குதித்தல் பலவகைப்படும். ஓடிவந்து காலை ஊன்றித் தாண்டுவதற்குதாண்டி, அடிவைத்துகுதித்தல் (Hop step and jump)என்று பெயர். ஓடிவந்து ஒரேயடியாகத் தாண்டிக் குதிப்பதற்கு லாங் அல்லது ப்ராட் ஜம்ப் என்று கூறுவர். உயரம் தாண்டுவதற்கு ஊன்றுகோல் தேவையில்லை. அதி உயரத் தாண்டுதலுக்கு (போல் வால்ட்) ஊன்றுகோல் இல்லாவிட்டால் குறுக்கே இருக்கும் கோலுக்கடியில் திறந்து கிடக்கும் வாயில் வழியாகத்தான் போக முடியும்!

பல்லாங்குழி விளையாடும்போது குழிகளைத் தாண்டிவிளையாடுவதுண்டு. சோழிகளைவழுக்கி எடுத்து ஆடுவதற்குத் திறன் தேவை. சோழியன் குடுமி ஆடுவது வேறு விஷயம். இதோடு குழப்பிக் கொள்ள வேண்டாம்.!

பாண்டி விளையாட்டில் தாண்டிக் குதித்து ஆடவேண்டும். ஏரோப்ளேன் பாண்டி என்று ஒன்று உண்டு. ஏரோப்ளேன் வடிவில் கட்டம் தரையில் போட்டு விளையாடுபவர்கள் ஒரு சில்லைப் போட்டுத் தாண்டிக் குதித்து விளையாடுவார்கள். எல்லாக் கட்டங்களையும் முடிப்பவர் முன்னேறி நின்று பின்புறமாக சில்லைக் கட்டத்துக்குள் விழும்படி பார்க்காமல் எறிய வேண்டும். சில்லு விழும் கட்டம் அவர் அடைந்த பழம். மற்றவர் அதில் கால் வைக்காமல் தாண்டிக் குதித்து ஆட வேண்டும். முடியாவிட்டால் மூலையில் ஒரு 'யானைக் கால்' வரையப்பட்டுக் கால் ஊன்றுவதற்கு அனுமதி பெறலாம்.

யானைக்கால் என்றதும் விலங்குகள் ஞாபகம் வருகிறது. நெருப்புக் கோழி, ஒட்டைச் சிவிங்கி இவைகள் அகலக் கால் வைத்துத் தாண்டிக் குதிக்கக் கூடியவை. கங்காரு தன் குட்டியை மடியில் கட்டிக்கொண்டு தாண்டிக் குதிப்பதில் கை தேர்ந்தது. தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயுமாம்! இம்மாதிரித் தாண்டிக் குதிக்க கங்காரு, வேங்கைப் புலி மட்டும்தான் என்றில்லை.

கிளைக்குக் கிளை தாண்டுகிறதே இது என்ன தாண்டுதல் கூற்று என்று தோன்றுகிறதா? கோபுரத்தை எட்டிப் பிடிப்பதற்காக அல்ல இது. 'நீங்கள் கேட்டவை' என்று கூறி 'தாண்டிக் குதி' என்ற ஒரு கட்டுரையைச் சூசகமாக என்னிடமிருந்து வரவழைக்க 'தராசு' செய்த கூற்று. கிராக்கி செய்து கொள்ள எப்படி மனம் வரும்? பிரசுரித்து வெளி வந்தால் கல்கியின் சலுகை.



நான் ஒரு ராட்சசன்!

தாளிப்பு: கடுகு

உண்மையிலேயே நான் ரொம்ப சாதுவான ஆசாமி. குழந்தைகளைகண்டால் எனக்கு அபார ஆசை. நேருவிற்கு அடுத்தபடி குழந்தைகளை நேசிப்பவன் நான். 'சாச்சா கடுகு' என்று குழந்தைகளால் குறிப்பிடப்படுவதை விரும்புகிறவன். இப்படியிருந்தும் என் தெருவில் இருக்கும் எல்லாக் குழந்தைகளுக்கும் நான் ராட்சசன், பூதம், பூச்சாண்டி, 'ரெண்டு கண்ணன்' 'கோபக்கார மாமா' என்று ஆகிவிட்டேன். மன்னிக்கவும். ஆக்கப்பட்டுவிட்டேன்.

நான் ராட்சசன் எக்செட்ரா ஆன கதை இதுதான்:

என் குழந்தை ஏதாவது பிடிவாதம் பிடித்தான் என்றால் உடனே என் மனைவி, "இருஇரு சாயங்காலம் அப்பா ஆபீசிலிருந்து வரட்டும். தோலை உரிக்கச் சொல்கிறேன்" என்பாள். அல்லது "போனால் போகிறது என்று பார்க்கிறேன். அப்பாவிடம் சொன்னால் எலும்பை முறிப்பார்" என்பாள். அல்லது "நல்லபடியா கொஞ்சி ஆசையா நான் சொன்னால் கேட்க மாட்டாய். அப்பா, விறகுக் கட்டையால் முதுகில் ரத்தம் வருகிற மாதிரி அடித்தால் தான் உனக்குச் சரி" என்பாள்.

இப்படி யெல்லாம் சொல்லி என்னை ஒரு கொடுங்கோலனாக, ராட்சசனாக, நரசிம்மாவதாரமாக, பயங்கர மனிதனாக ஆக்கிவிட்டாள்!

இவள் செய்த கைங்கரியத்துடன் அக்கம் பக்கத்து மாமிகளின் கைங்கரியமும் சேர்ந்து என் இமேஜைப் பயங்கரமாக்கிவிட்டது.

"ஸ்லேட் பலகையை உடைச்சிண்டு வந்து நிக்கறே. எதிர் வீட்டு மாமா கிட்டே சொல்றேன். மரத்திலே தலை கீழாத் தொங்க விடுவார்" என்று ஒரு மாமியும் —

"பக்கத்து வீட்டு மாமா வரார். சத்தம் போடாமல் பாலைக் குடிச்சுடு. அவர் வந்தால் கன்னம் சிவந்து போகும்படி அடிப்பார்" என்று இன்னொரு மாமியும்—

"ஏண்டா வானரங்களா, வீட்டுக்குள்ளே என்னடா கிரிக்கெட். மூன்றும் வீட்டு மாமாவைக் கூப்பிடட்டுமா... கையை ஒடிச்சுக் கழுத்திலே மாட்டுவார்' என்று வேறொரு மாமியும்—

"உங்களைத்தான் மாமா... எங்காத்து லட்சுமி ரொம்பப் படுத்தறா... கோணியிலே மூட்டை கட்டிண்டு எடுத்துண்டு போங்கோ" என்று பிறிதொரு மாமியும்—

"இதோ பாருங்கோ... என் பையன் பத்திக்குக் கணக்கே வரலை... உங்க கிட்டே அனுப்பறேன். ரெண்டு நாள் சொல்லிக் கொடுங்கோ. சரியாப் போடலைன்னா முட்டி உடையற மாதிரி ரூலர் கட்டையாலே அடியுங்கோ' — என்று வேறொரு தம்பதியினரும்— கூறி என்னை ஒரு 'குழந்தைகள் கண்ட கொடுங்கோலன்'ஆக ஆக்கிவிட்டனர்.

என் மனைவி சில சமயம் என்னை நாயாகக் குரைக்கச் சொல்லி, குழந்தைக்குப் பயத்தை ஏற்படுத்திச் சாதத்தை ஊட்டுவாள். "நீ சமத்தாய் சாப்பிடா விட்டால் கறுப்பு நாய் வந்து கடிக்கும்" என்று சொல்லிவிட்டு கண்ணால் எனக்குச் சமிக்ஞை காட்டுவாள்.

> மனைவி: "காசிக்குப்போறேன்... காசிக்குப் போறேன் என்று சொல்கிறீர்களே! அங்கே போய் எதை விட்டுவிட்டு வருவீர்கள்?"
>
> கணவன்: "உன் அம்மாவுடன் தானே போகப் போகிறேன்."
>
> -எஸ். மாரியப்பன்

அடுத்த அறையிலிருந்துகொண்டு நாய்மாதிரி —அதுவும் கறுப்பு நாய் மாதிரி நான் குரைக்க வேண்டும்! இதனால் என் குழந்தைக்கு என்னைக் கண்டாலே குலை நடுக்கம் ஏற்பட்டுவிட்டது. ஆனால் நாயைக் கண்டால் பயமே இல்லாது போய்விட்டது!

அடுத்து, — தொடர நேரமில்லை.

அதோ கமலா சமிக்ஞை செய்கிறாள்... ளொள்.... ளொள்.... ளொள்....!


Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543)
Assistant Editor: P.S. Mani   Layout Artist: Nambi   Editor: K. Rajendran

பாரதி போற்றிய புதுமைப்பெண் யுகத்திற்கு நீல்கன் ஏஜன்ஸீஸின் நவீன காணிக்கை :

ஜானி®

தானியங்கி வெட்கிரைண்டர்

ஆட்டோமேட்டிக்
சாதாரண மின் இயங்கிக்
கல்லுரல்களை "கற்காலக்
கருவிகளாக்"ப் பின்னடையச்
செய்யும் பொறியியல்
படைப்பு



இடுப்பொடிக்கும் வீட்டு வேலைகளிலிருந்து புதுமைப் பெண்ணினத்துக்கு சுதந்திரம் அளிப்பதில் துணை நிற்பது ஜானி வெட் கிரைண்டர். மிக நவீன பொறியியல் டிசைன். நீண்ட நேரம் அரைக்கும் சக்திமிக்க மோட்டார். ஊரவைத்த தானியங்களை நிமிடங்களிலே அரைத்து மாவாக்குகிறது. கைபடத் தேவையில்லை. சுத்தமான மாவுவெளியில் தானுக் விழும் அமைப்பு.

ஐந்தாவது இடியல் ஹோம் கண்காட்சியில் நவீனத் தயாரிப்புகளுக்கான வெள்ளிப் பதக்கம் பரிசாகப் பெற்றது ஜானி ஆட்டோமோடிக் வெட் கிரைண்டர்

ஒரு வருட
உத்திரவாதம்



ஜானி®

இல்லத்தரசிகளின்
சுதந்திரப்புரட்சிக்கு
உங்கள் மனையாளின்
சிறப்பான பணியாள்
ஜானிவெட்
கிரைண்டர்

ஜானி நிகரற்ற ஓர்
உன்னத படைப்பு
ஜானி மற்ற, நவீன
வெட் கிரைண்டர்
களுக்கு ஒரு
முன்னோடிப் படைப்பு

Design Patented

Available
in two sizes
1 litre & 2 litres

Manufactured by

Neilgan Agencies,
No. 3, Third Lane,
North Boag Road,
T. Nagar,
Madras-600 017
Ph : 440715

UIPC:NA:306

Stockists all over South India

REGISTERED No. M. 4393
Registered as a Newspaper in Sri Lanka